Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

தினமுரசு වාරමලර්

டிசம்பர் 06 - 12, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 991






## சூனியமாகும் எதிர்காலமும்!

## கொம்பு சீவும் புத்திஜீவித்தனமும்

## டிசம்பர்-21 மாயன் கலண்டர் காட்டும் மாயை



## நீதிமன்றம் VS பாராளுமன்றம்

## பார்வையாளர்களாக மக்கள்

## உழவாரத் தொண்டு

இவ்வுலகில் சைவசமயிகளாக வாழும் ஒவ்வொருவரும் இறைவனுக்குத் திருத்தொண்டு புரிவதோடு மட்டும் நின்று விடாது தங்களால் இயன்ற அளவு, தம் சரீரத்தின் சக்திக்கேற்ற அளவு சமூகப் பணிகளிலும் ஈடுபடுதல் சாலச்சிறந்ததென சான்றோர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

இந்து சமயத்தின் ஆணிவேரோ அன்பெனும் உணர்வு விளங்குவதால், இந்த அன்பையே அடித்தளமாகக் கொண்டு இறைவனுக்கு இறைத்தொண்டு புரிவதோடு மட்டும் நின்றுவிடாது சமூகத்துக்கான பணிகளையும் ஆற்ற சைவசமயிகள் முன்வரவேண்டும்.

சைவ சமூகத்திலிருந்து இந்து சமயத்தை எப்படி பிரித்துக் காட்ட முடியாதோ அதேபோன்றுதான் சைவசமயத்தவர்களும் சமூகப் பணிகளில் இருந்து ஒதுங்கி வாழமுடியாது.

அறுபத்து மூன்று நாயன்மார்களும் மக்களுக்குச் செய்த சமூகப் பணி அளப்பரியது. அப்பர் சுவாமிகளின் 'உழவாரத் தொண்டு' இதற்கு நல்ல தொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

-அனந்த நாராயணன், கைவேலி.

ஆன்மீகம்

## ஆண்டவரையே நம்பியிரு

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவன் ஒரு தீங்கு செய்தால் அதற்கு நியாயத் தீர்ப்பாக கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்.. என பழிவாங்குதல் எனக் கூறப்பட்டிருக்கின்றபோதிலும், இப்படியான பதிலுக்குப் பதில் பழிவாங்கும் உணர்வுகளில் இருந்து எம்மை மீட்பதற்காக பரமபிதா தனது தேவகுமாரனை நம்மிடம் அனுப்பினார் எனப் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

இயேசுக் கிறிஸ்துவும் மனுக்குலத்துக்காய் பாடுகள் பல பட்டு, தனது இரத்தத்தால் ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தி, சிலுவையில் அறையப்பட்டு, மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து இவ்வுலகில் வாழ்பவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிவிட்டுச் சென்றிருக் கின்றார்.

ஆயினும், இன்றும்கூட சில ஜனங்களிடையே பழைய ஏற்பாட்டுக் கால சுபாவம் காணப்படுகிறது. இது முற்றிலுமாக நீக்கப்படல் வேண்டும். ஏனெனில் "தீமைக்குத் தீமை செய்வேன் என்று சொல்லாதே. ஆண்டவரையே நம்பியிரு. அவர் உன்னைக் காப்பார். (நீதி மொழிகள் –20: 22)" என வேதம் உரைப்பதைக் கடைப்பிடித்து வாழ்வதே சாலச் சிறந்ததாகும்.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## இறைதூதர் பற்றி இறைமறை

அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகின்றான்.

முஹம்மதே! நீர் கூறுவீராக இறை தூதர்களில் நான் புதிதாக வந்தவனல்லன்.

அல்குர் ஆன் 46:9

அண்ணல் நபிக்கு அல்லாஹ் அல்குர் ஆனில் இவ்வாறு கூறும்போது இறை தூதரை இவ்வையக மக்கள் இம்சைப் படுத்தலாமா?

இன்னும் இறை மறை முழங்குகிறது.

முஹம்மதே! அண்டங்கள் அனைத்துக்கும் ஓர் அருட் கொடை யாகவேயன்றி வேறெவ்விதமும் நாம் உம்மை அனுப்பவில்லை.

அல்குர் ஆன் 21: 107

மேலும் வான்மறை கூறுகிறது.

ஹம்மதே! மனிதர்கள் அனைவருக்கும் நற்செய்தி கூறி மகிழ்விப்பவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவு மேயன்றி வேறெவ்விதமும் நாம் உம்மை அனுப்பவில்லை. எனி–னும் பெரும்பாலான மனிதர்கள் இதை அறிந்து கொள்ளவில்லை.

எம்.சி. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 988



### வறுமை தீருமா

பாராட்டுக்குரியது

கண்ணீரோடு காலங்கடத்தும்
பரம்பரையின் வறுமையினால்
பிஞ்சுக் குருத்துக்களும்
பிணைக்கப்படுகின்றார்கள்
வேலைத்தளங்களில்...
பள்ளிக் காலத்தில்
செய்யும் தவறுகளால்
ஆசான்களின் அன்பான
கண்டனங்களுடன் கற்க
வேண்டிய சிறுவர்கள் - இன்று
முதலாளிகளின் -முறாய்ப்பான
சீண்டல்களுடன்...

ற.றமில்டன்,
ஊர்காவற்றுறை.

## கவிதைப் போட்டி இல 991



### வாழும் வயதில்

கல் சுமந்த மேனியராய்
வாழும் வயதில்
வலிகள் எதற்கு
நூல் சுமக்கும் காலம் வரும்
மனித உரிமை வாழும் வரை.

ஆர்.ஹேமா – நீர்வேலி.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.12.2012

கவிதைப் போட்டி இல. 991 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### கொடுமை

பால் மணம் மாறாத
இந்தப் பச்சிளம்
பாலகனை கல்
சுமக்க வைத்த
பாவிகளே
உங்களுக்கு இரக்கமே
இல்லையா?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.



### தொழிலாளி

ஏட்டைச் சுமந்தவர்கள்
இந் நாள் வரை
நாட்டில் படும்
கேட்டினை நினைந்த
நிலையில் எனை
நோட்டமிட்டு துஷ்
பிரயோகமென
துணியாது
"தொழிலாளர்
தோட்டத்தில்
எழில் அரும்பொன்று
மலர்கிறதென மகிழுங்கள்"

கிண்ணியா முத்தாலிப்.



### நப்பாசை

இப்பாலகன்
கல் சுமப்பது
கண்ணகிக்கு
சிலை வடிக்கவல்ல
இச்சுமையால்
தன் இல்லத்தின்
வறுமைச் சுமை
குறையுமென்ற
நப்பாசையே.

அ.சந்தியாகோ,
கண்டி.

## உங்கள் பக்கம்

### வளப்பற்றாக்குறை நீங்குமா?

வரணி பிரதேசத்தின் பல கிராமங்களுக்கான ஒரேயொரு வைத்தியசாலையாக வரணி பிரதேச வைத்தியசாலை உள்ளது. இவ் வைத்தியசாலையில் பல குறை களை இங்குள்ள மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வைத்தியசாலைக்கு வெளிநோயாளர்களும், தங்கியிருப்போருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இங்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக ஆண்களுக்கு விடுதி வசதி(வார்ட்) இருக்கின்றது.

ஆனால் தங்கி சிகிச்சை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற வசதிகள் இல்லை என்பதால் இங்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களையும் எதிர்நோக்கும் அதேவேளை கடுமையான நோய்களுடன் செல்பவர்களுக்கு அலைச்சல்களை ஏற்படுத்துகின்றது.

மேலும் இங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கே அனுப்புகின்றனர். ஆனால் இங்கு அம்புலன்ஸ் வசதி இல்லை. இதனால் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு நோயாளர்களை அனுப்புவதற்குச் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே எமது பிரதேச வைத்திய சாலைக்கு உரிய வசதிகளை மேற் கொள்வதற்கு தேவையான நட வடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தினமுரசு உங்கள் பக்கமூடாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

வரணி வாழ் மக்கள்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ.மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:–
0212220188


30.00
வாரமலர்
தினமுரசு
990
பிரதம நீதியரசர்!
விசாரணையும் சவால்களும்!
உணர்வுகளை விற்கும் கார்த்திகை நாட்கள்!
கலாசார யுத்தம் திணிக்கப்படுகிறதா?

## வாசகர் சாலை



### தனித்துவம்

முரசே! சுமந்துவரும் அனைத்து அம்சங்களில் இருந்து திருப்தியான சேவையே முரசின் மூச்சு என்பதை நிரூபித்துவிட்டாயே. நீ தாங்கி வரும் அனைத்தும் சிறந்தவையே. கடந்த முரசில் வெளியான 'உணர்வுகளை விற்கும் கார்த்திகை நாட்கள்' என்னும் தலைப்பில் சிவன் எழுதிய கட்டுரை அந்த இதழுக்கே ஒரு சிறப்பைக் கொடுத்துள்ளது. இதேபோன்ற உண்மைத் தன்மையைப் பாமர மக்களும் விளங்கக் கூடிய வகையில் தந்துதவுமாறு முரசை அன்புடன் கேட்டுக்கோள்கின்றேன்.

எஸ்.சுவாதி, சாவகச்சேரி.

அன்பின் முரசே!
முரசு தரும் செய்திகள் யாவும் சிறப்பானவை. சினி விசிட் பகுதியில் வெளியான படங்களும், செய்திகளும், விளையாட்டு தொடர்பான செய்திகளும் மிகவும் பாராட்டத்தக்கது. தொடரட்டும் முரசின் தமிழ்ப்பணி.

வித்தியாபாலன்,
கொழும்பு.

என் இதயம் கவர்ந்த முரசே!
நீ சுமந்து வருகின்ற அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'வலிகளின் சன்மானம்' என்ற தொடர் கதை என்னை மிகவும் கவர்ந்தது. இத்தொடரை ஒரே மூச்சில் படித்து முடிப்பவன் நான். இந்தத்தொடரை எழுதிக் கொண்டிருக்கும் அளம்பில் ரமேஸுக்கு எனது வேண்டுகோள். இதே போன்று மனதை உருக்கும் தொடர்கதைளை வாசகர்களாகிய எமக்கு தந்துதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எனி னும் சிலவேளைகளில் முரசு என் கைகளில் தவழாமல் இருப்பது பெரும் மனக்குறையே!

எஸ்.திராவிடன், கண்டி.

### எனது கருத்து

முரசின் பாணியே முரசுக்கு முற்பட்ட பத்திரிகையாளர்களாலும் பின்பற்றப்படுகின்றது. முரசின் ஆக்கங்களின் பாணியிலேயே ஆக்கங்கள் வரத் தொடங்கியுள்ளன.. இது பாராட்டத்தக்கதே. ஆனால் ஒரு குறை. தகவல் துணுக்குகளுக்கு என்று ஒரு பக்கத்தை ஒதுக்கினால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து.

லெ.கஜானன், பிபிலை.

### வாழ்த்துக்கள்

உன் நந்தவனத்தில் பூக்கும் மலர்கள் யாவும் அழகோ அழகு. இவைகளை வார்த்தைகள் கொண்டு வார்த்துவிட என்னால் முடியாது. ஆனால்வாழ்த்திடாது என்னால் இருக்கவும் முடியாது. என்றும் உன் பணியின் சேவை நம் நாட்டில் நிலைத்து நிலைபெற்றிட எனது வாழ்த்துக்கள்.

ம.மகேசன், ஹெக்கிராவ.

## சுயநல அரசில்வாதிகளின் தூண்டுதலிற்கு

# பலிக்கடாவாகிறது மாணவ சமூகம்



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புபவர்கள் அமைதியான முறையில் தமது வீடுகளில் அவற்றை அனுஷ்டித்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்க வேண்டும். அதைவிடுத்து அப்பாவி பல்கலைக்கழக மாணவர்களைத் தூண்டிவிட்டு அவர்களைப் பலிக்கடாவாக்குவது கண்டிக்கத்தக்கது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குக் கருத்துரைத்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துரைக்கையில்,

சுயநல தமிழ் அரசியல்வாதிகளின் தூண்டுதலினாலேயே இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றது. ஜனநாயக நாட்டின் நடமாடும் சுதந்திரம் இருக்கின்றது என்பதற்காக யாரும் நிர்வாணமாக வீதியால் நடந்துசெல்ல முடியாது. இதே போன்றுதான் இவ்விடயத்திலும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினர் தமது தியாகிகள் தினத்தைக் கொண்டாடுவது தொடர்பில் அமைச்சரிடம் கேட்கப்பட்டபோது. ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது வன்முறைகளைக் கைவிட்டு ஜனநாயகக் கட்டமைப்புக்குள் நுழைந்து ஜனநாயக ரீதியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனுடன் ஒப்பிடும்போது இங்கே நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன என்று பதிலளித்ததுடன் எது எப்படி இருப்பினும் குறித்த அசம்பாவிதம் தொடர்பில் பூரண விசாரணைகளை நடாத்தி உண்மை நிலையினைக் கண்டறியுமாறு தான் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், இது தொடர்பில் நேரடியாக பிரச்சினைகளை அறிந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிகுமாறு ஜனாதிபதி தன்னைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க விரைவில் ஜனாதிபதியிடம் குறித்த அறிக்கையினைச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## தோண்ட தோண்ட வருகிறது எலும்புக் கூடு

### மாத்தளையில் சம்பவம்

மாத்தளை வைத்தியசாலை வளாகத்திலிருந்து மொத்தமாக 24 மண்டையோடுகளும் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்து இதுவரையில் மாத்தளை வைத்தியசாலை வளாகத்திலிருந்து மொத்தமாக 24 மண்டையோடுகளும் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி முன்மொழியப்பட்டவாறு மாத்தளை வைத்தியசாலையின் உயிரியல் வாயுப் பிரிவுக்காக அத்திவாரக் கிடங்குகளைத் தோண்டியபோதே இந்த மண்டையோடுகளும் எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன. இதுதொடர்பான விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பனம்பொருள் நிலையம் அல்லைப்பிட்டியில் திறப்பு

அல்லைப்பிட்டி மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிலையத்தில் பனம் பொருள்களில் இருந்து கைப்பணிப் பொருட்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களைக் பெறுவதற்கான உதவிகளைக் கரிதாஸ் நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்தப்பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்களைச் சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்துக்கு 40 பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மட்டக்களப்பில் இரத்த ஆடைகள் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பில் இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்ட ஆணின் ஆடைகள் சிலவற்றையும் மற்றும் ஒரு சோடி காலணியையும் பொலிஸார் மீட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிச்நகர் ரயில் வீதிக்கு அருகிலேயே இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்ட இந்த ஆடைகளும் காலணியும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொது மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து குறித்த இடத்திறகு வந்த பொலிஸர் இவற்றை மீட்டுள்ளனர். ஏறாவூர் பொலிஸார் இது தொடர்பான விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்த 7 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே, பதில் நீதவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கெனவே 43 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 6 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் மேலும் ஒரு சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த நிலையிலேயே 7 சந்தேக நபர்களும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ உத்தரவிட்டார்.

# அரசியல் சதுரங்கத்தில் இறந்த உறவுகளும் காயங்களும்!

**சங்கர சிவன்**

**“முள்ளிவாய்க்காலில் பெரிய எண்ணிக்கை யில் தமிழ் மக்கள் மரணத்தைத் தழுவிய நிகழ்வு 2009 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்றது. இந்த மரணங்களை நினைவுகூரும் நிகழ்வை நவம்பரில் அனுஷ்டிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? எதற்காக மாவீரர் தினத்துடன் இந்த நிகழ்வையும் இணைத்தார்கள்? இதன்மூலம் இவர்கள் என்ன பலனை எதிர்பார்க்கிறார்கள்? முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்காக மே மாதத்தில் ஒரு தினத்தை நிர்ணயிப்பதன் மூலம் கூட்டமைப்போ கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ பெரிதாக அரசியல் ஆதாயத்தை அடைய முடியாது. அதற்குப் படையினரின் பிரதிபலிப்பு பெரிதாக இருக்காது. அந்த நினைவு கூர்தலை மாவீரர் தினத்துடன் சம்பந்தப்படுத்தினால் படையினரின் பிரதிபலிப்புப் பெரிதாக இருக்கும் என்றும் அதன்மூலம் தாங்கள் கூடுதலான அரசியல் ஆதாயத்தை அடையமுடியும் என்றும் அவர்கள் போட்ட கணக்குத் தப்புக்கணக்கு ஆகவில்லை.”**

யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற அசம்பாவிதம் கண்டனத்துக்குரியது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. படையினரின் நடவடிக்கையும் கண்டனத்துக்குரியது. படையினரை ஆத்திரமூட்டும் நோக்கத்துடன் இடம்பெற்ற செயற்பாடுகளும் கண்டனத்துக் குரியவை.

இறந்த உறவுகளை வருடாவருடம் நினைவு கூர்வது தமிழ் மக்களுக்குப் புதியதல்ல. இது இந்துத் தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த மரபு. ஒவ்வொருவரும் இறந்தவர்களின் திதியை நினைவு வைத்துத் திவசம் செய்யும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. இவ்வாறு உயிர் நீர்த்தாரை நினைவுகூரும் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் மக்கள் முள்ளிவாய்க்காலில் பெருந்தொகையாக மடிந்து போனவர்களுக்குக் கௌரவம் கொடுக்கமறுக்கப்போவதில்லை. அந்த மரணங்களை எப்போது நினைவுகூர்வது என்பதுதான் பிரச்சினை.

முள்ளிவாய்க்காலில் பெரிய எண்ணிக்கையில் தமிழ் மக்கள் மரணத்தைத் தழுவிய நிகழ்வு 2009 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்றது. இந்த மரணங்களை நினைவுகூரும் நிகழ்வை நவம்பரில் அனுஷ்டிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? எதற்காக மாவீரர் தினத்துடன் இந்த நிகழ்வையும் இணைத்தார்கள்? இதன் மூலம் இவர்கள் என்ன பலனை எதிர்பார்க்கிறார்கள்?

இன்று தமிழ் மக்கள் மத்தியில் தலைவர்களாக இருப்பவர்கள் அத்தலைமைக்குரிய பிரதான பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தயாராக இல்லை. இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதுதான் தமிழ் மக்கள் இவர்களுக்கு வழங்கியுள்ள பொறுப்பு. அந்தப் பொறுப்பைத் தவிர்ப்பதற்காக ஏதேனுமொரு பிரச்சினை எப்போதும் இருந்துகொண்டிருக்க வேண்டும் என்று இவர்கள் விரும்புகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சியும் பகையாளிகள் போலச் செயற்படுகின்ற போதிலும் இந்த விடயத்தில் இவர்களுக்கிடையே உடன்பாடு உண்டு.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்காக மே மாதத்தில் ஒரு தினத்தை நிர்ணயிப்பதன் மூலம் கூட்டமைப்போ கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ பெரிதாக அரசியல் ஆதாயத்தை அடையமுடியாது. அதற்குப் படையினரின் பிரதிபலிப்பு பெரிதாக இருக்காது. அந்த நினைவு கூர்தலை மாவீரர் தினத்துடன் சம்பந்தப்படுத்தினால் படையினரின் பிரதிபலிப்புப் பெரிதாக இருக்கும் என்றும் அதன்மூலம் தாங்கள் கூடுதலான அரசியல் ஆதாயத்தை அடையமுடியும் என்றும் அவர்கள் போட்ட கணக்குத் தப்புக் கணக்கு ஆகவில்லை.

சிவிலியன்களின் மரணத்தை நினைவுகூரும் நிகழ்வுடன் மாவீரர் தினத்தையும் ஒன்றிணைத்தலில் ஒரு தப்பித்தல் வாதமும் இருக்கிறது. அதாவது இரண்டு முகங்களைக் காட்டலாம். மாவீரர் தினத்தைக் கொண்டாடுவது ஒரு முகம், நாங்கள் உயிரிழந்த சிவிலியன்களை நினைவு கூர்கின்றோமேயொழிய மாவீரர்களையல்ல என்பது மற்றைய முகம். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று ஒரு முகம், அரசியல் தீர்வுக்கான தீர்வுத்திட்டத்தை ஒரு போதும் முன்வைக்கமாட்டோம் என்று புலம்பெயர் அமைப்புக்கு இன்னொரு முகமும் காட்டுபவர்களுக்கு இதுவொன்றும் சிரமமானதல்ல.

மாணவர்களையும் படையினரையும் மோதவிடுவது இத்தலைவர்களுக்கு வலுவான அரசியல் மூலதனம். இந்த மோதல் கணிசமான காலத்துக்கு அரசியலில் இருப்பவர்களுக்குக் கைகொடுக்கும். வடமாகாண சபைத் தேர்தல் வரும்போது இது அவர்களுக்குப் பெரியதாகக் கைகொடுக்கும். பல்கலைக்கழகங்களில் எங்கள் பிள்ளைகள் நிம்மதியாகக் கல்விகற்று முடியவில்லை என்றும், சிங்களப் படையினரின் அட்டகாசம் பொறுக்கமுடியவில்லை என்றும் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக்கொண்டு ஒப்பாரி வைப்பார்கள். தேர்தலில் வெற்றி பெறுவதோடு தலைவர்களின் பிரச்சினை தீர்ந்துவிடும். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையான இனப்பிரச்சினை அப்படியே இருக்கும்.

இத்தலைவர்களால் தவறாக வழிநடத்தப்படும் மாணவர்கள் கொஞ்சம் நிதானமாகச் சிந்திக்கவேண்டும். இத்தலைவர்கள் இன்று பெரிதாகப் பேசி ஆர்ப்பாட்டங்கள் செய்கின்ற பிரச்சினைகளில் அக்கறை செலுத்தத் தேவையில்லை என்று கூறவில்லை. இந்தப் பிரச்சினைகளிலும் தமிழ்த் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயற்படுவதுதான் உண்மையான கவனம் செலுத்தல். வெறும் ஆர்ப்பாட்டங்கள் தலைவர்களுக்கு வாக்குகளைத் தருமேயொழிய பிரச்சினைக்குத் தீர்வைத் தராது. இப்போது இத்தலைவர்கள் பெரிதாகப் பேசும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிதிமூலமாக இருப்பது இனப்பிரச்சினை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால் மற்றைய எல்லாப் பிரச்சினைகளும் காணாமல் போய்விடும்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## விரைந்து முடிவெடுப்போம்

வடக்கில் கலாசாரப் பிறழ்வுகள் இடம்பெறுகின்றன. சமூகச் சீரழிவுகள் இடம்பெறுகின்றன. போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றன. மூன்று தசாபதங்களுக்கும் மேலாக அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் முகம் கொடுத்தபடி ஆயுத மிரட்டல்களுக்குப் பயந்து வாழ்ந்த மக்கள். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் கட்டவிழ்த்து விட்டவர்கள்போல் நிற்கின்றனர்.

சட்டம், ஒழுங்கு பின்பற்றுவதிலும், நாகரிகத்தைப் புரிந்துகொண்டு பொறுத்தமான பாதையைத் தெரிவுசெய்து கொள்வதிலும் தீர்மானமொன்றை எடுத்துக்கொள்ள முடியாமல் இளைய தலைமுறை திணறிப்போய் நிற்கின்றது.

'மணி கட்டிய மாடு சொன்னால்தான் கேட்கும்" என்பதுபோல், ஆயுதம் ஏந்தியவர்கள் சொல்லும்போதுதான் கேட்கப் பழகியவர்களாகவே இன்றும் வாழ விரும்புகின்ற துர்ப்பாக்கியம் தொடர்கின்றது.

ஆபாசங்களிலும், போதைப் பொருட்களிலும் மிக இலகுவாக தம்மைத் தொலைப்பவர்களாக தமிழ் இளைய தலைமுறையினர் உள்ளனர். என்ற கவலைகள் நாளாந்தம் தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோருக்கு கட்டுப்படாமல் திரிவதையும், நண்பர்களுடன் வீண் பொழுதைக் கழிப்பதையுமே சுதந்திரமாகவும், சுயமாகவும் வாழ்வதாக நம்புகின்றனர்.

இப்படியெல்லாம் அண்மைக் காலமாக கவலைகளும், எச்சரிக்கைகளும் பலரா லும் வெளிப்படுத்தப்பட்டது. அதைச் செய்தியாகப் படித்துவிட்டு மறந்தவர்களும் இருக்கின்றார்கள். ஆச்சரியப்பட்டு பிறருடன் பகிர்ந்துகொண்டு இயலாமையோடு இருந்தவர்களும் இருக்கின்றார்கள்.

கடந்த எயிட்ஸ் தினத்தின் போது வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்த கருத்துக்கள் கவனத்துக்குரியவை. அதாவது வவுனியாவில் விபச்சாரம் தற்போது பாரதூரமான பிரச்சினையாக மாறிவருகின்றது. இதற்கு சில முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் காரணமாக இருக்கின்றனர் என்று கூறியிருந்தார்.

இப்பிரச்சனை வவுனியாவில் மட்டுமல்லாமல், யாழ்ப்பாணத்திலும் தற்பொழுது முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் மெல்ல தலைதூக்கி வருகின்றது.

இவ்விடயத்தைப் பகிரங்கமாகப் பேசுவதையும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் முதலில் ஆரம்பிக்கவேண்டும். இதைப் பேசுவது தமிழ் கலாசாரத்துக்குக் கூடாது என்றும் தமிழ் மக்களை மற்றவர்கள் கேவலமாக எடைபோட்டுவிடுவார்கள் என்றும் நினைத்துக் கொண்டு மௌனமாக இருந்துவிடுவதாலேயே எயிட்ஸ் நோய்த்தொற்று இன்று வடக்கில் பாரதூரமான பாய்ச்சலுடன் பரவுகின்ற சூழல் தோற்றம் பெற்றுள்ளது. இதன் ஆபத்தை முழு வடக்கு மாகாணமும் எதிர்கொள்ளும் நிலைமையுள்ளதால் இப்போதாவது நாம் விழிப்படையவேண்டும்.

எயிட்ஸ் திட்டமிட்டு பரப்பப்படுகின்றதா? அல்லது நமது அறியாமையால், கட்டுப்பாடற்ற போக்கால் வந்துவிட்டதா? என்று ஆராய்ந்து பாந்து பற்களை குத்தி மணந்து கொள்வதற்கு கால அவகாசம் போதுமானதாக இல்லை.

தடுக்கவும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் சகல தரப்பினரும் விரைந்து செயற்பட முன்வரவேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

-சிவன்-

# கொம்பு சீவும் புத்திஜீவித்தனமும்





அடுத்தவருடம் மாவீரர் தினத்தை கொண்டாட தீர்மானித்திருக்கின்ற பேராசிரியப் பெருந்தகைகள், அதை இந்த வருடமே கொண்டாடியிருக்கிலாமே?! வீதியில் இறங்கி உதைபட்ட மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியிருக்கலாமே?! இந்த வருடம் என்ன அவர்களுக்கு இன உணர்வு மங்கிப்போய்க் கிடக்கிறதா?

யுத்தத்தில் இறந்தவர்கள் அனைவரும் மதிக்கப்பட வேண்டியவர்கள். தன்னலம் கருதாத அந்த ஆன்மாக்கள் பூஜிக்கப்பட வேண்டியவை.

ஆனால், மரித்தவர்களுக்காக மானமுடன் வாழ வேண்டியவர்கள் வீதியில் போட்டு புரட்டி எடுக்கப்படும் நிலையை ஏற்படுத்தக் கூடாது என்பதுதான் ஆதங்கம். அதுவேதான் மரணித்தவர்களின் விரும்பமாகவும் நிச்சயம் இருக்கும்.

# சூனியமாகும் எதிர்காலமும்!

**புலிகளின் மாவீரர்** தினத்தை ஒட்டி யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் ஏற்றிய தீபம் தேவையற்ற பதற்றத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. பல்கலைக்கழகச் சுற்றுவட்டாரத்தில் இராணு-வப் பிரசன்னம், சோதனை, புலனாய்வுப் பிரிவின் கழுகுப் பார்வை என்று நிலைமையை மோசமாக்கியிருக்கின்றது.

அதாவது எவ்வாறான நிலைமை ஏற்பட வேண்டுமென சில அரசியல் சக்திகளும் சில ஊடகங்களும் விரும்பியதோ அது நடந்தேறியிருக்கின்றது.

இது மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட அசம்பாவிதங்களின் விளைவு கிடையாது. இவ்வாறான சூழல் ஏற்பட வேண்டும் என்று கடந்த சில வாரங்களாகவே சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டு வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவீரர் தினத்திற்கு (டிசம்பர் 27) முந்தைய நாள் குடாநாட்டில் இருந்து வெளியாகின்ற பத்திரிகை ஒன்று படையினர் குவிப்பு, சோதனைகள் தீவிரம், நிலைமை பதற்றம் என்றெல்லாம் தலைப்புச் செய்தி பிரசரித்திருந்தது. ஆனால் அன்றைய நிலைமை குறித்து கிடைக்கின்ற சுயாதீனச் செய்திகளின் படி பல்கலைக்கழச் சுற்றுப் புறத்தில் புலனாய்வுப் பிரிவினரின் நடமாட்டங்கள் நிலவியபோதும் பதற்றம் என்று கூறுமளவிற்கு நிலைமை மோசமாக இருக்கவில்லை.

கடந்த காலங்களில் மாவீரர் தின நிகழ்வுகளின் போது யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் இம்முறையும் பாதுகாப்புத் தரப்பின் பார்வையை அந்தப் பக்கம் திருப்பியிருக்கலாம்.

அவர்களுடைய நிலையில் இருந்து பார்க்கும் போது இதனைத் தவறு என்று கூற முடியாது. ஏனெனில் கடந்த 30 வருடங்களாக அரச படைகளுக்கு எதிராக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்கு அவர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

எனவே, அவ்வாறான சூழல் மீண்டும் ஏற்படாமல் வைத்திருப்பது தொடர்பில் அவர்கள் கரிசனையாகத்தான் இருப்பர்.

ஆனால், எம்மை நாம் பாதுகாப்பதற்கு சூழலைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டிய பாரிய பொறுப்பு எமது கரங்களிலேயே இருக்கின்றது.

குறித்த தினத்தில் கூட யுத்த காலத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த விரும்பியிருந்தால் அமைதியான முறையில் தங்களுக்குள் அகவணக்கத்தைச் செலுத்தி விடுதியினுள்ளே தமது அனுஷ்டானங்களை மட்டுப்படுத்தியிருக்கலாம். அதைவிடுத்து நோட்டம்விட்டுக் கொண்டிருப்பவர்களுக்குச் சவால் விடும் வகையில் கூரையில் ஏறி தீபம் ஏற்றியதுதான் பிரச்சினைக்குக் காரணமாகி இருந்தது.

இது பொதுவாக யாரையும் சினங்கொள்ள வைக்கும் செயலாகும். அதுவும் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் ஒருபடி மேலேதான் சிந்திப்பார்கள். புலிகளின் காலத்தில் பிரபா-கரன் கூட ஒரு மூடிய அறைக்குள்தான் தீபம் ஏற்றி அகவணக்கம் செலுத்தியிருந்தார். மக்கள் மத்தியில் தோன்றி தீபம் ஏற்றியிருந்தாலோ அல்லது தனது இருப்பிடத்தின் முகட்டில் ஏறி நின்று தீபம் ஏற்றியிருந்தாலோ பிரபாகரன் கூட முள்ளி வாய்க்கால் வரை வந்திருக்க முடியாது. இதுதான் சமயோ-சிதம்.

எனவே, வீதியில் நின்றவர்களை சினங்கொள்ளச் செய்து விடுதிகளுக்குள் நுழைய வைத்தவர்கள் யார் என்பதைச் சிந்திக்கவேண்டும். இரவு நேரத்தில் பெண் பொலிசாரோ, பெண் இராணுத்தினரோ இன்றி பெண்களின் விடுதிகளுக்குள் நுழைந்தது தவறு. அதனை மறுக்க முடியாது. அதேவேளை, அவ்வாறு நுழைவதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தவர்கள் அந்த விடுதியில் இருந்த பெண் மாணவிகள்தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சரி, அத்துமீறி நுழைந்து விட்டார்கள் என்றால் மறுநாள் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து அதனை உரிய முறையில் கையாண்டிருக்கலாம். அது ஆரோக்கியமானதாக இருந்திருக்கும். அதை விடுத்து தொடர்ந்தும் படைத்தரப்பை வெறுப்பேற்றும் செயற்பாடாகவே மறுநாள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அமைந்திருந்தது.

மேற்கொள்ளப்படுகின்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் எமக்கும் நாம் சார்ந்த சமூகத்திற்கும் பயன்படுமாக இருந்தால் துணிந்து செய்யலாம். மற்றவர்களோடு முரண்டுபிடிப்பதால் எமது இலக்கு நோக்கிய பயணத்தின் தூரம் குறையுமாயின் அதனையும் ஏற்றுக்கொள்ளலாம்.

ஒரு வாதத்திற்கு எடுத்துக் கொண்டால் கடந்த காலத்தில் இதே பல்கலைச் சமூகம் பொங்குதமிழ் என்று புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு இழுபட்டுக்கொண்டிருந்தது. அதை வேண்டுமானால் புலிகளின் நிலைப்பாட்டை ஆதரித்தார்கள். புலிகளை நம்பினார்கள் என்று நியாயப்படுத்தலாம். இப்போது கூட புலிகள் தமது ஆட்பல ஆயுதபலத்துடன் பின்வாங்கி காடுகளுக்குள் இருக்கிறார்கள் என்றால் (இந்தியப்படை காலம்) அவர்களுக்குச் சாதகமான புறச் சூழலை உருவாக்க இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்துகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால், இப்போதுதான் எதுவுமில்லையே! அனைத்து எதிர்பார்ப்புக்களும் அழிக்கப்பட்டு நிலைமை தலைகீழாக மாறிப் போய் கிடக்கின்றது. புலிகள் செய்த தவறுகளும் அவர்களின் பலவீனங்களும் சர்வதேசத்தினாலேயே அவர்களை வெறுத்து ஒதுக்கிவிட்டுள்ளது.

முள்ளில் விழுந்த சேலையாக தமிழ் மக்களின் எதிர்காலமும் அரசியல் அபிலாசைகளும் சிக்குண்டு கிடக்கின்றது. இந்நிலையில் தொடர்ந்தும் உணர்ச்சிகளை முன்னிலைப்படுத்தி பழைய திசையிலேயே பயணிப்பதனால் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி அதனூடாக அரசியல் நடாத்தவும் பத்திரிகை வியாபாரம் செய்யவும் ஆலாய்ப்பறக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் போன்ற சுயநலவாதிகளுக்குப் பயன்படக் கூடும். அல்லது வடக்குக் கிழக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கச்சொல்லி அதிகரித்து வரும் அழுத்தத்தினை குறைப்பதற்கு அரசுக்கு உதவினாலும் உதவக் கூடும். ஆனால். தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை.

பல்கலை மாணவர் சக்தி என்பது அதுசார்ந்த சமூகத்தின் விலைமதிப்பற்ற சொத்து. அந்த சக்தியானது தாம் சார்ந்த சமூகத்தினது வழிகாட்டிகளாகவும் பாதுகாவலர்களாகவும் இருக்க வேண்டியது. இவர்களது கருத்துக்கள் எவராலும் தட்டிக் கழிக்க முடியாதவகையில் அமைபவை.

இந்நிலையில், யாழ். பல்கலை மாணவர்கள் தற்போது இக்கட்டான சூழலில் காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டிய கடப்பாடு உடையவர்கள். ஆனால் இங்கே என்ன நடந்திருக்கின்றது?

வெறுமனே உணர்ச்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஒரு சிலரின் தூண்டுதலுக்கு எடுபட்டு, எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். ஆர்ப்பாட்டம் நடத்துகின்றோம் என்று வீரமுழக்கம் முழங்கிவிட்டு உணர்ச்சிகளின் உந்துதலினால் வீதிக்கு வந்தவர்கள் புரட்டி எடுக்கப் பட்டிருக்கின்றார்கள். கேள்வி கேட்கவோ, தடுத்துநிறுத் தவோ யாரும் இல்லை.

ஏனெனில், இவர்களது கோரிக்கைகள் அந்தளவிற்குப் பலவீனமாக இருந்தது.

மாறாக, அண்மைக்காலமாக தென்னிலங்கையில் பேசப் பட்டு வருகின்ற 13ஆவது திருத்தம் ஒழிப்புப் போன்ற பிரச்சினைகளுக்கு எதிராக இந்த மாணவர் சக்தி ஓர் எதிர்ப்பைக் காண்பித்திருக்குமேயானால் நிராகரிக்க முடியாததாயிருந்திருக்கும், வெளிச் சக்திகளின் ஆதரவும் கிடைத்திருக்கும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக க[illegible]த்தில் எடுக்கப்ப[illegible]. வேண்டிய குரல்கள் எள்ளி நகையா[illegible]படும் ஒரு சூழல் ஏறபட்டுள்ளது. " சும்மா கத்துவாங்கள் லட்டியை எடுத்து இரண்டு போட்டால் கையைத் தூக்கிக் கொண்டு சேர் சேர் என ஓடுவாங்கள்" என்கின்ற நிலைமை தோற்றுவிக்கப் பட்டுள்ளது. இது தேவைதானா?




(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்



ரிஷி

26

# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

வன்னியில் இறுதி யுத்தத்தில் ஈடுபட்டிருந்த புலிகள், ஆயுதங்களை பெறுவதற்கு எடுத்த அனைத்து முயற்சிகளும், நடுக்கடலில் அடிபட்டுப் போன விவகாரம் பற்றி கடந்த வாரங்களில் எழுதியிருந்தோம். கடற்புலிகளின் தளபதி சூசையால் ஒரு கப்பல் ஆயுதங்களைக் கூட கொண்டுவந்து சேர்க்க முடிந்திராத நிலையில், புலிகளின் உளவுப் பிரிவின் தலைவர் பொட்டுஅம்மான் செய்த முயற்சி ஒன்று பற்றியும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆச்சரியகரமாக பொட்டு அம்மானால் ஏற்பாடு செய்யப்பட்ட கப்பல், முல்லைத்தீவு கடலுக்குள் அடிபடாமல் வந்துசேர்ந்தது.

அதற்கு காரணம் என்ன? புலிகளின் கப்பல் நடமாட்டங்களை கண்காணித்துக் கொண்டிருந்த உளவுத்துறைகள் எவையும், கம்யூனிகேஷன் விஷயத்தில் இவர்கள் செய்த சூட்சுமத்தை உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை.

கப்பலில் வெவ்வேறு இலக்கமுடைய 10 சட்டலைட் செல்போன்கள். கனடாவில் 10 வெவ்வேறு இலக்கமுடைய சட்டலைட் போன்கள் ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்தி, அந்தக் கப்பல் நகர்ந்திருந்தது. கப்பலும் கார்கோ கப்பல் அல்ல, மீன்பிடி ட்ரோலர். அதிலிருந்த மாலுமிகளோ, இந்தோனேசியர்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தக் கப்பலில் எந்தவொரு துறைமுகத்தில் வைத்தும் ஆயுதங்கள் ஏற்றப்படவில்லை.

பொட்டுஅம்மானின் திட்டத்தில் இவ்வளவு திசை திருப்பல்களும் இருந்ததால், எந்தவொரு உளவுத் துறையும் இந்தக் கப்பல்மீது சந்தேகம் கொள்ளவில்லை.

புலிகளுக்கு என பிரத்தியேகமாக வந்த இறுதிக் கப்பல் இதுதான். யுத்தம் முடிவதற்கு 3 மாதங்களுக்கு முன், பெப்ரவரி மாதத்தில் (2009) முல்லைத் தீவு கடலை சென்ற டைந்தது இந்தக் கப்பல்.

கடற்புலிகளின் தளபதி சூசையுடன் சவால்விட்டு, கடல் புலிகளால் முடிந்திராத காரியத்தை கடலில் செய்த வகையில் இந்த முயற்சி பொட்டம்மானுக்கு வெற்றிதான். ஆனால், இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டி ருந்த நேரத்தில், புலிகளுக்கு இந்தக் கப்பலால் பலன் ஏதும் இருக்கவில்லை.

காரணம், கப்பலில் ஆயுதங்கள் ஏதும் வரவில்லை. பொட்டுஅம்மானின் உளவுப்பிரிவினர் தமக்கு தேவையான சில பொருட்களையே அதில் இறக்கியிருந்தனர்.

அதன்பின் யாரும் இதுபோன்ற கப்பல் முயற்சி ஒன்றை செய்ய முடியாதபடி, யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்து

## குதிரையின் வேலையை குதிரைதான் செய்யவேண்டும்



விட்டது. இறுதி நாட்களில், பொட்டு அம்மானும் வேறு சில சிக்கல்களில் சிக்கியிருந்தார். அவற்றையெல்லாம், தொடரின் இறுதிப் பகுதியில் பார்க்கலாம்.

இப்போது மற்றொரு கேள்வி.

பொட்டு அம்மானால், யுத்தத்தின் இறுதி நேரத்தில் ஒரு கப்பலை தருவிக்க முடிந்ததுபோல, யுத்தம் துவங்கிய நாளில் இருந்து கடல் புலிகளின் தளபதி சூசையால் ஏன் ஒரு கப்பலைக்கூட கொண்டுவர முடியவில்லை? தொடர்ந்து முயற்சி செய்தும், ஒவ்வொரு கப்பலாக ஏன் அடி மேல் அடி வாங்கி, அனைத்தும் கடலடியே போயின?

இந்தக் கேள்விக்கு மிக சாதாரண பதில் ஒன்று உள்ளது. கிராமப் பகுதிகளில் சர்வ சாதாரணமாக கூறும் ஒரு வாக்கியமே அந்தப் பதில். "குதிரையின் வேலையை, குதிரைதான் பார்க்க வேண்டும். கதிரையில் இருப்பவர் பார்க்கமுடியாது"

எமது நோக்கம், யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் பற்றி விமர்சிப்பது அல்ல. தனிப்பட்ட ஒருவர் இறந்த விவகாரமல்ல இது. ஒரு விடுதலை இயக்கமும், போராட்டமும் முற்றாக அழிக்கப் பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான போராளிகளின் உயிர்த் தியாகத்தால் உச்ச நிலையை அடைந்த இயக்கம் அது.

அந்த இயக்கத்தை வளர்ப்பதற் காக தமது மகனை, மகளை, சகோதரனை, சகோதரியை, தந்தையை, தாயை பலி கொடுத்த குடும்ப உறுப்பினர்களுக்கு, தோல்விக்கான காரணத்தை தெரிந்து கொள்ள உரிமை இல்லையா?

அதை இப்படிப் பாருங்கள். யுத்தம் 18ஆம் திகதி, புலிகளுக்கு தோல்வியில் முடிந்தது. புலிகள் தரப்பில் யுத்தத்தை நடத்தியவர்களுக்கு அந்த முடிவு நிச்சயம் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும், 16ஆம் திகதி, யுத்தத்தில் ஜெயிக்கலாம் என்று நம்பிக்கை ஊட்டப்பட்டு, துப்பாக்கியுடன் முன்னரணுக்கு அனுப்பப்பட்டு உயிரிழந்த ஒரு போராளி யின் குடும்பத்தினருக்கு, தோல்விக்கான காரணம் சொல்லப்பட வேண்டுமா, இல்லையா?

"உஷ்.. இதெல்லாம் இனியும் இரகசியம்" என்றால், இது மக்களுக்காக நடத்தப் பட்ட யுத்தம் இல்லையா? எந்த வொரு இரகசியத்தையும் காக்க வேண்டிய அவசியமும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. காரணத்தை தெரிந்து வைத்திருப் பவர்கள், அதை இப்போது சொல்ல வேண்டிய தார்மீக கடமையும் உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஏன் தோல்வியைத் தழுவ நேர்ந்தது என்ற கேள்விக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பிரதான காரணங்களில் ஒன்று, ஆயுதம் வழங்கல் இல்லை என்பதே.

ஆயுதங்கள் கடல் மூலமாகவே வந்து சேர வேண்டியிருந்தன. ஆயுதங்களுடன் வந்த ஒவ்வொரு கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. அப்படியிருந்தும், மீண்டும் மீண்டும், மில்லியன் டொலர்கள் பெறுமதியாக ஆயுதங்களுடன் கப்பல்களை ஏன் தருவிக்க முயன்றார்கள்? காரணம், புலிகளின் வெற்றி தோல்வியை அந்த ஆயுதங்கள்தான் முடிவு செய்யவேண்டிய நிலையில், யுத்தம் இருந்தது.

2002ஆம் ஆண்டு வரை ஆயுதங்கள் எந்தத் தடையுமின்றி ஸ்மூத்தாக கப்பல் கப்பலாக வன்னிக்கு போய்க் கொண்டிருந்தன. புலிகள் இராணுவத்தை தாக்கினார்கள். பல வெற்றிகள் கிடைத்தன. 2002இன் பின் கப்பல் போக்குவரத்து, கடல்புலிகளின் தளபதி சூசையிடம் போனது. கப்பல்கள் அடிபட்டன. ஆயுதம் வழங்குவது வெட்டுப்பட்டது.

கையிருப்பில் இருந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு தற்காப்பு யுத்தம் புரிந்தபடி புலிகள் பின்வாங்க துவங்கினார்கள். அதன்பின் ஏற்பட்ட முடிவு அனைவருக்கும் தெரிந்தது தான்.

இப்போது, உங்களுக்கு 2 கேள்விகள் எழலாம்.

1) 2002ஆம் ஆண்டுவரை எப்படி தடங்கல் இல்லாமல் வெற்றிகரமாக ஆயுதங்கள் அனுப்பி வைக்கப் பட்டன?

2) ஆயுதம் வழங்கலில் தடங்கல் இல்லாமல் கிடைத்தால்தான் வெற்றி பெறலாம் என்ற நிலையில் இருந்த புலிகள் இயக்கம், கடல் மார்க்கம் சறுக்கினால் என்ன செய்வது என்பதை முதலிலேயே யோசிக்க வில்லையா? Plan-B என்று எதுவுமே அவர்களிடம் கிடையாதா?

இரண்டுக்குமே பதில்கள் உள்ளன. இரண்டாவது கேள்விக்கான பதிலை முதலில் பார்க்கலாம்.

ஆம். புலிகளிடம் ஒரு Plan-B இருந்தது. இது பற்றிய விபரங்கள், புலிகள் இயக்கத்தில் இருந்த பலருக்கேகூட தெரிந்திராது. காரணம் இந்த Plan-B புலிகளின் உளவுப் பிரிவின் கைகளில் இருந்தது. மொத்தம் 5 பேர்தான் இதில் தொடர்பு பட்டிருந்தனர். அதில் 2 பேர் இன்னமும் வெளிநாடுகளில் உயிருடன் உள்ளனர்.

ஆயுதம் வழங்கலுக்கான கப்பல் போக்குவரத்து கே.பி.-யின் கையில் இருந்து எடுக்கப்பட்டு, கடல் புலிகளின் தளபதி சூசையிடம் ஒப்படைக்கப்பட்ட பின், கடற்புலிகளால் இதை கையாள முடியுமா என்ற சந்தேகத்தை முதலில் எழுப்பினார் பொட்டு அம்மான். ஆனால், புலிகள் இயக்கத்துக்குள் இருந்த 'உள்வீட்டு அரசியல்', முழுமையாக கப்பல் போக்குவரத்தையும் கடற்புலிகள் வசமே போகும்படி செய்தது.

அதையடுத்து பொட்டுஅம்மான் தமது ஆட்களை வைத்து டெவலப் செய்ததுதான், Plan-B.

கப்பல் விவகாரத்தை முழுமையாக சூசையிடம் விட்டுவிட்டு, விமானம் மூலம் ஆயுதங்களை இறக்க முயற்சி செய்தார் பொட்டு அம்மான்.

(தொடரும்...)

# ஓர் இரகசிய கொலைத் திட்டம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அப்துல்லா விமானம் ஏறிய உடனே அந்த விபரம் மொசாத் உளவாளியால் இஸ்ரேலுக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஓகோ. அப்துல்லா சுவிட்சலாந்தில்தான் வசிக்கிறாரா என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் டானி என்று கடந்த வாரம் முடித்திருந்தோம்.

டானி அப்படி தனக்குத் தானே சொல்லிக் கொள்வதற்குள் விமானம் சுவிட்சலாந்தில் இறங்கிவிட்டது.

'ஏன் அப்படி?

லெபனானில் இருந்து மொசாத் உளவாளிகள் இயங்குவது மிகவும் ஆபத்தானது. எந்த நிமிடத்திலும் அவர்கள் ஹிஸ்புல்லா ஆட்களின் கைகளில் அகப்படலாம். இதனால் லெபனானில் இருந்து மொசாத்தின் உளவாளிகள் இஸ்ரேலுக்கு சுற்றுப் பாதையிலேயே தகவல் அனுப்பமுடியும்.

அப்துல்லா சுவிட்சலாந்துக்கு விமானம் ஏறுகிறார் என்று மொசாத்தின் உளவாளி அனுப்பி வைத்த தகவல் லெபனான் தலைநகர் பெய்ருட்டில் இருந்து, எகிப்து தலைநகர் கய்ரோவில் உள்ள மொசாத் உளவாளி ஒருவருக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து டெல்-அவிவ் நகரில் உள்ள டானிக்குக் கிடைத்த நேரத்தில், அப்துல்லா சென்ற விமானம் சுவிஸ் போய்ச் சேர்ந்துவிட்டிருந்தது.

சுவிஸில் மொசாத் உளவாளிகள் ஏராளமாக இருந்தார்கள். இருந்த போதிலும், அங்கே இருந்த மொசாத்தின் ஆட்களை உஷார்ப்படுத்தி அப்துல்லாவைப் பின்தொடரும்படி கூற சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கவில்லை.

அப்துல்லாவின் இருப்பிடம் சுவிஸ்தானா? அல்லது, அவர் சுவிஸ் சென்று அங்கிருந்து வேறொரு நாட்டுக்குச் செல்கிறாரா என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

அப்துல்லா பற்றிய பின்னணி விபரங்கள் மொசாத்திடம் இருந்தன. லெபனானில் வசித்துக் கொண்டிருந்த அவர் சில வருடங்களுக்கு முன்னரே லெபனானில் இருந்து வெளியேறியிருந்தார். ஐரோப்பாவிலுள்ள பணக்கார அரபு நாட்டவர்களிடம் இருந்து ஹமாஸவுக்காக பணம் திரட்டும் வேலையில் அவர் ஐரோப்பிய நாடுகளுக்கு வெவ்வேறு பெயர்களில் உள்ள பாஸ்போர்ட்டுகளில் சென்று வந்து கொண்டிருந்தார்.



© AP

ஐரோப்பிய நகரங்களில் அப்துல்லாவினால் திரட்டப்பட்ட பணம், ஜேர்மனியின் பொன் நகரிலுள்ள ஈரானியத் தூதரகத்தின் ஊடாக ஹமாஸ் இயக்கத்தினரின் ஆயுதம் வாங்கலுக்காகச் சென்று கொண்டிருந்தது.

இவ்வளவு பின்னணி விபரங்கள் தெரிந்திருந் தும், அப்துல்லா எங்கேயிருந்து செயற்படுகிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருந்தது மொசாத்.

ஆனால் இப்போது இரண்டு முக்கிய தகவல்கள் கையில் கிடைத்திருக்கின்றன.

ஒன்று, குறிப்பிட்ட தினமொன்றில் அவர் சுவிட்சலாந்துக்கு சென்ற விமானமொன்றில் பயணித்திருக்கிறார். அவரது இருப்பிடம் சுவிட்சலாந்தில் இருக்கலாம்.

(தொடரும்)

# நிலமெல்லாம் இரத்தம் 30

**பா.ராகவன்**

**இவ்வாறு** எண்ணியபடி முகம்மதுவைத் தேடி ஆக்ரோஷத்துடன் புறப்பட்டுப் போனார் உமர். போகிற வழியில் நுஜம் இப்ன் அப்த் அல்லாஹ் என்னும் ஒரு முஸ்லிம் உமரைத் தடுத்து நிறுத்தி, 'எங்கே இத்தனை ஆக்ரோஷமாகக் கிளம்பி விட்டீர்கள்?' என்று கேட்டார்.

எங்கா? அந்த முகம்மதுவை ஒழித்துக் கட்டுவதற்காக என்று சொன்ன உமர், தன் வாளையும் தொட்டுக் காட்டினார்.

நுஜமுக்குக் கவலை வந்து விட்டது. என்னசெய்து இந்த முரட்டு உமரைத் தடுத்து நிறுத்துவது? கையில் கொலை வாளுடன் போய்க்கொண்டிருக்கிறார். முகம்மதும் அவரது தோழர்களும் திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் ஆயுதம் ஏதும் இருக்காது. தற்காப்புக்காகக்கூட ஏதும் செய்துகொள்ள முடியாது. இங்கேயே இவரைத் தடுக்காவிட்டால் விபரீதம் நடப்பது உறுதி என்று அஞ்சியவர், வேறு வழியே இல்லை என்று கண்டவராக, 'முகம்மதுவைக் கொல்வது இருக்கட்டும்; உன் வீட்டிலேயே முஸ்லிம்களை வைத்துக் கொண்டு நீ முகம்மதுவை நோக்கிப் போவதைப் பார்த்தால் யாராவது சிரிக்கமாட்டார்களா?' என்று கேட்டார்.

நுஜமின் நோக்கம் அப்போது எப்படியாவது முகம்மதுவைக் காப்பாற்றுவதாக மட்டுமே இருந்தது. களப்பலியாக வேறு யாரையாவது இழக்கநேர்ந்தாலும் சரியே என்னும் முடிவில் இருந்தார். ஆகவே உமரின் சகோதரியும் அவளது கணவரும் முஸ்லிமாக மாறிவிட்டார்கள் என்கிற உண்மையை முதல்முதலாக உமரிடம் சொல்லிவிட்டார்.

அதனாலென்ன? முதலில் என் வீட்டுக்களையைப் பிடுங்கி விட்டுப் பிறகு முகம்மதுவிடம் போகிறேன் என்று சொல்லி விட்டு உமர் நேரே தன் சகோதரியின் வீட்டுக்கு ஓடத் தொடங்கினார்.

தம் சகோதரி பாத்திமாவின் வீட்டருகே உமர் சென்றபோது உள்ளே யாரோ ஓதிக் கொண்டிருக்கும் குரல் கேட்டது. சந்தேகமே இல்லை. நுஜம் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார் என்று கோபம் தலைக்கேறி, உருவிய வாளுடன் கதவை உடைத்துத் திறந்து உள்ளே பாய்ந்தார் உமர்.


உமரைக் கண்டதும் பாத்திமா, தாம் வைத்து ஓதிக்கொண்டிருந்த குர் ஆனின் பிரதியைத் தன் உடைக்குள் மறைக்கப் பார்த்தார். அவளது கணவனோ, தங்களை விட்டுவிடும்படி மன்றாடத்தொடங்கினார். ஆனால் உமர் விடவில்லை. தன் சகோதரியை அடித்து இரத்தக் காயப்படுத்திவிட்டு, மைத்துனரின் மீதுபாய்ந்தார். இருவரும் கட்டிப் புரண்டார்கள். அடித்துக்கொண்டு எழப் பார்த்தார்கள். மைத்துனரைக் கொன்றுவிடுவது என்று வெறிகொண்டு தாக்கிய உமருக்கு, சகோதரி காயப்பட்டு விழுந்ததும் சிறிதே சலனம் ஏற்பட்டது.

சட்டென்று தாக்குதலை நிறுத்திவிட்டு, "நீங்கள் வைத்து ஓதிக் கொண்டிருந்ததைக் கொண்டுவாருங்கள். அப்படி என்னதான் அதில் இருக்கிறது என்று பார்க்கிறேன்" என்றார்.

வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்கள் இப்படித்தான் மிகுந்த ரசமுள்ளவையாக எப்படியோ அமைந்துவிடுகின்றன.

தயக்கத்துடன் பாத்திமா எடுத்து வந்துகொடுத்த குர்ஆனின் அந்தச் சில பகுதிகளை வாசித்துப் பார்த்த உமர் தம்மையறியாமல் வாளைக் கீழே போட்டார். பிரமிப்பும் அச்சமும் கொண்டு அதுவரை இல்லாத கனிவும் அன்பும் மேலோங்கியவராகக் கண்கள் கலங்கி நின்றார்.

"இதென்ன! இந்த வசனங்கள் இத்தனை அழகும் சிறப்பும் கொண்டவையாக இருக்கின்றன! நிச்சயம் மனிதர் உருவாக்கியதாக இருக்கமுடியாது. என்றால், இது இறைவனின் வசனங்கள் தாம் என்று தோன்றுகிறது" என்றுபேசத்தொடங்கியவர், சில விநாடிகளில் "முகம்மது ஓர் இறை தூதர்தான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இதோ இப்போதே போய் அவரை சந்தித்து இதனை உரக்கச்சொல்கிறேன்" என்று அலறிக்கொண்டு ஓடத் தொடங்கிவிட்டார்.



இஸ்லாத்தின் சரித்திரத்தில் உமரின் இந்த மனமாற்றம் மிக முக்கியமானதொரு திருப்பம்.

இதே உமர்தான் முகம்மது நபியைச் சந்திக்க மறுகணமே முஸ்லிமாக மாறியவர். அது நாள்வரை இரகசியமாக மட்டுமே தொழுதுவந்த முஸ்லிம்கள் வெளிப்படையாக மெக்கா நகரில் உள்ள, க' அபாவில் தொழுகை செய்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது. பாதுகாவலனாக நின்றவரும் அவரேதான். பின்னாளில் அரேபிய மண்ணின் தன்னிகரற்ற இரண்டாவது கலீ:.பாவாக முடிசூடி அமர்ந்தவர். உமரின் ஆட்சிக் காலத்தின் போதுதான் அரேபியாவுக்கு வெளியிலும் இஸ்லாம் வெகுவேகமாகப் பரவத் தொடங்கியது.

உமர், கலீ:.பாவாக இருந்த காலத்தில் ஜெருசலேம், எகிப்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. ஒரு பெரும் படையெடுப்பின் இறுதியில் எகிப்தை அப்போது ஆண்டுகொண்டிருந்த (கிருத்தவர்களான) பைசாந்தியர்கள் என்கிற இனத்தவரை வீழ்த்தி, ஜெருசலேத்தில் காலெடுத்து வைத்தார் உமர்.

அப்போது ஜெருசலேத்தின் ஆர்ச் பிஷப்பாக இருந்தவர், நகரின் சாவியை (அடையாளச் சாவி தான்) தாமே மனமுவந்து உமரிடம் அளித்து, ஆளவரும்படி அழைப்பு விடுத்தது விநோதமான ஆச்சரியம்!

சரித்திரபூர்வமாக இன்று நமக்குக் கிடைக்கும் சான்றுகளின்படி கி.பி 619ஆம் ஆண்டுவரையில் கூட இஸ்லாம் அத்தனை ஒன்றும் வேகமாகப் பரவி விடவில்லை. அரபுதேசங்கள் பலவற்றில் முகம்மது நபியின் செல்வாக்கு பரவியிருந்தது; அவரை அடியொற்றி, இஸ்லாத்தில் பலர் இணைந்து கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. ஆனாலும் குறிப்பிட்டுச் சொல்லும் விதத்தில் மதமாற்றங்கள் நிகழ்ந்ததாகச் சொல்லிவிட முடியாது. முகம்மது ஒரு நபிதான் என்று ஏற்பவர்கள் இருந்தாலும் இஸ்லாத்தில் இணைவோரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

அந்த 619 ஆம் வருடம் முகம்மதுவுக்கு ஐம்பது வயதானது. அதே வருடத்தில், அறுபத்தி ஐந்து வயதான அவரது முதல் மனைவி கதீஜா காலமானார். உலகின் முதல் முஸ்லிம் பெண்மணி. பல அரபுப் பெண்கள் இஸ்லாத்தில் இணைவதற்குக் காரணமாக விளங்கியவர். முகமதுவின் உறவினர்கள் பலரே கூட இஸ்லாத்தை ஏற்பதற்கு கதீஜா மறைமுக காரணமாக இருந்து ஏராளமான உதவிகள் செய்திருக்கிறார். அவரது மரணம் முகம்மதுவுக்கு மட்டுமல்ல; அன்றைய திகதியில் இஸ்லாத்துக்கே மாபெரும் இழப்பு என்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு மரணம், முகம்மதுவைச் சிறுவயதில் இருந்தே தூக்கிவளர்த்த அவரது பெரியப்பா அபுதாலிப்பினுடையது. குறைஷியருக்கும் முகம்மதுவுக்கும் பகை முற்றிவிடாமல் இருக்கத் தம்மால் ஏதாவது செய்யமுடியுமா என்று இறக்கும்வரை முயற்சிசெய்து பார்த்த ஒரு நல்ல ஆத்மா அவர். அவரும் அதே வருடம் இறந்து போனார்.

ஆனாலும் துயரத்தில் துவண்டுபோய் அமர்கிற அளவுக்கு முகம்மதுவுக்கு அப்போது அவகாசம் இருக்கவில்லை. வெகு நாட்கள் மெக்காவில் அவர் வசித்துக் கொண்டிருக்கமுடியாத அளவுக்கு எதிர்ப்பாளர்களின் வன்முறை நடவடிக்கைகள் மிகுந்து கொண்டிருந்தன. ஏதாவது ஒரு முடிவுக்குவந்து எங்காவது இடம் மாறினால்தான் சரிப்படும் என்று பலர் தொடர்ந்து கருத்துக்கூறி வந்தார்கள். ஆனால் முகம்மது ஒருபோதும் தாமாக ஒரு முடிவை எடுத்துச் செயற்படுத்தியதில்லை. எத்தனை காலமானாலும் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இறை கட்டளை என்று ஒன்று அவருக்கு வந்தசேராதவரை இம்மி அளவு கூட அசையமாட்டார். ஆகவே, காலம் கனிவதற்காகக் காத்திருந்தார்.

(தொடரும்...)

# தாளம் பற்றைக்குள்

**வெள்ளவத்தை** தமிழர்கள் பெருமளவாக வாழும் பகுதி. அங்கு அழகிய கரையோரங்கள் அப்பகுதி மக்களை ஆசுவாசப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.



எனினும் காதல் என்ற பெயரில் இளைஞர்கள் புரியும் அட்டகாசத்தினால் கரையோரங்களுக்கு நிம்மதியாக பொழுதைக் கழிக்கவரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகிறார்கள்.

# அரங்கேறும் அசிங்கங்கள்

ஆம். கரையோரமாக வளர்ந்துள்ள தாழை மரங்களுக்கிடையே தான் அரங்கேறுகிறது அசிங்கமான காதல். திறந்தவெளியில் தாம் நினைத்ததைப் போல நடந்துகொள்ளும் காதலர்களின் நடத்தை காண்போரை தலைகுனிய வைக்கிறது.

நாம் இந்தக் கடற்கரைப் பகுதிக்குச் சென்றபோது அன்னாசி விற்கும் வியாபாரியொருவர் கூறிய தகவல்கள் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தின. சமூகத்தின் மிக மோசமான மறுபக்கம் என்பது இதுதானா எனவும் எண்ணத் தோன்றியது.

அந்த அன்னாசி வியாபாரி எமக்குக் கூறிய விடயங்கள் இவை.

நான் 14 வருடங்களாக இங்குதான் அன்னாசி விற்கிறேன். கொள்ளுப்பிட்டி முதல் வெள்ளவத்தை வரை பல தடவைகள் நடந்து நடந்தே கால் வலிக்கும். இருந்தாலும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியிருப்பதாலும் பழக்கப்பட்ட தொழில் என்பதாலும் சளைக்காமல் செய்துவருகிறேன்.

## வெள்ளவத்தை விசிட்

இங்கு எனக்கு நிறைய அனுபவம் கிடைத்திருக்கிறது. காதல் லீலைகள், கள்வர்கள் முதல் எத்தனையோ அநியாயங்களை நேரடியாகப் பார்த்து வருகிறேன்.

வெள்ளவத்தை தமிழர்கள் பெருமளவாக வாழும் பகுதி. அங்கு அழகிய கரையோரங்கள் அப்பகுதி மக்களை ஆசுவாசப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

எனினும் காதல் என்ற பெயரில் இளைஞர்கள் புரியும் அட்டகாசத்தினால் கரையோரங்களுக்கு நிம்மதியாக பொழுதைக் கழிக்க வரும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகிறார்கள்.

காதலர்களின் அட்டகாசங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. தாழை மரங்களுக்குள் கணவன் - மனைவி போல் அந்நியோந்நியமாக நடந்துகொள்பவர்களும் இருக்கிறார்கள்.

ஒருசிலர் தினமும் இந்தக் கரையோரங்களில் தான் பொழுதுபோக்குகிறார்கள். நான் அடிக்கடி காணும் ஓர் இளைஞர் இருக்கிறார். மெலிந்த உடம்புடன் தலைமயிர் அதிகமாக வளர்த்திருப்பார். அவர் வெவ்வேறு பெண்களை இங்கு அழைத்து வருவதைக் கண்டிருக்கிறேன். அப்போதெல்லாம் என்ன வாழ்க்கையடா இது என நொந்துகொண்டே அவர்களைக் கடந்து போனதுண்டு.

இந்தத் தாழை மரங்கள் அடர்ந்து வளர்ந்தவை போல வெளியில் காட்சி தரும். உள்ளே ஆட்கள் இருந்தாலும் வெளியில் தெரிவதில்லை. அதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்பவர்கள் அநாகரிகமான முறையில் நடந்துகொள்கிறார்கள். சிலரை பார்க்கவே கண்கூசும். அந்தளவுக்கு மோசமாக நடந்துகொள்வார்கள். அங்கே பாருங்கள், ஒரு அடர்ந்து படர்ந்ததாய் தாழை மரங்கள் தெரிகின்றனதானே? அதில் யாரும் இல்லை என நினைத்தீர்களா? இரண்டு காதல் ஜோடிகள் தாம் நினைத்ததைப்போல உல்லாசமாக இருக்கிறார்கள்.

எனது தொழில் அன்னாசி விற்பதுதான். ஆயினும் நான் அவர்களைப் பார்க்கும் நோக்கில் செல்வதில்லை. எனினும் என்னைக் கண்டதும் சிலர் முறையற்ற விதத்தில் திட்டித் தீர்ப்பார்கள் எனத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

நாம் இவருடன் பேசிக்கொண்டிருக்கும்போதே முச்சக்கர வண்டி சாரதியொருவரும் இணைந்துகொண்டார்.

இரவு வேளைகளில் தாழை மரங்களுக்கிடையில் நடக்கும் அட்டூழியங்களுக்கு அளவே இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இரவு வேளைகளில் மதுபான போத்தல்களுடன் அங்கு வரும் இளைஞர்கள் போத்தல்களையும் ஏனைய பொருட்களையும் அதே இடத்தில் எறிந்துவிட்டுச் செல்கிறார்கள். இந்தக் கொஞ்ச நாட்களாக பெண்களின் நடமாட்டமும் அதிகமாக இருக்கிறது என்றார் அவர்.

அவர் கூறிய அதிர்ச்சிதரும் தகவல் பாடசாலை மாணவர்களும் இங்கு வருகை தருகிறார்கள் என்பதுதான். இது எம்மை ஆழமாகச் சிந்திக்க வைத்தது.

பாடசாலை சீருடை தவிர்ந்த ஏனைய உடைகளில் வரும் பாடசாலை மாணவர்கள் தகாத வகையில் செயற்படுவதாகவே அவர் குற்றம் சுமத்துகின்றார்.

திறந்தவெளியில் தாழை மரங்களுக்கிடையில் இவ்வளவு விடயங்கள் நடப்பது யார் கண்களுக்கும் தெரியவில்லையா? அல்லது கண்டும் காணாததுபோல் சென்றுவிடுகிறார்களா?

உண்மையில் சிறு விடயங்கள் என நாம் கவனமெடுக்கத் தவறுபவை பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நிலைமையும் உண்டு.

**(நன்றி: இணையம்)** **(22 ஆம் பக்கம் பார்க்க....)**

# நீதிமன்றம் Vs பாராளுமன்றம்

# பார்வையாளர்களாக மக்கள்

**பா**ராளுமன்றத்துக்கும் நீதிமன்றத்திற்கு பலப்போட்டி நடந்து கொண்டிருக்கின்றது. உயர் அதிகார மையமாக உள்ள பாராளுமன்றமும், உயர் நீதி மையமும் நீயா? நானா? என்று இழுபட்டுக் கொள்வது நாட்டுக்கு நல்ல சமிக்ஞை இல்லை.

நீதிமன்றத்துக்கு பாராளுமன்றம் கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லை என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ 29.11.2012 அன்று பாராளுமன்றத்தில் கூறியிருப்பதானது இவ்விடயத்தை கூர்மைப்படுத்தியுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விஷேட தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து சபாநாயகருக்கும் தெரிவுக் குழுவின் உறுப்பினர்களுக்கும் உயர் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பாணையை நிராகரித்து உரையாற்றும்போதே சபாநாயகர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் பாராளுமன்றமானது அரசியலமைப்பின் பிரகாரம் நீதிமன்றங்களுக்கோ, வேறு எந்தவொரு நிறுவனங்களுக்கோ கட்டுப்படவேண்டிய அவசியமில்லை.

இதனாலேயே தற்போது நீதிமன்றத்தின் அழைப்பாணையை பாராளுமன்றம் மிக இலக்குவாக நிராகரித்துள்ளது.

இவ்விடயத்தில் அரசு விட்டுக் கொடுக்கப்போவதில்லை. ஆனால் அரசாங்கம் நீதிமன்ற விவகாரங்களில் தலையிடக்கூடாது. நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்றெல்லாம் அமெரிக்கா மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நாவின் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை அமெரிக்கா எடுக்கும் என்றும் தெரிகின்றது.

இலங்கை மீது மனித உரிமைகள் விடயத்தில் சரியாக நடந்து கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இவ்வாறான நிலையில் நீதித்துறைக்கும் பாராளுமன்றத்திற்கும் அதிகாரப் போட்டி எழுந்துள்ளது. இதில் நீதிமன்றத்திற்கு பாராளுமன்றம் கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லை என்று சபாநாயகர் உறுதியாக தெரிவித்துள்ளார். மறுபக்கத்தில் நீதிமன்றத்திற்கு பாராளுமன்றம் கட்டுப்பட வேண்டும் என்று கூறுவதற்கு நீதிமன்றம் முற்படவில்லை. அப்படியாயின் பாராளுமன்றத்தின் நிலைப்பாடு சரியானது என்றே தெரிகின்றது.

பாராளுமன்றமே நாட்டின் பலம் பொருந்திய அமைப்பு என்பதையிட்டு நாட்டு மக்கள் மகிழ்ச்சி கொள்வதற்கு முன்னர் எல்லோருக்கும் பொதுவான நீதி கிடைப்பதற்கு இந்த நாட்டில் எல்லையற்ற அல்லது கட்டுப்பாடற்ற வாய்ப்புகள் இல்லை என்ற மனோ நிலை ஏற்படுவதையும் மறுப்பதற்கில்லை.

**நாட்டின் மிக உயர்ந்த சபைகளான இரண்டு சபைகளும் இவ்வாறு முரண்படுவதால் நாட்டுமக்கள் பார்வையாளர்கள் பக்கமிருந்து பார்ந்துகொண்டு இருக்கின்றார்களே தவிர, பங்காளிகளாக இல்லை.**

**எது திணிக்கப்படுகின்றதோ அதை ஏற்றுக்கொண்டு வாழ்வதைத்தவிர நாட்டு மக்களாக எதையும் தீர்மானிக்கவோ அதை வெளிப்படையாக தமது உணர்வுகளை வலியுறுத்தவோ முன்வரப் போவதில்லை. இதனால் மக்களையும், அவர்களின் உணர்வுகளையும் எவரும் கவனத்தில் கொள்வதில்லை.**

நாட்டின் மிக உயர்ந்த சபைகளான இரண்டு சபைகளும் இவ்வாறு முரண்படுவதால் நாட்டுமக்கள் பார்வையாளர்கள் பக்கமிருந்து பார்த்து கொண்டு இருக்கின்றார்களே தவிர பங்காளிகளாக இல்லை.

எது திணிக்கப்படுகின்றதோ அதை ஏற்றுக் கொண்டு வாழ்வதைத் தவிர நாட்டு மக்களாக எதையும் தீர்மாணிக்கவோ வெளிப்படையாக தமது உணர்வுகளை வலியுறுத்தவோ முன்வரப் போவதில்லை. இதனால் மக்களையும், அவர்களின் உணர்வு களையும் எவரும் கவனத்தில் கொள்வதில்லை.

நீதித்துறையும் அரசும் மோதிக்கொள்ளுகின்ற சந்தர்ப்பங்களில், நீதித்துறையின் சுதந்திரம் என்று கூறிக்கொண்டு ஆளும் அரசின் எதிராளிகளும், அரசு மீதான விமர்சனப் போக்கைக் கொண்டிருக்கும் வெளிநாடுகளும் இலகுவாக அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கிவிடுகின்றன.

அவ்வாறனதொரு நிலைமை தற்போது இலங்கை அரசுக்கு எழுந்துள்ளது. இதில் அரசுக்கு பாதகமான நிலை என்னவென்றால், அரசு தனியே நீதித்துறையின் பிரச்சினைகளுடனோ,

**அலசுவது -மதியூகி**

மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுடனோ மட்டுமல்லாமல் தீராத இனப் பிரச்சினையுடனும் இருக்கின்றது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசுக்கு எதிராக பிரச்சினைகள் எழுகின்றபோது, பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு பதிலாக தற்காலிக சமரசங்களைக் காண்பதையும், காலதாமதங்களைக் கூறி இழுத்தடிப்பதையும் இலங்கை அரசுகள் தமது வழக்கமாக்கிக் கொண்டுள்ளது என்றொரு குற்றச்சாட்டும் உண்டு.

இதற்கிடையே இந்த நாட்டில் நீதி என்று ஒன்று இருக்குமானால் அது அனைவருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். ஆனால் இங்கே சிலர் தங்கள் தனிப்பட்ட இலாப பிரயோஜனங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்துவதை காண முடிகின்றது என்று கண்டி அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உடுகம புத்திர கித்த தேரர் கூறியிருக்கின்றார். அதுவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் திருமதி.மிக்சல் சூசனிடம் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கிடையேதான் மற்றுமொரு பிரச்சினையும் வடக்கிலிருந்து கிளம்பி இருக்கின்றது. அதுவானது யாழ். பல்கலைகழக மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவமாகும். இவ்விடயத்தையும் இலங்கை அரசுக்கெதிரான பிரசாரமாக புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் முன்னெடுப்பார்கள். இதன் எதிரொலிப்பு மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு மேலும் தலையிடிகளைத் தரவே செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

நீதித்துறையுடன் முறுகல், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகள், பல்கலைக்கழக மாணவர்களுடன் தொடரும் இழுபாடுகள், இன ஐக்கியத்துக்கு இடையூறாக இழுபடும் இனப்பிரச்சினை, இறுதி யுத்தத்தில் இராணுவம் புரிந்ததாக மனிதப் படுகொலைகள் என்ற குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்கள், சர்வதேச எதிர்ப்புகள், ஐ.நா. அமைப்புகளுடன் தொடரும் புரிந்துணர்வுக் குறைபாடுகளும், பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற சர்ச்சையில் ஆளும் அரசுக்குள்ளேயே சில அமைச்சர்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடுகள் இப்படி அரசுக்கு இருக்கும் பிரச்சினைகளின் வரிசை நீளமானது.

இவற்றுக்கிடையே அரசுக்கு தற்போது ஆறுதலாகவும், நிரந்தர மகிழ்ச்சியாகவும் இருப்பது, இன்னும் ஆறு வருடங்களுக்கு பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக ரணில் விக்கிரம சிங்கவே தலைவராக இருப்பார் என்பதுதான்.

தேர்தல்களின்போது மட்டும் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளாக இருக்கும் நாட்டு மக்கள் அதற்குப் பின்னர் நடந்தேறும் சரிக்கும், பிழைக்கும் பார்வையாளர்களாகவே இருக்கின்ற இயலாமை தொடர்கின்றது.

# உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகள் புதிய மாற்றங்கள்

**- பிரகஸ்பதி -**

**உள்ளூராட்சி** சபைகள் என்பது நமது நாட்டில் உள்ள நிருவாக கட்டமைப்புகளில் சாதாரண மக்களது தேவைப்பாடுகளை நிறைவு செய்து தருவதற்கான அமைப்பாக விளங்குகிறது என்ற வகையில் இந்த வாரம் உள்ளூராட்சி சபைகள் சில தரமுயர்த்தப்படவுள்ள விடயங்கள் குறித்து ஆராயலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பிரதேச சபைகளின் ஆயுள் காலம் ஒரு சில மாதங்களில் நிறைவடையவுள்ள நிலையில், அவற்றில் இரண்டை நகர சபையாக்கவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லா உறுதியளித்துள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்திருக்கிறார்.

கடந்த மாத இறுதிப் பகுதியில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் அதாவுல்லா தலைமையில் நடைபெற்ற மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி செங்கலடி மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேச சபைகள் நகர சபையாக மாற்றம் பெறவுள்ளன.

இந்தக் குறிப்பிட்ட கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். அத்துடன், பல்வேறு ஆலோசனைகள் தொடர்பான கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ் பிரதேசங்களில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் ஒரு வருடத்திற்கு பிற்போடப்பட்டன. ஆனால் அதுவும் முடிவுறு காலத்தை எதிர்நோக்கியுள்ளது. இந் நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எந்த சட்ட விதிகளுக்கு அமைய நடத்தப்படுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், புதிய சட்ட விதிகளுக்குக் கீழா அல்லது பழைய சட்டத்தின் கீழா தேர்தல் நடத்தப்படும் என்பது முதல் கேள்வியாக இருக்கிறது.

புதிய சட்டத்தின் கீழ் என்றால் எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். நில அளவைகள் திணைக்களத்தின் மூலம் எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டு அவை உறுதிப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டதன் பின்னரே அவற்றை கொண்டு தேர்தல் நடாத்தமுடியும் இது மேலும் காலதாமத்தை ஏற்படுத்தும்.

இந்நிலையில் எந்தக் கூட்டத்திற்கு அமைய தேர்தல் வைப்பது என்பது அடுத்த கேள்வியாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் ஒரு சில மாதங்களில் முடிவுறும் நிலையேற்பட்டுள்ளது. எனவே இதனை மேலும் நீடிக்காமல் பழைய நிலையின்படி தேர்தலை நடாத்தக் கூடியவாறு நடவடிக்கை எடுக்கமுடியும் என்ற நிலைமை காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கீழ் உள்ள ஒரு சில மயானங்கள் வர்த்தமானியில் அறவிக்கப்பட்டுள்ள போதும் அனேகமான மயானங்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்படவில்லை. அவைகளும் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானிப் படுத்தப்பட வேண்டும் என்ற நிலையும் உள்ளது. அத்துடன், மாவட்டத்தில் உள்ள மயானக் காணிகளை பொதுமக்கள் அபகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவற்றினை வர்த்தமானியில் பிரசுரித்து மயானக் காணிகளை பாதுகாக்க வேண்டும்.

இவ்விடயங்கள் குறித்து மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றத் துறை அமைச்சர் அதாவுல்லா எடுக்கும் தீர்மானங்களுக்கமையவே செயற்பாடுகள் இருக்கும் என்பது மாத்திரமே தற்போதைய தேவையாக உள்ளது.

அதேநேரம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட மேலே குறிப்பிட்ட பல கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தேர்தலை நடாத்த வேண்டும் என்றால் எல்லை நிர்ணயத்தை கால அவகாசம் இன்றி விரைவில் செய்யலாம். ஆனாலும் தேர்தலை நடத்துவதை தீர்மானிப்பது அரசாங்கமும் தேர்தல் திணைக்களமும் தான் புதிய முறையில் தேர்தலை நடத்துவது என்றால் அதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கமுடியும். பழைய ம்றைகள் தேர்தலை நடத்துவது தொடர்பில் எந்தளவு சட்ட வரைமுறைக்கு உட்பட்டது. அல்லது அதற்குட்பட்டு செய்ய முடியுமா? என்பது கேள்வியே.

அத்துடன், முக்கியமான மயானங்கள் தொடர்பான பிரச்சினை தொடர்பில் எல்லை நிர்ணயம் செய்து அவற்றை விரைவில் வர்த்தமானிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

**(17 ஆம் பக்கம் பார்க்க...)**

# கலாசார யுத்தம் திணிக்கப்படுகிறதா?

> நாம் தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும் சிங்களவர்களாயினும் எங்களுக்கென்றே உரித் தான பல உயர்சிறப்புக்கள் இருக்கின்றன. இது வரை நம் எல்லா சமூகங்களும் வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை நேர்த்தியானது, சிறப்பானது, கோணல்மாணல் இல்லாதது என்பதை உரத்துக் கூறுவதில் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்.
>
> ஆனால் நவீன நாகரிகம், மாற்றுக் கருத்து, மனித உரிமைகள், சம காலப்போக்கில் சார்ந்து வாழும் தன்மை, பெண் உரிமை என்றெல்லாம் மேற்குலகால் மூளைச்சலவை செய்யப்பட்ட, மேற்குலகில் தோற்றுப் போன சில விடயங்களை அவர்கள் இங்கே திணிக்க முற்படுகின்றார்கள்.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

"யாகாவராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்பது திருவள்ளுவரின் வாக்கு. அதாவது ஒருவர் எதைக் காக்கத் தவறினாலும் தனது நாவைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தவறினால் பெருத்த அவமானங்களையும் துயரத்தையும் சந்திக்க வேண்டிவரும் என்பதே இந்தப் பொன்மொழியின் அர்த்தமாகும்.

அதேபோல "எவர் ஒருவர் தன் இரு தாடைகளுக்குள் உள்ளதையும் தனது இரு தொடைகளுக்குள் உள்ள உறுப்பையும் தீயவழிகளில் பயன்படுத்த மாட்டேன் என வாக்குறுதியளிக்கின்றாரோ அவருக்கு நான் சொர்க்கத்தைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளிக்கின்றேன்" என இறைதூதர் முஹம்மது நபியவர்கள் அறிவுரை பகன்றார்கள்.

அதாவது தாடைகளுக்குள் உள்ள உறுப்பு நாவாகும், தொடைகளுக்குள் உள்ள உறுப்பு மர்மஸ்தானமாகும். இந்த இரண்டு உறுப்புக் களையும் தீய வழிகளில் பயன்படுத்தாது நல்ல வழிகளில் பயன்படுத்த வேண்டும் என்பதையே பெருமானாரின் இந்தப் போதனைகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

இந்த இரண்டு உறுப்புக்களும் சம்பந்தப்பட்ட தொன்றாகத்தான் இப்பொழுது ஊடகங்களில் அடிபடுகின்ற ஒரு பிரச்சினை அலசப்படுகின்றது.

கறந்த பாலும் பேசிய பேச்சும் மீண்டும் உரிய இடத்தைச் சென்றடையமாட்டாது என்பார்கள்.

பலமுறை சிந்தி ஒரு முறை பேசு என்றும் நம் முன்னோர் கூறுவார்கள். இந்த அறிவுரைகள் எல்லாம் நம்மவரின் காதுகளில் எடுபடுபதில்லை. கன்னா பின்னா என்று முன்யோசனை எதுவுமின்றி வாய்க்கு வந்ததை எல்லாம் உளறிவிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்ட பின்னர் முழிப்பார்கள். பின்னர் நான் அப்படித்தான் சொன்னேன் இப்படி நினைத்துச் சொல்லவில்லை என்றெல்லாம் சமாளிப்பார்கள்.

இது ஒரு புறமிருந்தாலும் சில விடயங்கள் தெரியாமல் செய்தது மாதிரி திட்டமிட்டு இடம் பெறுவதுமுண்டு.

அப்படியான ஒரு சமாச்சாரம்தான் கடந்த வார முரசில் வெளியான பி.பி.சி பேட்டியில் இடம் பெற்றிருந்த விடயம். கடந்த நவம்பர் மாதப் பிற்பகுதியில் ஊடகங்களில் முக்கிய இடம் பிடித்த செய்தி ஒரு கணம் இலங்கைத் திருநாட்டின் எல்லா சமூகத்தவர்களையும் திக்குமுக்காடச் செய்துவிட்டது.

அதுதான் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் விபச்சாரம் பெருந்துணை புரியும் என்ற தொனிப்பொருளில் அமைந்த விடயம். விபச்சாரத்தை சட்டபூர்வமாக்கி பெண்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமாம். இது சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சமூக ஆய்வாளரும் என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் ஸர்மிலா ஸெய்யித் எனும் ஒரு பெண்மணியின் பொன்னான ஆலோசனை.

சரி, இலங்கையில் இந்த நிறைவேற்று அதிகாரியின் நிறுவனம் எங்கே அமைந்திருக்கின்றது? இதன் ஏனைய உறுப்பினர்கள் யார்? இந்த நிறுவனம் எவ்வளவு காலமாக இயங்கி வருகின்றது? எவ்வாறான பணிகளை ஆற்றுகின்றது? எவ்வளவு காலமாக இந்த சமூக ஆய்வில் ஈடுபட்டிருக்கின்றது? என்றெல்லாம் கேட்டால் இதற்கான பதில் ஒன்றுமில்லை என்பதுதான். ஆனால், நிதி எங்கிருந்தோ வந்து சேர்ந்திருக்கிறது.

அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரான ஏறாவூரில் ஸர்மிலா ஸெய்யித் என்பவரின் பெற்றோரும்



சகோதரங்களும் வாழும் வீட்டின் ஒரு மூலையில் இந்த நிறுவனத்தின் பெயர்ப்பலகை தொங்க விடப்பட்டுள்ளது. இந்தப் பெயர்ப்பலகையைக் காட்டி அதனைப் பதிவு செய்து கொண்டு பெண்களின் பெயராலும் பாதிக்கப்பட்டவர்களின் பெயராலும் அங்கவீனமடைந்த எல்.ரீ.ரீ.ஈ முன்னாள் போராளிகளின் பெயராலும் நிதி பெறப்பட்டு மோசடிகள் இடம்பெற்றிருக்கக் கூடும் என இப்போது பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகிறது.?

ஆண்டாண்டு காலம் ஆயுத வன்முறைகளாலும் இயற்கை இடர்களாலும் பாதிக்கப்பட்டுப் போயிருக்கின்ற பெண்களைத் தூக்கிவிட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் அப்படிப்பட்ட பெண்களுக்கு வாழ்வளிப்பதற்குப் பதிலாக பெண்களின் வாழ்வை அழிக்கவல்லவா பெண்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் ஸர்மிலா போன்றோரின் கருத்து அமைந்திருக்கின்றது.

கடந்த கால கொடூரமான ஆயுத வன்முறைகளினால் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்துத் துவண்டு போயிருந்த நாம் இன்னமும் அதிலிருந்து மீண்டெழாத நிலையில் இப்படியொரு பேரிடி நம் எல்லோரினதும் தலையில் வந்து விழுந்திருக்கின்றது.

ஆயுத வன்முறைகளினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த எல்லா சமூகத்தவரும் ஈடு செய்யமுடியாத அளவு இழப்புக்களைச் சந்தித்தார்கள். அதேவேளை வடக்கு – கிழக்குக்கு வெளியே வாழ்ந்த சிங்கள,முஸ்லிம், தமிழ் மக்களும் கணிசமான அளவு பாதிப்புக்களை எதிர் கொண்டார்கள்.

உயிர்களைக் கொடூரமாகக் கொலை செய்து உடைமைகளை அழித்து எங்கள் எல்லோரையும் ஏதோ ஒரு வகையில் ஊனமாக்கிய அத்தகைய பயங்கரம் இப்பொழுது இல்லை.

இதனால் கடந்த முப்பது வருடங்களாக இயல்பு வாழ்க்கை சீரழிக்கப்பட்ட இலங்கை மாதாவின் பிள்ளைகளான தமிழ், முஸ்லிம் சிங்கள மற்றும் இன்னபிற சமூகத்தினரும் இப்பொழுது சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார்கள். ஆயினும், இழப்புக்களை ஈடுசெய்து கொண்டு அவர்கள் இன்னமும் மீண்டெழவில்லை.

எனினும் இப்பொழுது கிடைத்திருக்கின்ற இந்த தற்காலிக நிம்மதியைக் கூட சகித்துக் கொள்ள முடியாத சில சக்திகள் நன்கு திட்டமிட்டு ஆயுதப் போருக்குப் பதிலாக இப்பொழுது கலாசார யுத்தத்தை நம்மவர்கள் மீது திணித்து நமது பாரம்பரிய மத கலாசார பண்பாட்டு உயர் விழுமியங்களைச் சிதைத்து எல்லாவற்றையும் சின்னாபின்னப்படுத்த நன்கு திட்டம் தீட்டியிருக்கின்றார்கள் என்பது நடப்பு நிகழ்வுகளைப் பார்த்தால் தெளிவாகத் தெரிகின்றது.

நாம் தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும் சிங்களவர்களாயினும் எங்களுக்கென்றே உரித் தான பல உயர்சிறப்புக்கள் இருக்கின்றன. இது வரை நம் எல்லா சமூகங்களும் வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை நேர்த்தியானது, சிறப்பானது, கோணல்மாணல் இல்லாதது என்பதை உரத்துக் கூறுவதில் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும்.

ஆனால் நவீன நாகரிகம், மாற்றுக் கருத்து, மனித உரிமைகள், சமகாலப்போக்கில் சார்ந்து வாழும் தன்மை, பெண் உரிமை என்றெல்லாம் மேற்குலகால் மூளைச்சலவை செய்யப்பட்ட, மேற்குலகில் தோற்றுப்போன சில விடயங்களை அவர்கள் இங்கே திணிக்க முற்படுகின்றார்கள். அந்த சதி நாச சூழ்ச்சி வலையை நம்மவர்களைக் கொண்டே மிகவும் சூட்சுமமாகப் பின்னுகின்றார்கள். அதன்மூலமாக நமது இயல்பான சீரிய வாழ்க்கை முறையை சீரழிக்க அவர்கள் காத்திருக்கின்றார்கள் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன.

இத்தகைய சமூகவிரோத செயல்களை, மனித குலம் வெட்கித் தலைகுனியும் அநாகரிகங்களை அங்கீகரிக்க எடுக்கும் முயற்சிகளுக்கெதிராக தமிழ், முஸ்லிம் சிங்கள சமூகங்கள் தாம் இலங்கையர் என்ற கோதாவில் அணிதிரள வேண்டும். இணைந்து எதிர்த்து ஓங்கிக் குரல் எழுப்பவேண்டும். எமது எதிர்கால சமுதாயம் எயிட்ஸின் தாக்கத்தாலும் இன்னபிற அவமானங்களைச் சுமந்து கொண்டும் வாழப்போகும் சூழலை இல்லாதொழிக்க இன்றே திடசங்கற்பம் பூணவேண்டும்.

ஆய்வாளர்கள் மாற்றுச் சிந்தனையாளர்கள் என்று தங்களுக்குத் தாங்களே கூறிக்கொண்டு திரிகின்ற அறிவிலிகளின் முகத்திரைகளைக் கிழிக்கவேண்டும். இது அவசரமும் அவசியமும் ஆகும்.

இதற்குப் பின்னிற்போமானால் எமது பின்னுள்ள சமுதாயம் சரித்திரமில்லாமல் சாகநேரிடும். வடக்கு – கிழக்கு மற்றும் தெற்கின் நீண்ட நெடுங் கரையோரமெங்கனும் சுற்றுலாத் துறை என்ற பெயரில் சிவப்பு விளக்குப் பகுதிகள் தோன்றி அதில் நமது எதிர்கால இளஞ் சந்ததியின் வாழ்வு சூனியமாகிப் போய் துர்நாற்றம் வீச ஒரு போதும் நாம் இடமளிக்கக் கூடாது.

(தொடரும்...)

# மழுங்கடிக்கப்படும் திறமைகள்

வாகரை வாணி

குதித்தெழும்பும் குற்றால அருவியைப் போல் உதித்தெழும்பும் உணர்ச்சிகளைக் கொண்டவர்களே இளையோர். இந்த இளவயதில்தான் சுறுசுறுப்பும் பொது நலத்துடன் செயற்படும் ஆற்றலும் இயல்பாகவே ஏற்பட்டு விடுகின்றது.

இன்றைய காலகட்டதைப் பொறுத்தளவில் இளைஞர் சமுதாயம் மழுங்கடிக்கப்பட்டு சீரழிவுப்பாதையை நோக்கிச் செல்வதை காணமுடிகின்றது.

இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் எண்ணற்றவை: ஒரு குழந்தைக்கு முதன்முதலில் அறிமுகமாகும் சமூக அமைப்பு குடும்பமாகும். ஒருவனின் முழு ஆளுமை வளர்ச்சியில் மிகப்பெரும் பகுதி ஐந்து வயதிற்குட்பட்ட இப்பருவத்திலேயே இடம்பெறுகின்றது.

குடும்ப சூழலில் பாதுகாப்பான முறையிலும் உவப்பான முறையிலும் குழந்தை தனது இயல்பூக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள பெற்றோர் உறுதுணை புரிய வேண்டியது இன்றியமையாத தொன்றாகும்.

அரவணைப்போடு தாய்ப்பால் கொடுத்தல், அளவளாவி அன்போடு விளையாடுதல், மகிழ்ச்சியான சுத்தமான சூழலை உருவாக்கிக் கொடுத்தல் போன்ற அறநெறிகளை கைக்கொள்ளுவதன் மூலம் குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்க முடியும்.

நிறைவேற்றப்படாத பாலூக்கங்கள், உளத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை என்பன பிற்காலத்தில் நெறி பிறழ்வுள்ள நடத்தைகளுக்கு காரணமாக அமையலாம்.

ஒவ்வொருவருக்கும் திறமைகள் உண்டு. அவற்றை அவர்கள் வெளிப்படுத்த முயலும்போது பெற்றோர்கள் ஒருபோதும் தடை போடக்கூடாது. அதற்குப் பகரமாக அவர்ளை ஊக்கப்படுத்த வேண்டும்.

பெற்றோர் எப்போதும் இயன்ற வரைப் பிள்ளைகள் முன்னிலையில் பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளுவது மிகச்சிறந்தது. ஆவர்கள் முன்னிலையில் நல்ல வார்த்தைகளையே பிரயோகிக்க வேண்டும்.

பெற்றோர் தம்பிள்ளைகளுக்கு முன்னாலேயே பிழையான முன் மாதிரியாக இருந்தால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் தடம் புரண்டு விடும். இல்லையேல் குழந்தைகள் தவறான வழிகளில் ஈடுபடும்போது அவற்றைப் பெற்றோரால் சகித்துக் கொள்ளமுடியாத நிலை ஏற்படும்.

இன்று எத்தனையோ இளம் பராயத்தினர் தம் பெற்றோரின் அரவணைப்பு இல்லாததால் மனம் உடைந்து இளவயது திருமணம், பணத்திற்காக கொலை செய்தல், கொள்ளையடித்தல் கடத்துதல், கற்பழித்தல், மதுவிற்கு அடிமையாதல் என பல தீய செயல்களைச் செய்கின்றனர்.

இவற்றால் விவாகரத்துக்கள் அதிகரிப்பதுடன் மன உளைச்சல், சமூகத்துடன் ஒட்டி உறவாட முடியாத நிலை, அவமானங்கள், சிறைக்கைதியாகுதல் என்று பல துன்பங்களைச் சந்திக்கின்றனர். இவைதான் இளையோர்களின் ஆற்றல்களுக்கு வெளிப்படைத் தடைகளாய் உள்ளன.

அண்மைக்காலமாக நாம் எதிர் நோக்கிய ஆயுத வன்முறைச் சூழ்நிலையால் உருவான அநாதைகள் ஏராளமானோர் இன்று நம்மிடையே உள்ளனர். ஊன முற்றோர், கணவனை இழந்த காரிகைகள், கல்வியிழந்த சிறுவர்கள் என்று ஏராளம் பாதிப்புக்கள் இருக்கின்றன.

உடைமைகளையும் இழந்தோம், இறுதியில் உயிர்களையும் இழந்து விட்டோம். இந்த நிலையில் எதிர் காலம் பற்றி அழிவு பூர்வமாக இல்லாமல் ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வேண்டும்.

கல்விப் பயணம், கல்யாணப் பயணம், குடும்பப் பயணம் என இணைந்த உள்ளங்கள் இன்று இடப்பெயர்வுப் பயணத்தை நோக்கி விரைகின்றனர். அவுஸ்திரேலியா நாட்டிற்கு சென்றாலாவது நிம்மதி கிடைக்குமென ஆசையோடு சென்றவர்கள் இடைநடுவில் அலை கடலில் சிக்குண்டு மாண்டுபோன நிகழ்வுகள் ஏராளம் உள்ளன.

வளர்ந்துவரும் பொருளாதார நெருக்கடியால் ஒவ்வொருவரும் பணம் சம்பாதிக்க முயல்கின்றனர். அதற்காக அவர்கள் பல தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது.

வேலையின்றி வீட்டில் இருக்கும் தம் பிள்ளைகளை சில பெற்றோர் வெறுத்து ஒதுக்குகின்றனர். மற்றோருடன் ஒப்பிட்டு மனம் நோகச் செய்கின்றனர். அவர்களை உழைக்கத் தகுதியற்றவர்கள் எனக் கருதி வீட்டை விட்டு அனுப்புகின்றனர். இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கின்றனர். இது ஒரு கொடுமையான நிலைமை.

இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை எவ்வளவு படித்திருந்தாலும் பணத்தைக் கொடுத்தால் பதவி கிடைக்கும் என்ற நிலை தான் உள்ளது. விரக்தியடைந்த இளையவர்கள் பெற்றோரை வெறுக்கின்றனர். இதனால் அந்நிய தேசம் தேடிச் செல்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் ஆசிரியரோடு காதல், மாணவனால் ஆசிரியர் கர்ப்பம், தந்தையால் கர்ப்பமான மகள், கூலிக்கு வேலை செய்யும் சிறுவர்கள், முதியோரால் தாயான சிறுமி, காதலியைக் கொன்ற காதலன் என பல செய்திகளை நாம் அடிக்கடி பார்த்தும் கேட்டும் அறிகின்றோம்.

அதுமட்டுமா? விஞ்ஞானயுகம் இன்று வீறுகொண்டு எழுந்துவிட்டதனால் தொடர்பாடல் விருத்தி இளைஞர்களோடு நின்று விளையாடுவதைக் காணலாம்.

சிறுவர்கள் இணையத்தளங்களில் ஆபாசப்படங்களை பார்க்கின்றனர். முகப்புப் புத்தகம் (facebook) பார்ப்பதில் விருப்புடையோராக உள்ளார்கள்.

பெண்கள் கூட மதுப் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளார்கள். இதனால் கலாசாரச் சீர்கேடு தலைவிரித்தாடுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொளபவரே இவ்வுலகை ஆள முடியும் என்பது உண்மை.

ஓடுகின்ற பாம்பை கையில் பிடிக்கும் இளையோரே! எத்தனை சோதனைகள் உங்களை வந்து வாட்டினாலும் அவற்றை தகர்த்தெறியும் அசாத்திய துணிவும் தன்நம்பிக்கையும் உங்களிடம் நிறையவே இருக்கின்றது என்பதை உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதன் மூலமாக இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுங்கள். இதுவே உங்களை நற்பிரஜைகளாக மிளிர வழிவகுக்கும்.

# மிரளவைக்கும் வங்கி மோசடி!

**நூற்றுக்கணக்கான** மில்லியன் டொலர் பணம், ஆப்கானிஸ்தானின் காபுல் வங்கியில் இருந்து இரகசியமாக நாட்டைவிட்டு வெளியேறிய விபரம் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதற்கான விசாரணை அறிக்கை அண்மையில் வெளியாகியுள்ளது.

நாட்டைவிட்டு வெளியேறிய பணத்தில் ஒருபகுதி, ஆப்கானுக்கு வந்தபோகும் ஏர் லைன்ஸில் பணிபுரிந்த சிலரின் உதவியுடன், விமான உணவு ட்ரேகளில் மறைத்து வைக்கப்பட்டும் வெளியேறியுள்ளது.

இது தவிர சுமார் 28 வெவ்வேறு நாடுகளில் உள்ள வங்கி கணக்குகளுக்கும் ட்ரான்ஸ்.'.பர் செய்யப்பட்டுள்ளதை தற்போதுதான் தெரிந்து கொண்டுள்ளார்கள்.

விசாரணையில் தெரிய வந்த மற்றொரு விஷயம், காபுல் வங்கியில் பணிபுரிந்த அதிகாரிகளில் சிலர், மற்றும் அவர்களது நண்பர்கள் பெயர்களில் 861 மில்லியன் டொலர் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கடன்களுக்கு, ஒரு மாதாந்த தவணை தொகை கூட செலுத்தப்படவில்லை.

நாட்டில் இருந்த யுத்த சூழ்நிலை, அவ்வப்போது இடம்பெறும் தற்கொலைத் தாக்குதல்கள், தலைநகரிலேயே வெடித்துச் சிதறும் வெடிகுண்டுகள் என்ற குழப்பத்தில், வங்கியில் நடைபெற்ற இந்த மோசடியை யாரும் கவனிக்கவில்லை.

இதில் உள்ள மற்றொரு விவகாரம், யுத்தத்தின் பின் ஆப்கான் பொருளாதாரம் தள்ளாடிக் கொண்டிருந்த நிலையில், வங்கிகள் மீது அரசு இறுக்கமான கட்டுப்பாடுகளை வைத்திருக்கவில்லை.

அநேக வங்கிகள், இரண்டு செட் ஆவணங்களை வைத்துள்ளன. அரசு ரெகுலேட்டர்களுக்கு காண்பிக்க போலியாக ஒரு செட்ஆவணங்கள் உள்ளன. அதன் அடிப்படையிலேயே வங்கிகள் இயங்க அனுமதிக்கப்படுகின்றன.

நிஜமான செட் ஆவணங்கள், வங்கிகளின் பாதுகாப்பான அறையில் உள்ளன.

காபுல் வங்கியின் அதிகாரிகள் இதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, புகுந்து விளையாடி விட்டார்கள். இவர்கள் செய்த பல பண ட்ரான்ஸாக்ஷன்கள் போலி ஆவணங்களில் வராது. நிஜ ஆவணங்களில் பதிவானதா என யாரும் செக் பண்ணுவதில்லை.

வங்கியின் கிரெடிட் டிபார்ட்மென்ட், போலி ஆவணங்களில் பதிவுகளை செய்வதற்காக நூற்றுக்கணக்கான போலி




நிறுவன லெட்டர் ஹெட்டுகளை தயாரித்து வைத்துள்ளது. அதாவது, வங்கியே போலி லெட்டர் ஹெட்டுகளை வைத்து, தமது போலி கணக்குகளை நேர்ப்படுத்தும் நடைமுறை!

இதனால், வெளியேபோன பணத்தில், எது நிஜ நிறுவனத்துக்கு போனது, எது, போலி லெட்டர் ஹெட் ரிக் வெஸ்டில் போனது என்று கண்டுபிடிக்க வருடக்கணக்கில் ஆகும்! முழுமையான விசாரணையின்பின் தெரிய வரப்போகும் இறுதி மோசடிக் கணக்கு, நாட்டின் பொருளாதாரத்தை குப்புற விழுத்திவிடும் என்று கூறப்படுகிறது.

தற்போதைய விசாரணை அறிக்கை, ஆரம்பகட்ட ஊழல்களை கண்டுபிடித்துள்ளது. இந்த அறிக்கையில், உலகிலேயே மிகப்பெரிய வங்கி மோசடிகளில் ஒன்றாக, காபுல் வங்கி மோசடி இருக்கப் போகிறது என்று கூறப்பட்டுள்ளது! வங்கியில் இருந்து வெளியேறிய பணம், எலக்ட்ரோனிக் ட்ரான்ஸ்.'.பர் மூலம் 28 வெவ்வேறு நாடுகளுக்கு சென்றுள்ளன. இந்த 28 நாடுகளில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சுவிட்சலாந்து, அமெரிக்கா, தென்கொரியா, துருக்கி, ரஷ்யா ஆகிய நாடுகளும் அடக்கம்.

இதுதவிர, பாமிர் ஏர்வேஸ் என்ற விமான நிறுவன பைலட்டுகளுக்கும், இந்த வங்கி மேலதிக சம்பளம் கொடுத்திருக்கிறது. அதாவது பைலட்டுகளுக்கு அவர்கள் பணிபுரியும் ஏர்லைன்ஸ் ஊதியம் கொடுப்பதைவிட, வங்கி ஒரு ஊதியம் கொடுத்துள்ளது!

மார்ச் 2008ஆம் ஆண்டில் இருந்து, நவம்பர் 2010ஆம் ஆண்டுவரை பைலட்டுகளுக்கு கொடுக்கப்பட்ட மேலதிக ஊதியம், 3 இலட்சத்து 20 ஆயிரம் டொலர்! இந்த பண வழங்கலுக்காக வங்கி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியம் என்ன தெரியுமா? 'pilots of cash delivery!'

இந்த பைலட்டுகள் செலுத்திய விமானங்களில்தான், உணவு ட்ரேகளில் பணம் ஏற்றப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விமானங்கள் சென்ற நாடுகள் நான்கு. அவற்றில் ஒரு நாடு எது தெரியுமா? டட்டடாங் இந்தியா! மற்றைய மூன்று நாடுகளும், சுவிட்சலாந்து, பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா உட்பட 4 நாடுகளிடமும், காபுல் வங்கி அதிகாரிகளுக்கு சொத்துக்கள் உள்ளனவா என்று தகவல் கேட்க முடிவு செய்துள்ளது, ஆப்கான் அரசு!

---

# புலிகளின் வதை முகாமில் மணியம்




**சிறை** வாசலில் வந்து நின்ற இருவர்களில் ஒருவன், கையில் வைத்திருந்த ரோச் லைற் வெளிச்சத்தை உள்ளே பாய்ச்சி எனது பெயரை அழைத்தான்.

இப்படி திடீரென அழைப்பது அபூர்வமானபடியால் எல்லோரும் கடைக்கண்ணால் அவதானிப்பதைக் கண்டேன். காலையில் கால் விலங்குகளை வெட்டியது, இரவில் வந்து அழைப்பது, எனவே இது எனது விடுதலைக்குத்தான் என அவர்களின் எண்ணங்கள் ஓடியிருக்கும் என நினைக்கின்றேன்.

கதவைத் திறந்து என்னை வெளியே எடுத்த அவர்கள், விறாந்தையிலிருந்த அலுமாரிக்குள் பூட்டி வைக்கப்பட்டிருந்த கைதிகளின் சொந்த உடைகளில் என்னுடையதைத் தேடி எடுத்து அதனை அணியச் சொன்னார்கள். இந்தச் செய்கையைப் பார்த்ததும் எனது விடுதலை நிச்சயமானதுதான் என சக கைதிகள் தீர்மானித்தே விட்டனர்.

எனவே "எனக்குத் தெரியும். காலையிலை சங்கிலி வெட்டியதும் ஆளுக்கு அலுவல் பாப்பு தொடங்கீட்டுது எண்டு. இப்ப விசயம் தெரியுதுதானே?" என்ற வார்த்தைகள் பலரினது வாய்களிலிருந்து ஏககாலத்தில் புறப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

என்னை அவர்கள் வெளியே அழைத்து வந்தபோது ஒரு 'பிக்கப்' வாகனம் அங்கு நிற்பதையும் அருகில் காந்தி, உதயன் மற்றும் சிலர் நிற்பதையும் கண்டேன். அவசரம் அவசரமாக எனது கண்களை ஒருவன் கறுப்புத் துணியினால் கட்டினான். பின்னர் என்னை அவ்வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அவர்கள் எங்கோ புறப்பட்டார்கள்.

இரவு நேரத்தில் அச்சிறைச்சாலையினுள் இருந்து ஒருவர் வெளியே அழைக்கப்படுகிறார் என்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கும் என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். அநேகமானோர் வெளியே எடுக்கப்படுவது அவர்களது விசாரணைகள் முடிவுற்று, தண்டனைக்காலத்தை அனுபவிப்பதற்காக வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதற்காக இருக்கும். இரவின் அமைதியில் வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டு அந்தகார் வெளிகளில் இருளின் மறைப்பில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக சிலர் வெளியே எடுக்கப்படுவார்கள். ஒரு சிலர் ஊராருக்குத் தெரியாமல் அகால வேளையில் அவர்களது வீட்டு வாசலில் வைத்து விடுதலை செய்யப்படுவதற்காக எடுக்கப்படுவதும் உண்டு. இதில் எனது 'வெளியெடுப்பு' எதற்காகவென என்னால் ஊகிக்க முடியவில்லை.

எமது வாகனம் சிறிது நேரம் ஓடிய பின்னர் ஓரிடத்தில் தரித்து நின்றது. அங்கு வைத்து யாரோ ஒருவர் வாகனத்தில் ஏறிக்கொண்டார் என்பது புரிந்தது. நான் வாகனத்தின் பின்பக்கத்தில் நடுவில் இருத்தி வைக்கப்பட்டு, சுற்றிவர புலிக் காவலாளிகள் இருந்ததினால் ஏறியவரினதும் அங்கிருந்தவர்களினதும் உரையாடல்களை என்னால் செவிமடுக்க முடியவில்லை.

சிறிது நேர ஓட்டத்துக்குப் பின்னர் வாகனம் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு எனது கண்கள் அவிழ்க்கப்பட்டது. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். நாம் எல்லோரும் ஸ்ரான்லி வீதியிலிருந்த எமது புத்தகக்கடைக்கு முன்னால் நின்று கொண்டிருந்தோம். எதற்காக இந்த இரவு வேளையில் இங்கு வந்திருக்கிறார்கள் என எண்ணினேன். ஏனெனில் எமது கடையில் ஆயுதங்களோ அல்லது இரகசிய ஆவணங்கள் எதுவுமோ பதுக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை. அப்படியானால் எதற்காக இந்த வருகை?

கைதுசெய்யப்பட்ட பின்னர் இந்த ஒரு வாரத்தில் வெளி உலகைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை. இப்பொழுது தினமும் பழகிய அந்த இடங்களைப் பார்க்கையில், வேறோர் உலகத்தில் இருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. இரவு முதல் சினிமாக் காட்சியைப் பார்த்துவிட்டு, குழந்தைகளுடன் குதூகலமாக சம்பாதித்துக் கொண்டு குடும்பம் ஒன்று செல்வதைப் பார்க்கையில் ஆவலாகவும் சற்றுப் பொறாமையாகவும்கூட இருந்தது. நான் தமிழ் சினிமா பார்ப்பதை நிறுத்தி ஆண்டுகள் பலவாகிவிட்டன. கடைசியாகப் பார்த்த படம் 'புதிய வார்ப்புகள்' என்று ஞாபகம். அதுவும் இரவு இரண்டாம் காட்சி. நண்பர்களின் வற்புறுத்தலுக்காகச் சென்றது. அரைவாசி நேரம் தூங்கிவிட்டேன். இப்பொழுது அந்தக் குடும்பத்தைப் பார்க்க எனக்கும் சினிமா பார்க்கவேண்டும் போல இருந்தது.

இதைத்தான் ஒன்று இல்லாதபோதுதான் அதன் அருமை தெரியும் என்று சொன்னார்களோ? சுதந்திரத்தின் அருமையும் அது இல்லாதபோதுதான் அபரிமிதமாக தெரிகிறது. அது நாடுகளுக்கும் பொருந்தும். தனி மனிதர்களுக்கும் பொருந்தும்.

என்னைக் கூட்டி வந்தவர்கள், "உங்கடை புத்தகக்கடைதான். இந்தாங்கோ திறப்பு, உங்கடை கையாலை திறவுங்கோ" எனச் சொல்லி கடைத் திறப்பை எனது கையில் திணித்தனர். அவர்களது கூற்றில் தேவையுடன் ஒருவித கிண்டலும் இருப்பதை அவதானித்தேன்.

திறப்பை வாங்கி கடையைத் திறந்தேன். கடையில் மின்சாரம் இல்லாதபடியால் அவர்கள் இரண்டு மூன்று ரோச் லைற்றைப் பிடித்துக்கொண்டு உள்ளே வந்தனர். உள்ளே வந்த பின்னர்தான் அவர்கள் வரும் வழியில் அழைத்து வந்த நபரை எனக்கு அறிமுகம் செய்தனர். அவரைச் சுட்டிக்காட்டிய காந்தி "இவர்தான் மாதவன் மாஸ்டர். 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர்" என்று சுருக்கமாக அறிமுகம் செய்தான். பொதுவாக புலிகள் தமது ஆட்கள் யாரையும் வெளி ஆட்களுக்கு அறிமுகம் செய்வதில்லை. எனவே இந்த அறிமுகம் பெருமைக்காகவோ என்று எண்ணினேன். அதாவது, 'இடதுசாரிகளிடம் இருப்பதுபோல எம்மிடமும் அரசியல் விற்பன்னர்களும் தத்துவார்த்த வாதிகளும் இருக்கிறார்கள்' என்று காட்டவோ?

நான் அப்படி எண்ணியதிற்கு ஒரு காரணம் இருந்தது. புலிகள் 'ஈழநாதம்' தினசரி உட்பட பல மாத வார இதழ்களை வெளியிட்டு வந்தாலும், அவர்களது கருத்தைக் கூறுகின்ற உத்தியோகபூர்வ பத்திரிகை 'விடுதலைப் புலிகள்' தான். எனவே அதன் ஆசிரியர் என்பவர் 'முற்றும் தெரிந்த' ஒரு மேதாவியாகத்தானே இருப்பார்?

உள்ளே அவர்கள் நாலா புறமும் ரோச் வெளிச்சத்தைப் பாய்ச்சி எதை எதையோ பார்த்தார்கள். அங்கு கூடுதலாக புலிகளுக்குப் பிடிக்காத சீன வெளியீடுகள்தான் பெருந்தொகையாக அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சீனப் பெருந்தலைவர் மா ஓசேதுங் அவர்களின் 'தேர்ந்தெடுத்த இராணுவப் படைப்புகள்' என்ற ஆங்கில நூலும் இருந்தது. அதைக் கையிலெடுத்த மாதவன் மாஸ்டர், "வேறு ஏதாவது இராணுவம் சம்பந்தமான புத்தகங்கள் இருக்குதா?" என என்னிடம் வினவினான். நான் அதற்கு "இதுதான் மாஓவின் மிகச் சிறந்த நூல்" எனப் பதிலளித்தேன்.

அப்போது அவன் என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டு மிகவும் சீரியஸான முறையில், "ஆனால் மாஓவின் மக்கள் யுத்தப்பாதை எங்கடை போராட்டத்துக்குச் சரிவராது" என்று கூறினான். 'மக்களைச் சார்ந்திருக்காத இவர்களது போராட்டம் ஒருபோதும் வெற்றி பெறாது' என நான் எனக்குள் எண்ணிக்கொண்டாலும் அமைதியாக நின்றேன். மக்களுக்காக என்று சொல்லிக் கொண்டு, இவர்கள் அவர்களது ஹீரோக்களாக நின்று எம்.ஜி.ஆர் பாணியில் (அதனால்தான் எம்.ஜி.ஆருக்கும் இவர்களைப் பிடித்துக் கொண்டதோ என்னவோ?) நடாத்தும் போராட்டம் 'கன' தூரத்துக்கு ஓடாது என எண்ணினேன். மாதவன் மாஸ்டர் எமது புத்தகக்கடைக்குள் மேலும் சில புத்தகங்களை எடுத்துக் கொண்டான்.

அந்த நேரத்தில் காந்தி திடீரென என்னை நோக்கி, "விவேகானந்தன் தந்த பெட்டி ஒண்டு உங்களிட்டை இருக்காம். எங்கை அது" எனத் திடீரெனக் கேட்டான். அவன் கேட்ட பின்னர்தான் எனக்கே அதுபற்றி நினைவுக்கு வந்தது. இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில், தனது வீட்டில் மார்க்சிய புத்தகங்களை (அதுவும் அதில் பெரும்பாலானவை இந்தியர்களுக்குப் பிடிக்காத சீன வெளியீடுகள்) வைத்திருப்பது நல்லதல்ல என்று கருதிய தோழர் விவேகானந்தன் (அன்ரன்), தன்னிடம் இருந்த சில புத்தகங்களை ஒரு கடதாசிப் பெட்டியில் போட்டு, அந்த வகையான புத்தகங்களை மட்டுமே விற்பனை செய்து வந்த எமது கடையில் கொண்டு வந்து வைத்திருந்தார். அதைத்தான் இப்பொழுது இவர்கள் கேட்கிறார்கள்!

புலிகளது கேள்வியை வைத்து என்னால் ஒன்றை ஊகிக்க முடிந்தது. அதாவது அவர்கள் தமது விசாரணையில் விவேகானந்தன் வாழ்க்கையின், அவரது அரசியல் வேலைகளின் முக்கியமான விடயங்களை மட்டுமின்றி, அவரது ஒவ்வொரு அசைவையும் கூட துருவித் துருவி விசாரித்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

(துன்பியல்கள் தொடரும்...)




**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## வாரம் ஒரு திருக்குறள்



**பேதைமை**

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக் கழுந்தும் அளறு.**

எழுபிறப்பிலும்தான் புகுந்து அழுந்துவதற்கு உரியஶ்ரீ நரகத் துன்பத்தைப் பேதை தன் ஒரு பிறவியில் செய்துகொள்ள வல்லவனாவான்.

குறள்:835

## 3D தொலைக்காட்சி



உலகில் முதல் 3D தொலைக்காட்சி சேவையை சமீபத்தில் சோதனை முறையில், சீனாவில் உள்ள தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒன்றிணைந்து துவங்கி உள்ளன. நிகழ்ச்சிகளை சோதனை முறையில் ஒளிபரப்பும் செய்துவருகிறது. நம்ம ஊருக்கு 3D சேவைப் எப்போ வரும்?

## 17 வயது 25 கோடி



உலகளவில் அதிக ரசிகர்களைக் கொண்டவர், கனடாவைப் சேர்ந்த 17 வயதுப் பொப் பாடகர் ஜஸ்டின் பீபர். மிக இளம் வயதில் தனது இசைத் திறமையால் கோடிக் கணக்கான பணம் சம்பாதிக்கும் ஜஸ்டின், ஏழை மாணவர்களுக்காக உதவிகளும் செய்து வருகிறார். கனடாவில் ஓர் அறக்கட்டளையைக் கவனித்துவரும் ஜஸ்டின், ஏழை மாணவர்கள் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விடுமுறை தினங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காக இவர் அளித்திருக்கும் தொகை மட்டும் 25 கோடி.

## எரிமலை வீடுகள்



ஈரான் நாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள கன்டோவுன் கிராமத்திற்குச் செல்பவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிடுவார்கள். அங்கு கிராமவாசிகள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பது மட்டுமல்ல, அவர்களது வீடுகள் கோன் அமைப்பில் பாம்புப் புற்றுகள் போல உள்ளன. இதைப் புதிதாகப் பார்ப்பவர்கள் வீடுகளை அமைந்து இருப்பதாக நினைப்பார்கள். ஆனால் உண்மையில் இது இயற்கையாய் அமைந்தது.

700 வருடங்களுக்கு முன் எரிமலையிருந்து வெளியான சாம்பல் குழம்பினால் உருவானது. நாளடைவில் சாம்பல் இப்படி மாறிவிட்டது. முதலில், மங்கோலியப் படைகள் எதிரிகளிடமிருந்து மறைந்து கொள்வதற்காக, இதில் குகைகளை அமைத்தனர். பின்னர், இதுவே. ஈரானிய மக்களின் வசிப்பிடமாகவும் ஆகிவிட்டது. இதைப் பார்ப்பதற்காகவே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் செல்கின்றனராம்.

# தங்க வாத்தும் பாதி அப்பமும்!



வெகுகாலத்துக்கு முன்பு, ஸ்கொட்லாந்தில் ஒரு விவசாயி இருந்தான். அவன் பெயர் வில்ஃப்ரெட். வாத்துகளை வளர்ப்பது அவனது தொழில். வாத்துகளையும் முட்டைகளையும் விற்பான். ஒரு முறை, ஒரு வாத்து அடைகாத்த முட்டை ஒன்று உடைந்து, வாத்துக் குஞ்சு வெளியே வந்தது. அதைப் பார்த்து வியப்படைந்தான் வில்ஃப்ரெட். அந்த வாத்துக் குஞ்சு தகதகக்கும் தங்க நிறத்தில் இருந்தது.

"ஆ! இந்த வாத்துக் குஞ்சு அதிசயமான பிராணிதான்!" என்று உறுதியாக நம்பினான் வில்ஃப்ரெட். அதனால், அதை மிகவும் கவனமாக வளர்த்தான். அவனது நம்பிக்கை வீணாகவில்லை. வாத்துக் குஞ்சு வளர்ந்து, பெரிய தங்க வாத்து ஆனது. அது, தங்க முட்டையிட்டது. அப்போது நண்பன் பீட்டர் அங்கே வந்தான். "எல்லாம் உன் அதிர்ஷ்டம்தான் வில்ஃப்ரெட்!" என்ற பீட்டர், "சிறப்பான இத்தகைய அரிய பிராணிகளும் பொருட்களும் ராஜாவுக்கு உரிமையானவை. அதனால், நீ இந்த வாத்தை ராஜாவிடம் கொடுத்துவிடுவதுதான் நல்லது. அவர் உனக்குப் பரிசுகள் தருவார்!" என்றான். பீட்டர் சொல்வது சரிதான் என்று வில்ஃப்ரெட்டுக்குத் தோன்றியது. அவன், வாத்தை எடுத்துக் கொண்டு அரண் மனைக்குப் புறப் பட்டான். ஒரு பெரிய காட்டைக் கடந்துதான் அரண்மனைக்குச் செல்லவேண்டும். படைவீரர்களால் தேடப்பட்டுவரும் ஒரு கொள்ளைக்காரன் அந்தக் காட்டில்தான் இருந்தான். பாங்கோ என்று அவன் பெயரைச் சொன்னாலே, எல்லோரும் பயந்து நடுங்குவார்கள்.

எனவே, வில்ஃப்ரெட் பயந்து பயந்து காட்டு வழியே சென்றான். அப்போது அவன் முன்னால் பாய்ந்து வந்துநின்றான் பாங்கோ.

"அடேய்! உன்னிடம் இருக்கும் பணத்தை எடு!" என்று இரட்டைக் குழல் துப்பாக்கியை நீட்டினான்.

"என்னிடம் பணம் இல்லை. ஒரே ஒரு வாத்துதான் இருக்கிறது. இதை ராஜாவிடம் கொடுப்பதற்காக எடுத்துச் செல்கிறேன். வாத்தை என்னிடம் இருந்து பறித்துக்கொண்டால், ராஜா உன்னைத் தண்டிப்பார்!" என்றான் வில்ஃப்ரெட்.

அதைக் கேட்ட பாங்கோ, 'இவன் சொல்வது சரிதான். இந்த வாத்தைப் பிடுங்குவதால் என்ன பயன்? தேவை இல்லாமல் ராஜாவின் கோபத்துக்கு ஆளாகவேண்டும். அதற்குப் பதிலாக, இவனுக்கு ராஜா கொடுக்கிற பரிசு களைப் பறித்துக்கொள்ளலாம்!' என்று நினைத்தான்.

பாங்கோ துப்பாக்கியை அகற்றி விட்டுச்சொன்னான், "உன்னை நான் சும்மா விடுகிறேன். ஆனால், ராஜா தருகிற பரிசில் பாதியை எனக்குத் தர வேண்டும்!"

"நிச்சயம் தருகிறேன்!" என்று வில்ஃப்ரெட் சம்மதித்தான். பிறகு, வாத்துடன் அரண்மனைக்குச் சென்றான். தங்க வாத்தைக் கண்டு ராஜா பெரிதும் வியந்தார்.

"யாரங்கே? இந்த அற்புதமான பரிசைக் கொண்டுவந்த இவருக்கு, அருமையான விருந்து கொடுங்கள்!" என்று கட்டளை இட்டார்.

விருந்து முடிந்தபிறகு, வில்ஃப்ரெட்டுக்கு விலை உயர்ந்த பரிசுகள் தரச் சொன்னார் ராஜா. அப்போது வில்ஃப்ரெட், 'ராஜாவே' எனக்கு ஒரு அப்பம் மட்டும் போதும். அதுவும் ஒரு பகுதியில் மயக்க மருந்து கலந்துசெய்த அப்பம்!" என்றான்.


ராஜா அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டார். அவன் கேட்டவாறு அப்பத்தைத் தயாரித்துக் கொடுத்தார்கள். வில்ஃப்ரெட் நேராக பாங்கோவிடம் வந்து சொன்னான், "ராஜா எனக்கு இந்த அப்பம் மட்டும்தான் கொடுத்தார். இதில் பாதியை நான் எடுத்துக்கொள்கிறேன்!"

வில்ஃப்ரெட் அப்பத்தின் நல்ல பகுதியைப் பிட்டுத் தின்றான். மிச்சத்தை பாங்கோவிடம் கொடுத்தான். சினம் கொண்ட பாங்கோ, வில்ஃப்ரெட்டை சோதனையிட்டான். அவன் எதையும் ஒளித்துவைத்து இருக்கவில்லை என்பது உறுதிப்பட்டது. ஏமாற்றம் அடைந்த பாங்கோ ஏற்கெனவே பசியில் இருந்ததால், பாதி அப்பத்தை 'இதுவாவது கிடைத்ததே' என்று நினைத்தபடி தின்று முடித்தான். தலை சுற்றியது உடனடியாக மயங்கிக் கீழே விழுந்தான்.

வில்ஃப்ரெட் காத்திருந்தது இதற்குத்தானே.

பாங்கோவைத் தூக்கிக் கொண்டு விரைவாக அரண் மனைக்குத் திரும்பிச் சென்றான். நடந்ததை எல்லாம் ராஜாவிடம் தெரிவித்தான். படைவீரர்கள் பாங்கோவைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். அறிவாளியான வில்ஃப்ரெட்டுக்கு ராஜா, மதிப்பு உயர்ந்த பரிசுகளைக் கொடுத்து அனுப்பிவைத்தார்.

## தேசிய மலர்கள்



| | |
|---|---|
| இந்தியா | - தாமரை |
| பாகிஸ்தான் | - மல்லிகை |
| ஆஸ்திரேலியா | - கொன்றை |
| இத்தாலி | - வெள்ளை லில்லி |
| சீனா | - திராட்சை மலர் |
| ஜப்பான் | - செவ்வந்திப்பூ |
| இங்கிலாந்து | - ரோஜா |
| எகிப்து | - தாமரை |
| பிரான்ஸ் | - லில்லி |
| வங்கதேசம் | - வெள்ளை அல்லி |
| ரஷ்யா | - சாமந்தி |

## பொது அறிவு

1.ரோம் பிரிட்டனை வென்ற ஆண்டு எது ?
1.கி.பி. 43

2.சூயஸ் கால்வாய் திறந்த ஆண்டு எது ?
2.1869

3.இரத்தமில்லா புரட்சி எந்த ஆண்டு நடைபெற்றது ?
1688

4.டிரபால்கர் யுத்தம் நடந்த ஆண்டு எது ?
1917

5.ஹிட்லர் முதன் முதலாக பதிவியேற்ற ஆண்டு எது?
1933

6.ஆங்கிலப்புரட்சி ஏற்பட்ட ஆண்டு எது ?
1660

7.பர்மா .இலங்கை விடுதலையான ஆண்டு எது ?
1948

8.லெனின் மறைந்த ஆண்டு எது ?
1924

9.விக்டோரியா மகாராணி மறைந்த ஆண்டு எது ?
1901

10.அமெரிக்க சுதந்திர பிரகடனம் எந்த ஆண்டு ?
1776

## அக்பர் - பீர்பால் கதை

# அழைத்து வா!



எம்.எல்.லாபீர்

**ஒருநாள்** - அக்பர் பாதுஷா காலைக்கடன்களை நிறைவேற்றிய பின்னர் சிப்பாயை நோக்கி "அழைத்து வா" எனக் கட்டளையிட்டார்.


சிப்பாய்க்கு ஒன்றும் விளங்கவில்லை. இரண்டாம் தடவை கேட்கக்கூடிய தைரியமும் இல்லை. எவ்வளவோ யோசனை செய்தும் அரசர் யாரை அழைத்து வரச்சொன்னார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மனக்குழப்பத்துடன் சிப்பாய் பீர்பாலிடம் சென்றான். அவர் ஏதாவது உபாயம் சொல்வார் என்று முழுமையாக நம்பினான்.

கை, கால், முகம் கழுவிய பிறகு பாதுஷாவுக்கு சவரம் செய்துகொள்ள ஞாபகம் வந்திருக்கலாம். அதனால் நாவிதனை அழைக்குமாறு கட்டளையிட்டு இருக்கலாம் என பீர்பால் புரிந்துகொண்டார். எனவே "நாவிதனை அழைத்துக்கொண்டு போ" எனக்கூறினார்.

நாவிதன் பாதுஷாவுக்கு முன் நின்றபோது, அவர் சிப்பாயை நோக்கி, "யார் சொன்னதன் பேரில் இவனை அழைத்து வந்தாய்" எனக் கேட்டார். பீர்பால் சொன்னதன் பேரில் எனப் பதிலுரைத்தான். இதனைக் கேட்ட பாதுஷா பீர்பாலின் புத்தி சாதுரியத்தை மனதாரப் புகழ்ந்தார்.

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 17.12.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல 969**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 967**

பரிசுக்குரியவர்:

**வ.பிரணவி, கிருஷ்ணாநகர், முழங்காவில்.**

பாராட்டுக்குரியவர்கள்

01. A.J. யூட்தனிஷ்டன், தாழ்பாடு றோட், எழுத்தூர், மன்னார்.
02. நா.மதுசனா, அம்பகர் வீதி, பிரம்படி, கொக்குவில்.
03. ரா. உஷாந்தினி, யா/ஶ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.
04. ச.அபிஷன், சேனையூர் -06, கட்டை பறிச்சான்.
05. க.பானுஜா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
06. கு.அருள்ராஜ், கலத, கம்பளை.
07. ஜே.ஆஷிகா, சாந்த செபஸ்தியன் வீதி, கொழும்பு -12
08. ப.மதுமிதா, அநுராதபுர வீதி, புத்தளம்.

# கொள்ளை ராணி பூலான்தேவி



## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**134**

### ஒரு வீட்டில்

ஸ்ரீராமின் ஆட்கள் ஐந்து பேர் தங்கியிருந்தனர். கிராமத்துப் பெண்களுடன் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர்.

அடுத்த வீட்டில்தான் ஸ்ரீராமும், லாலா ராமும் அவர்கள் ஆட்கள் மூன்று - நான்குபேரும் இருந்தனர். ஸ்ரீராமுடன் அன்று குசுமா வரவில்லை.

கிராமத்துக்குள் புகுந்த பூலான் கோஷ்டி முதல் வீட்டுக்குள் புகுந்துவிட்டது. அங்குதான் ஸ்ரீராமும், லாலா ராமும் இருக்கிறார்கள் என்று நினைத்து விட்டனர்.

அந்த வீட்டுக்குள் புகுந்தபோது தடுக்க முற்பட்ட ஒருவனைத்தான் மான்சிங் சுட்டான்.

அந்தச் சத்தம்தான் எங்கும் எதிரொலித்தது. அந்தச் சத்தம்தான் ஸ்ரீராமையும் லாலா ராமையும் எச்சரித்துத் தப்பச் செய்தது.

ஸ்ரீராமின் ஆட்களை கயிறுகள் கொண்டு கட்டிப்போட்டார்கள். அடி தாங்காமல் அவர்கள் கதறினார்கள்.

ஸ்ரீராமும், லாலாராமும் அடுத்த வீட்டில் இருப்பதாகக் காட்டிக் கொடுத்தார்கள்.

பூலானுக்கு எரிச்சலாக வந்தது. "அவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள்!" என்றாள் வெறுப்பாக.

ஆனால் அவர்கள் ஓடவில்லை. அந்தக் கிராமத்தில் ஒரு வீட்டில் கொல்லைப் புறத்தில் ஒழிந்திருந்தார்கள். கிராமத்திற்குள் செல்லும்போது பாபாவின் ஆட்கள் ஒருவரே இயக்கும் சிறிய ஒலிபெருக்கி ஒன்றுடன்தான் செல்வார்கள். கட்டளைகள் போடவும், எச்சரிக்கை செய்யவும், அறிவிப்புச் செய்யவும் அது பயன்படும்.

பூலான் கோஷ்டியிடமும் ஒரு ஒலிபெருக்கி இருந்தது. அதனை கையில் எடுத்த பூலான், "டேய் ஸ்ரீராம், தேவடியா மகனே, நீ மீசைவைத்த ஆண்பிள்ளையாக இருந்தால் என் முன்னால் வாடா! பண்ணையார் நாயே, இங்கே எங்கேதானடா நீ ஒழிந்து கிடக்கிறாய் தொடை நடுங்கி மகனே! முதுகுக்குப் பின்னால் இருந்துதானடா உன்னால் தாக்க முடியும். வாடா, துணிவிருந்தால் வாடா!"

பூலானின் குரல் கிராமம் எங்கும் எதிரொலித்தது. கிராமம் முழுவதும் பயத்தில் உறைந்ததுபோல நிசப்தமாக இருந்தது.

நாய்கள்கூட குரைக்கப் பயந்து வாலைச் சுருட்டிக் கொண்டு எங்கோ பதுங்கிக்கொண்டன.

"டேய்... டேய்... பண்ணையார் நாயே! உன் ஆட்கள் ஐந்து பேரையும் சுட்டுத்தள்ளப் போகிறேனடா. முடிந்தால் வந்து தடு பார்க்கலாம். வாடா... எங்கேயடா பதுங்கி இருக்கிறாய்...? தூ... நீயெல்லாம் ஒரு ஆண் பிள்ளை. உனக்கும், உன் தம்பிக்கும்.... இருக்கடா நாய்களே...தூ!"

ஆவேசம் வந்துவிட்டால் பூலானின் வாயிலிருந்து கெட்ட வார்த்தைகள் கொட்டத் தொடங்கிவிடும். மான்சிங்குக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது.

"ம்...சுடுங்கள்... சுட்டுத்தள்ளுங்கள்!" என்றாள் பூலான்.

கயிறுகளால் பிணைக்கப்பட்டுக் கிடந்த ஐந்து பேரும் மரணப் புலம்பல் எழுப்பினர்.

"எங்களை மன்னியுங்கள் பூலான்ஜி..." என்று கூவினார்கள்.

பூலான் கோஷ்டியினரின் துப்பாக்கிகள் வாய்களைத் திறந்து ரவைகளைத் துப்பின.

முதலில் மான்சிங் சுட்டான்.

தவறாமல் குறிவைக்கக் கூடியவன் மான்சிங்.

அவன் சுட்ட ரவை ஒருவனது நெற்றியின் மையத்தில் பொத்தல் போட்டது.

மான்சிங்கைத் தொடர்ந்து ஏனையோரும் சுட்டுத்தள்ளினார்கள்.

ஸ்ரீராமின் சகாக்கள் ஐந்து பேரும் மரக்கட்டைகள் போல சரிந்து கிடந்தார்கள். இரத்தம் வெள்ளமாய்ப் பரவியது.

மேலும் இரண்டுபேரை பூலானின் ஆட்கள் பிடித்து வந்தார்கள். அவர்கள்இருவரும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பொலிசாருக்குத் தகவல் கொடுப்பவர்கள். இரண்டு பேரையும் தனித்தனியாக மரங்களோடு சேர்த்துக் கட்டிப்போட்டார்கள்.

இரண்டு பேருக்கும் மொட்டை அடிக்கும்படி உத்தரவிட்டாள் பூலான்.

மளமளவென்று கத்தரித்து, சரசரவென்று சுத்தமாக வழித்து முடித்தார்கள். வழித்தபோது அவர்கள் தலைகளில் கத்தி சீறியதில் இரத்தம் பீய்ச்சியது.

இரண்டு பேரையும் பூலான்தான் சுட்டாள்.

வாய்க்குள் துப்பாக்கி முனையைச் செருகி, உள்ளே வைத்தே சுட்டாள்.

நிச்சயமான மரணம்!

கோரமான கொலைகள்!

இருவரது கழுத்திலும் ஒவ்வோர் அட்டை தொங்க விடப்பட்டது.

"பொலிசாருக்குத் தகவல் கொடுக்கும் நாய்களுக்கு இதுதான் தண்டனை! பூலான்தேவி" என்று அதில் எழுதச் சொன்னாள் பூலான்.

கிராமத்தையே கிடுகிடுக்க வைத்துவிட்டு பூலான் கோஷ்டி புறப்பட்டுச் சென்றது.

அவர்கள் புறப்பட்டுச் சென்றதை உறுதிப்படுத்திய பின்னர்தான் ஸ்ரீராமும், லாலா ராமம் பதுங்கியிருந்த இடத்தை விட்டு வெளியே வந்தார்கள். ஸ்ரீராம் கோஷ்டியில் லாலா ராமைத் தவிர மூன்று பேர்தான் மிஞ்சி இருந்தார்கள்.

ஸ்ரீராமுக்கும், லாலா ராமுக்கும் அவர்களை அறியாமலே உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

பூலானின் கையில் தாங்கள் அகப்பட்டிருந்தால் என்னாகியிருப்பார்கள் என்பது தங்கள் சகாக்களின் உயிரற்ற உடல்களைப் பார்க்கும்போது தெரிந்தது.

பண்ணையார் சாதியைப் பாதுகாக்கும் வீரனாக தோள் தட்டிக்கொண்டு திரிந்த ஸ்ரீராமுக்கு வெட்கமாக இருந்தது.

அந்தக் கிராமமே தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவது போல இருந்தது.

பூலான் ஒலிபெருக்கியில் தன்னை அழைத்து கேவலமாகப் பேசிய வார்த்தைகள் இன்னமும் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

பொலிசாருக்குத் தகவல் போய், ஒரு படையாக கிராமத்துக்குள் புகுந்தனர். அதற்கு முன்னரே ஸ்ரீராம் ஆட்கள் கிராமத்தைவிட்டுப் போய்விட்டனர்.ஏழு உடல்களையும் பொலிசார் எடுத்துச் சென்றார்கள். பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி பரபரப்பாகின.



இந்தியப் பாராளுமன்றத்தில் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்களைப் பற்றி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசைக் கேலி செய்தார்கள். 'சிறப்புப் பொலிஸ் படைகள் அமைக்கப்படும்' என்று உள்துறை மந்திரி வாக்குறுதி அளித்தார்.

**ஸ்ரீராமுக்கும், லாலா ராமுக்கும் அவர்களை அறியாமலே உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.**

**பூலானின் கையில் தாங்கள் அகப்பட்டிருந்தால் என்னாகியிருப்பார்கள் என்பது தங்கள் சகாக்களின் உயிரற்ற உடல்களைப் பார்க்கும்போது தெரிந்தது. பண்ணையார் சாதியைப் பாதுகாக்கும் வீரனாக தோள் தட்டிக்கொண்டு திரிந்த ஸ்ரீராமுக்கு வெட்கமாக இருந்தது. அந்தக் கிராமமே தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவது போல இருந்தது.**

**பூலான் ஒலிபெருக்கியில் தன்னை அழைத்து கேவலமாகப் பேசிய வார்த்தைகள் இன்னமும் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.**

**திருப்பங்கள் தொடரும்...**



## இரத்ததானம் யார் செய்யக்கூடாது?

உயர் இரத்த அழுத்தத்துக்கு சிகிச்சை பெறுபவர்கள், நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டில் இல்லாதவர்கள், எய்ட்ஸ் நோயாளிகள், பால்வினை நோய் உள்ளவர்கள், வலிப்பு நோயாளிகள், நுரையீரல் நோய் உள்ளவர்கள், ஹெபடைடிஸ் பி.சி. வைரஸ் தாக்குதலுக்கு உள்ளானோர், போதைப் பழக்கம் உள்ளவர்கள், உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொண்டவர்கள் ஆகியோர் இரத்ததானம் செய்யக்கூடாது.

## தலைக்காயம்: உடனடியாக கவனிக்க வேண்டியவை!

**தலை,** மனித உடலின் சிகரம். மனிதனை அடையாளப்படுத்தும் முகம் தலையில்தான் அமைந்துள்ளது. மனிதனை இயக்கும் மூளையும் தலையில்தான் இருக்கிறது. மூளையை பாதுகாக்கும் தலையாய பணியைச் செய்வதும் தலையில் இருக்கும் மண்டை ஓடுதான். இப்படி பல சிகரமான பணிகளைச் செய்யும் நம் சிரத்தை (தலை) நாமும் சிரமம் பாராமல் பாதுகாப்பது அவசியம்.

தலைக்காயங்கள் பல வழிகளில் ஏற்படுகிறது. அவைகளில் குறிப்பிடத்தக்கது, வீதி விபத்துகள். அடிதடி சண்டைகளாலும், உயரமான இடத்தில் இருந்து தவறி கீழே விழும்போது தலை தரையில் மோதுவதாலும் தலைக்காயம் ஏற்படும். தலைக் காயம் ஏற்படும்போது, தோல் கிழியும். மண்டையோடு எலும்பு உடைந்துபோகும்.

மண்டையோட்டிற்கும்- மூளைக்கும் நடுவில் இருக்கும் மூளை உறையில் இரத்தம் உறைந்துபோகும். மூளையின் உள்ளே உள்ள திரவம் போன்ற பொருள் காது வழியாக வெளியேறும். கண்ணிற்கு செல்லும் நரம்பு பாதிக்கப்பட்டு கண்பார்வை பறிபோகக்கூடும். மூளைக்கு இரத்தத்தை கொண்டு செல்லும் இரத்த நாளங்கள் வெடித்து மூளையின் உள்ளேயும் இரத்தம் உறையலாம். தலைக்காயம் ஏற்பட்ட நபரை உடனடியாக அவசர சிகிச்சை பிரிவில் சேர்ப்பார்கள். முதலில் அவருக்கு மூச்சுத் திணறல் உள்ளதா? என்று பார்ப்பார்கள். சில நேரங்களில், தலைக்காயம் அடைந்த நபரின் எச்சில், இரத்தம் முதலியவை மூச்சு குழாயில் அடைப்பை ஏற்படுத்தி மூச்சுவிட சிரமத்தை உண்டாக்கும். அப்படியானால் அவருக்கு செயற்கை சுவாசம் வழங்கவேண்டியிருக்கும்.

பின்பு காயமடைந்த நபரின் இரத்த ஓட்டம், நாடித்துடிப்பு ஆகியவை பரிசோதிக்கப்பட்டு அவை சீரடைவதற்கான சிகிச்சை அளிக்கப்படும். தலைக்கு வெளியில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டு இரத்தம் வெளியேறுவதும் தடுக்கப்படும். கிளாஸ்கோவ் கோமா ஸ்கேல் என்னும் கருவியால், காயமடைந்த நபரின் சுயநினைவு திறனும் அளவிடப்படும். சுவாசம், இரத்த ஓட்டம், நாடித்துடிப்பு போன்றவைகள் சீரமைக்கப்பட்டு, காயத்திற்கும் தையல் போட்ட பின்புதான் அந்த நபர் ஸ்திர நிலையை அடைவார்.




இந்த சிகிச்சைகள் தொடரும்போது, தலைக்காயம் ஏற்பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தவர்கள் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை தெளிவாக மருத்துவரிடம் விளக்க வேண்டும். இதன் பிறகு அந்த நபர் அடுத்தகட்ட பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார். முதலில் மண்டை ஓடு எந்த அளவிற்கு உடைந்துள்ளது என்பதை அறிவதற்கு எக்ஸ்ரே எடுக்கப்படும். பின்பு மூளையின் எந்த பகுதியில்- எந்த அளவிற்கு காயம் ஏற்பட்டுள்ளது? என்பதை தெளிவாக அறிவதற்கு மூளை சி.ரி. ஸ்கேன் எடுக்கப்படும்.

அந்த ஸ்கேனை வைத்துதான் அடிபட்டவருக்கு, எந்த மாதிரியான சிகிச்சை தேவை என்று முடிவு செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை தேவையெனில் அந்த நபர் உடனடியாக அறுவைச் சிகிச்சை கூடத்திற்கு மாற்றப்படுவார். சுவாசத்தில் தடை இருந்தாலோ, அல்லது காயமடைந்த நபர் நினைவு இழந்த நிலையில் இருந்தாலோ, அவர் தீவிர சிகிச்சை பிரிவில் தொடருவார். சிறு காயமாக இருந்தால் அந்த நபர் பொது வார்டுக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்படும். இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டும். அதனை அணிந்தால் தலைவலி உண்டாகும், தலைமுடி உதிரும், தலை மிகவும் கனமாக இருக்கும் என்பதெல்லாம் தவறு.

வீதி விபத்து ஏற்படும்போது தலை மீது விழும் அழுத்தம் நமது மூளையையும், மண்டையோட்டினையும் தாக்கும். தலைக்கவசம் அணிந்திருந்தால், அந்த அழுத்தத்தை தலைக்கவசம் தாங்கிக்கொண்டு மூளைக்கும், மண்டையோட்டிற்கும் ஏற்படும் காயத்தை வெகுவாக குறைக்கும். தலைக்காயம் ஏற்படும்போது உருவாகும் அழுத்தம், மேலும் மூளையை பாதித்து விடக்கூடாது என்பதற்காகத்தான் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக அவசர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சில நேரங்களில் விபத்தால், சில நரம்புகள் சீர்செய்ய முடியாத அளவிற்கு பழுதாகிவிடும். அப்போது உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்காவிட்டால், பழுது அடையும் நரம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துவிடும். பொதுவாக மூளை காயத்தின்போது மூளையின் உள்ளே இருக்கும் ஒட்சிசன் அளவு குறைந்துவிடும். இரத்த அழுத்தம் உயரும். இதனால் மூளை செல்கள் இறக்கும். அத்துடன் இரத்த இழப்பு, உடலில் தாதுப்பொருட்களின் தட்டுப்பாடு, சிறுநீரகக் கோளாறு, மூச்சுத் திணறல் முதலியனவும் காயமடைந்த மூளையை மேலும் பாதிக்கும். இத்தகைய பாதிப்புகளை தடுக்க முதலுதவி சிகிச்சையை விபத்து நடந்த இடத்திலேயே ஆரம்பிக்கவேண்டும்.

காயமடைந்த மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டம் மேலும் குறைந்து காயத்தின் அளவு அதிகமாகும். ஆகவே விபத்தின் பொன்னான நேரத்தின்போது காயம் அடைந்த மூளை மேலும் பாதிக்கப்படாமல் காப்பது மிக முக்கியம்.



ஹரிதாஸ்

# விஜய்யுடன் மோத அமலாபால் சிபாரசு

துப்பாக்கியின் அதிரடி வெற்றிக்கு பின்பு நடிகர் விஜய் இயக்குனர் விஜய்யின் புதிய படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் நாயகியாக நடிகை அமலா-பால் நடிக்கிறார். படப்பிடிப்பு மும்பையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் படத்திற்கு 'தலைவன்' என தலைப்பு வைக்கத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும் இதே பெயரில் வேறு ஒரு படம் தயாராவதாக செய்திகள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து விஜய்- ஏ.எல்.விஜய் படத்திற்கான தலைப்பை இன்னும் உறுதி செய்யாமல் இருக்கின்றனர்.

விஜய்க்கு ஏற்ற வில்லனையும் தேடிக் கொண்டிருக்கிறார் ஏ.எல். விஜய். இந்நிலையில் ராஜீவ் பிள்ளை என்ற மலையாள வில்லனை ஏ.எல்.விஜய்யிடம் சிபாரிசு செய்திருக்கிறார் அமலாபால்.

மொடலிங் துறையில் இருந்தபோதே அமலாபாலும் ராஜீவ் பிள்ளையும் நெருங்கிய நண்பர்கள். அதனால்தான் வில்லன் வேடத்திற்கு சிபாரிசு செய்தார் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அஜித்துடன் இணைகிறார் தம

சிவா இயக்கத்தில் உருவாகும் புதிய ப
அஜீத்தின் ஜோடியாக தமன்னா நடிக்க உ
இப்படத்தில் விதார்த், பாலா, முனீஷ், சோ
போன்ற இளம் நாயகர்களுடன் அஜீத்தும் இ
நடிக்க உள்ளார்.

இப்படத்தில் வரும் ஜெயராம், சந்தானத்
நகைச்சுவை பெரிதளவில் பேசப்படும் என்று
தெரிவிக்கப்படுகிறது. மேலும் தேவிஸ்ரீ பிரசா
இசையில் உருவாகும் பாடல்கள் அஜீ
ரசிகர்களுக்கு நிச்சயம் விருந்தளிக்கு
இப்படத்தின் படப்பிடிப்பு மார்ச் மாதத்
என்றாலும், பாடல் பதிவு வருகிற டிச
மாதம் 2ஆம் திகதி
ஆரம்பமாகவுள்ளது
குறிப்பிடத்தக்கது.





கூட்டுக் களவாணி

# திரைக்கு வருகிறது ஜல்லிக்கட்டு

பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு வீரர்கள் பற்றிய கதை 'பூர்வகுடி' என்ற பெயரில் படமாகிறது.

இதுபற்றி இயக்குனர் இப்ராகிம் கூறுகையில், தமிழர்களின் பாரம்பரியம் மிக்க ஜல்லிக்கட்டு விளையாட்டை மையமாக வைத்து இக்கதை அமைக்கப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு நடத்தலாமா? கூடாதா? என்பதற்காக நீதிமன்றம் வரை விவகாரம் சென்றது. ஆனால் தற்போது மிகுந்த பாதுகாப்புடன் நடக்கிறது. இதில் ஈடுபடுபவர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. இப்படத்துக்காக தேனி பகுதியில் பிரத்தியேக செட் அமைத்து நூற்றுக்கும் அதிகமான நிஜ மாடுபிடி வீரர்களை அழைத்துவந்து விறுவிறுப்பான ஜல்லிக்கட்டு காட்சி 7 நாட்கள் படமாக்கப்பட்டது.

பாரம்பரியம் மிக்க ஜல்லிக்கட்டு விளையாட்டு எவ்வளவு உன்னதமானது என்பதை 50க்கும் அதிகமான புதுமுகங்களை வைத்து தேனி வட்டார வழக்கு பேசும் மக்களோடு படப்பிடிப்பு நடந்தது. இப்படத்தில் ஈஸ்வர் கதாநாயகனாகவும், மதுஸ்ரீ கதாநாயகியாகவும் நடிக்கின்றனர்.

# உரிமைக்குக் குரல் கொடுக்கிற

பருத்திவீரன் படத்தில் நடித்ததற்காக தேசிய விருது
இருப்பினும் அதன்பிறகு கொலிவூட்டில் படவாய்ப்புகள் இல்
அதனால் கன்னடம், தெலுங்கு என்று மற்ற மொழிகளுக்கு
கொடுத்த ப்ரியாமணி, சமீபத்தில் சாருலதா என்ற படத்தில்
நடித்திருந்தார். இந்த படமாவது தனது மார்க்கெட்டை பல
ஏமாற்றம்தான் மிஞ்சியது.

இதனால் வெறுத்துப்போன ப்ரியா
வார்த்தைகூட தமிழ் பேச தெரியா
ஆனால் பக்கா தமிழச்சியான என்
உரிமைக்குரல் எழுப்பி உள்ளாரா
மேலும் வந்தாரை வாழ வைக்
வெளியில் இருந்து வருபவர்களை
மட்டுமே வாழ வைத்து விட்டு,
விரட்டியடிப்பது கொஞ்சமும்
என்றும் தனது ஆதங்கத்தை
வெளிப்படுத்தி உள்ளாராம்.



கெஸ்ட்



னா
திற்கு
ாராம்.
ல்
ணைந்து
ன்
தின்
ல்தான்
ர்

# வீட்டில் புகுந்தது வருமான வரித்துறை

தெலுங்கு திரைப்பட உலகின் முன்னணி கொமெடியனாக திகழ்பவர் நடிகர் பிரம்மானந்தம். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட சுமார் ஆயிரம் படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில் வருமான வரித்துறையினர் 12 குழுக்களாக பிரிந்து ஐதராபாத்தில் உள்ள நடிகர் பிரம்மானந்தம் வீடு மற்றும் பாடகிகள் சுனிதா, கீதாமாதுரி ஆகியோரது வீடுகளில் ஒரே நேரத்தில் சோதனையில் ஈடுபட்டனர். வருமானவரி கணக்கில் காட்டப்படாத பல சொத்துக்கள் இருப்பதாக வந்த தகவலின்படி இவரது வீடுகளில் சோதனை நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். சோதனையில் பலரது வீடுகளில் முக்கிய ஆவணங்கள், பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்குமுன்னர், இதேபோன்று மலையாள நடிகர் மோகன்லால் வீட்டிலும் வருமான வரித்துறையினர் அதிரடி சோதனை நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பரதேசி

# ரஜினியால் மட்டுமே முடியும்

எந்திரன் படத்தில் சூப்பர் ஸ்டார் விஞ்ஞானியாகவும், ரோபோவாகவும் வந்து கலக்கியிருந்தார். ரோபோவான எந்திரன் ஐஸ்வர்யா மீது காதல் கொள்ளும் ...ாட்சிகள் அனைவரையும் கவர்ந்தன. இந்நிலையில் எந்திரன் கதாபாத்திரம் ...பால் அமைந்தால் அதில் நடிப்பீர்களா? என்ற கேள்விக்கு தனுஷ், எந்திரன் ...பான்ற கதாபாத்திரம் எல்லாம் சூப்பர் ஸ்டாராக இருப்பவர்களால்தான் ...முடியும். ரஜினிதான் அந்த கதாபாத்திரத்திற்கு பொருத்தமானவர். அது போன்ற கதாபாத்திரத்தில் என்னால் நடிக்கமுடியும் என்று எனக்கு தோன்றவில்லை என்றார். ஆடுகளம் படத்திற்காக தேசிய விருது பெற்ற தனுஷ் தற்போது மரியான் மற்றும் ராஜ்னாஹா ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.





இங்கு காதல் கற்றுத்தரப்படும்

# திரையில் தண்ணீர் தேசம்

தமிழ் சினிமாவில் கவிஞர் வைரமுத்து எழுதிய பாடல்வரிகள் மட்டுமே படமாக்கப்பட்டு வருகிறது. முதன்முறையாக வைரமுத்து எழுதிய புகழ்பெற்ற நாவலான தண்ணீர் தேசம் திரைப்படமாக உள்ளது.

பிரபல வாரபத்திரிக்கையில் தொடராக வெளிவந்து பல இலட்சக்கணக்கான வாசகர்களின் பாராட்டுகளைப் பெற்றது இந்த நாவல். 1996 இல் புத்தகமாக வெளியிடப்பட்டு இன்றுவரை 18 பதிப்புகள் கண்டு விற்பனையிலும் சாதனை படைத்திருக்கிறது.

கடற்பரப்பில் பல சாகசங்களுக்கிடையே நடக்கும் காதல் கதையினைச் சொல்லும் 'தண்ணீர தேசம் அந்தத் தலைப்பிலேயே திரைப்படமாக்கப்படுகிறது. ரெட் எர்த் மூவிஸ் புரொடக்ஷன்ஸ் என்கிற மலேசிய நிறுவனத்தின் சார்பில் நிவாஸ் ராகவன் -யுவராஜ் சௌமா ஆகியோர் தண்ணீர் தேசத்தைத் தயாரிக்கிறார்கள்.

நாவலை எழுதிய வைரமுத்துவே படத்திற்கு கதை- வசனம் மற்றும் பாடல்களையும் எழுதுகிறார். இப்படத்தை ஷிவன் இயக்குகிறார். இவர் ஏற்கனவே வேறு மொழிகளில் சில வெற்றிப் படங்களை இயக்கியவர். தமிழில் இது இவருக்கு முதலாவது படம்.

இந்தப் படத்திற்கு பிரபல ஒளிப்பதிவாளர் ரத்னவேலுவிடம் இணை ஒளிப்பதிவாளராகப் பணிபுரிந்த வி.தியாகராஜன் ஒளிப்பதிவு செய்கிறார். எங்கேயும் எப்போதும் இசையமைப்பாளர் சத்யா இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார். தூத்துக்குடி, அந்தமான் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஜனவரி 2013ல் முற்றிலும் புதுமுகங்களோடு தொடங்கவிருக்கும் தண்ணீர் தேசம் படத்திற்கு கதாநாயகன், கதாநாயகி தெரிவு நடைபெற்று கொண்டிருக்கிறது.

# ...பிரியாமணி

...றவர் ப்ரியாமணி.
...மல் போனது.
...க்கியத்துவம்
...இரட்டை சகோதரிகளாக
...த்துமா? என்று எதிர்பார்த்தவருக்கு,

...ணி, தமிழ் சினிமாவில் ஒரு
...நடிகைகளுக்கு படம் கொடுக்கிறீர்கள்.
... ஓரங்கட்டுகிறீர்கள் என்று

...ம் தமிழகம் என்பதற்காக

...கிருப்பவர்களை
...ில்லை

# டாப்ஸிக்கு வாய்ப்பு

கொலிவூட்டில் முனி, காஞ்சனா படங்களை இயக்கி நடித்தார் ராகவா லாரன்ஸ். காமெடி கலந்த இந்த திரில் படங்கள் வெற்றி பெற்றதையடுத்து இவர் முனி-3ம் பாகத்தை இயக்குகிறார்.

இப்படத்தில் கதாநாயகியாக நடிகை லட்சுமிராய் நடிப்பதாக கூறப்பட்டது. இவர் இதற்கு முந்தைய பாகமான காஞ்சனாவில் நடித்திருந்தார். ஆனால் இந்த வாய்ப்பு ஆடுகளம் படத்தில் நடித்த டாப்சிக்கு கிடைத்துள்ளது. ஜனவரி மாதம் படப்பிடிப்பு தொடங்க உள்ளது. ராகவேந்திரா புரொடக் ஷன்ஸ் தயாரிப்பில் இப்படம் மிக பிரமாண்டமாக தயாராகிறது.





# தேன் கிண்ணம்

# முத்தம்



முதல் மழை வந்து
பார்த்து நான் ரசிக்க
எதிர்பாராமல் நீ கொடுத்த அந்த
முத்தம் இன்றும் ஈரமாக என்
கன்னத்தில்...
கண்கள் பேசும் அழகை..
உன்னில் கண்டேன்...
உன்னிடம் சேர...
ஏக்கம் கொண்டேன்.
தென்றலாய் வந்தேன்...
கார் கூந்தல் தழுவ,
வார்த்தையாய் சேர்ந்தேன்...
இதழிடம் நெருங்க,
கனா கண்டேன் பெண்ணே...!
காதல் வினா கொண்டேன்
கண்ணே...!
விடை தருவாயா, இதழில்...?
- உன் இதழால்.

செ.நிதர்சன்,
கொக்குவில்.


# புலம்பல்



தாராள உள்ளம் கொண்டவளே!
ஏராளமான இரவுகள்
என்னை ஏமாற்றியே கடந்து போயின.
வேளை பார்த்து உன்னருகில்
என்னால் நெருங்கமுடியவில்லை
உன் வீட்டு வெளிச்சத்தில்
உன் பின்புறத்தில் நான் வருவது
உனக்கு தெரிய நியாயமில்லை
உன்னைச் சுற்றியிருப்போருக்கு
தெரிந்து விடுகின்றது - அதனால்
என்னைத் தண்டிக்க நினைத்து
உன்னையும்தான் அடிக்கிறார்கள்
என் ஆயுள் நீளமென்பதால்
தப்பி விடுகின்றேன் - இருந்தும்
கங்குலின் இருட்டிலே
அங்குலம் அங்குலமாய்
உன் அருகே நான் வந்து
உன்னை சுவைத்து உறிஞ்சி...
நான் மெய்மறந்து...
எனக்கு வேண்டியதை
எடுத்துக்கொள்ளும் நாள் எப்போது?
ஏனென்றால்,
உன்னை வலை என்ற திரைகொண்டு
மாத்திரமா தடுக்கிறார்கள்?
என்னை சுருள் கொண்டும் தானே
விரட்டுகிறார்கள்!
இது நியாயம் தானா...?
இந்த நுளம்பின் புலம்பலை
கேட்பார் யாருமில்லையா?

யாழ்.ஸைனப்,
மன்னார்.

# ஆசைகள்



நேற்று
அண்ணா சாலையிலே
வனஜாவை பார்த்த போது
அவளையே மனைவியாக்க
ஆழ்மனம் நினைத்தது.

இன்று கண்ணதாசன் சாலையிலே
கிரிஜாவை பார்த்த போது
இவள்தான் வேண்டுமென
இதயத்தில் பதித்தது.

மிதிவண்டி இருந்த போது
உந்துருளி கிடைத்துவிட்டால்
போதுமென நினைத்தது.
உந்துருளி வந்தாச்சு
இப்போ....
காரின் கனவில் மிதக்கிறது.

ஓலை வீட்டினை
ஓடு ஆக்கிட
உள்ளம் நினைத்தது.
உருவாக்கியும் முடித்தது.
இப்போ...
மாடிவீட்டுக்காய்
மனசு ஏங்குகிறது.

மாமிசமே வேண்டாமென
மனசு தீர்மானிக்கிறது
மணமணக்கும் மீன் பொரியல்
கண்களில் பட்டு விட
கைகள் அதை தூக்குகிறது.

தொடர்ந்தே வரும்
துன்பம் போலவே
தொடர்ந்தே வருகிறதே
துளிர்விடும் ஆசைகள்.



யோ.புரட்சி

## ஈழத்துக் கவிஞர்கள்

### தேசகீர்த்தி பி.ரி.அஸீஸ்



கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா - 07 பெரியாற்று முனையைச் சேர்ந்த கவிஞர் பி.ரி.அஸீஸ், 1980இல் கிண்ணியாச் செல்வன் எனும் புனைபெயரில் எழுத்துலகில் அடியெடுத்து வைத்தவர். இவரது முதலாவது கவிதை 'பூமி எங்கும் மிளிரும்' எனும் சிறுவர் பாடலாகும்.

'கிராமியக் கவிகளுக்கோர் அஸீஸ்', 'சாம கவி', 'சாமஸ்ரீ தேச கீர்த்தி', 'கவிச்சுடர்' போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

1980ஆம் ஆண்டில் தினபதி, தினசரி நடத்திய கையெழுத்து பத்திரிகை போட்டிக்கு 'முத்துக்கள்' எனும் கையெழுத்து பத்திரிகையை முன்வைத்து பாராட்டு பெற்றவர்.

அத்தோடு தினபதி, சிந்தாமணி எனும் பத்திரிகைகளில் கவிதை, சிறுகதை உட்பட ஏராளமான ஆக்கங்களை எழுதியுமுள்ளார். அவரது படைப்புக்கள் இலங்கையில் அனைத்து பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளது. அத்தோடு இவர் எழுதிய, 'அழகுமிகு கிண்ணியா பாலம்' எனும் கவிதை 'Tamil Mirror' இணையத்தளத்தில் வெளிவந்து அதற்காக அமோக பாராட்டுக்களும் கிடைக்கப் பெற்றவர்.

அலையோசை, தட்டச்சு இதழ், கவிச்சரம் தட்டச்சு இதழ் என்பவற்றை 1981ல் வெளியிட்டுள்ளார். அதன் பின்னரான இடைவெளியின் பின் மீண்டும் எழுத்துலகில் பிரவேசித்து

'உணர்வூட்டும் முத்துக்கள்', 'சிறுவர் பாடல்கள்', 'தாலாட்டுப்பாடல்', 'கிராமியக்கவி' போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுவர் பாடல் எனும் நூல் 2011ஆம் ஆண்டின் சிறந்த நூலுக்கான விருதினை இவருக்கு பெற்றுக் கொடுத்துள்ளது. மேலும்


'மாண்புறும் மாநபி'

'நினைவொன்றே போதும்' போன்ற நூல்களை எழுதியுள்ளதுடன் இன்னும் பல நூல்களை அச்சுருப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

இவரது ஆக்கங்கள் சமூக மேம்பாட்டை மையமாக கொண்டு எழுதப்படுகிறது. பல ஆளுமைகளை தன்னகத்தே கொண்டவர் அஸீஸ்.

### இவரது கவிதைகளில் ஒன்று

# இது ஒரு பரிதாபம்



அகதி வாழ்வை
முடித்தவர் வாழ்வில்
சூழ்ந்தது பரிதாபம்!
சுகமாய் வாழ
நினைத்து வந்தவர்
படுகின்ற பரிதாபம்!
அடை மழைச் சாரல்
நடுங்க வைப்பது
அவர்களின் பரிதாபம்!
தடைகளைத் தாண்டிச்
செல்ல முடியாமல்
இருப்பதும் பரிதாபம்!

சேறும் சகதியும்
நிறைந்த தந்த
வெளியினிலே
யாரும் அற்ற அநாதைகளாய்
அவர்
அல்லல் படுவது பரிதாபம்!

நடுங்கும் குளிரில்
சின்னஞ் சிறுசுகள்
நனைவது பரிதாபம்!
துண்டு துணியும்
இல்லாமல் அவர்கள்
துவள்வதும் பரிதாபம்!



காட்டின் இருளும்
கானக ஒளியும்
சூழ்வது பரிதாபம்!
நாட்டின் இந்த
அவலம் நினைத்தால்
அது பெரும்பரிதாபம்!

ஜே.பிரோஸ்கான்


# நனையும் கவிதைகள்



நீ என்னைக்
காதலித்த போது
நான் எழுதிய
நூற்றுக்கணக்கான
கவிதைகள் - நம்
புன் சிரிப்புகளால்
மலர்ந்தன.
நீ என்னை
விட்டுப் போன பின்
நான் எழுதும்
ஆயிரக்கணக்கான
கவிதைகள் - என்
கண்ணீர்த் துளிகளால்
நனைகின்றன.

அ.சந்தியாகோ,
கண்டி.

# ஏமாற்றம்



நாளை விடியும்
நாளை விடியும் - என
ஒவ்வொரு நாளும்
கனவு காண்கிறேன்
இன்னும் விடியவில்லை
என் வாழ்வின்
இரவுகள்....

த.நாகதேவன்,
மருதங்கேணி.

**கலாபூஷணம்**
**கே.எஸ்.ஆனந்தன்.**

அத்தியாயம் 07

15



# சிங்கை மைந்தன்

# அமரசிம்மன்

"அரசே! சிங்களச் சிற்றரசர்களுடன் கலந்துபேசி அவர்களது அதிகார எல்லைக்குட்படாத பகுதிகளில் நாம் எமது நேசநாடுகளுக்குத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்யலாம்." என்றார் அமைச்சர்.

"சரி அதற்கான ஏற்பாட்டினைச் செய்யுங்கள்" என்று அனுமதித்தார் குணவீரர்.

"இளவரசர் இங்கிருந்தால் பல வீரதீர செயல்களைப் பார்த்திருக்க முடியும்" என்றார் பெரிய உடையார்.

"நான் பார்க்காவிட்டாலும் கேள்விப்பட்டேன் அமைச்சர் பெருமானே" என்றான் கனகசூரியன்.

"சிங்கள மன்னர்கள் பாணந்துறை. இறாகம, கோரளை ஆகிய இடங்களில் சிற்றரசர்கள் சிலர் தலைநகரை அமைத்து அரபு வணிகர்களுடன் கறுவா வியாபாரம் செய்கின்றனராமே?" என்றான் அமரசிம்மன்.

"அமரசிம்மனுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும் அண்ணா?"

"கடலோடிகள், வணிகர்கள் கூறியிருப்பார்கள்"

"அமரசிம்மா! நீ கேட்ட கேள்வி உண்மைதான். விவசாயம் பாதிக்கப்பட்ட நிலையில் வணிகத்துறையில்தான் அவர்கள் கவனம் செல்கின்றது. அத்துடன் கோவர்தனப்புரக் கோட்டையில் ஒரு பெரிய மாளிகை கட்டும் பணியை ஓர் தனவந்தர் ஆரம்பித்துள்ளார். சிங்களச் சிற்றரசர்களைவிட அவர் பெரும் தனக்காரராக விளங்குகின்றார்."

"இளவரசே! அவர் பெயர் அழகக்கோனார். பேராதனையிலிருந்து கொண்டே அவரால் இம்மாளிகை எழுப்பப்படுகின்றது. வாசனைப் பொருட்கள் விளையும் பெருந்தோட்டங்களுக்கு அதி-பதியாக இருக்கிறார். இவருக்குச் சிங்களச் சிம்மாசனத்தில் ஓர் கண் இருப்பதாக அரபு வணிகர்கள் கூறுகின்றனர்" என்றான் அமரசிம்மன்.

"அமரசிம்மா! என் மனதிலிருப்பதை எல்லாம் அப்படியே ஒப்பிக்கின்றாயே. உன்னிடம் ஏதோ ஓர் அற்புத சக்தி இருக்கின்றது என்று எல்லோரும் கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கின்றது" என்று சிரித்துக்கொண்டே கூறினான் கனகசூரியன்.

"அரசர் பெருமானே! நான் வணிகத் தலம் அமைப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்யலாம்தானே " என்றார் பெரிய உடையார்.

"தாராளமாகச் செய்யுங்கள்" என்று கூறி இருக்கையை விட்டு எழுந்தார் மன்னர்.

இளவரசர் கனகசூரியனும், அமரசிம்மனும் எழுந்து ஒன்றாகவே விடைபெற்றுச் சென்றனர்.

இளவரசி மதுரவல்லி பஞ்சணையில் படுத்திருந்தாளாயினும் அவள் மனம் கற்பனைச் சிறகுகட்டிப் பறந்து கொண்டிருந்தது. சேர நாட்டுத்தளபதிகள் வெறும் வாய் வீரம் காட்டும் பகட்டான தோரணையும், அமைதியாயிருந்துகொண்டே சிங்கை இராசதானியின் பெயரை அகிலமும் அறியச் செய்யும் அரும்திற நாயகனாக விளங்கும் அமரசிம்மனையும் எடைபோட்டுப் பார்த்து வியந்து கொண்டிருந்தது அவள் உள்ளம். இவன் மட்டும் மனம் வைத்து என்னை ஏற்றுக் கொண்டால் சேரநாட்டின் வரலாற்றையே மாற்றியமைத்து விடலாம் என்று மனமகிழ்வுற்றாள். எப்படியும் அவனுடன் தனிமையில் காத்திருக்கும் சந்தர்ப்பம் கிடைக்காதா என ஏங்கலுற்றாள். மூடிய இமைக்குள் அவனின் கம்பீரத் தோற்றத்தைப் வைத்துப் பார்த்து அகமகிழ்ந்தாள்.

"இளவரசியார் பகல் கனவு காண்கின்றார் போலும்" என்று கேட்டுக்கொண்டே பஞ்சணையின் அருகே வந்துநின்றாள் நீல வேணி.

"நீலவேணி என்னடி கேட்டாய்?" என்று முறுவலித்தாளாயினும் விழி-களைத் திறக்காமலிருந்தாள்.

"பகல் கனவு காண்கிறீர்களா" என்று கேட்டேன்.

"பைத்தியக்காரி கண்ணுக்குள் சிக்கியதை விடமுடியாது தவிக்கின்றேன். உனக்குக் கேலியாயிருக்கின்றதா?"

"தேவி நான் கேலியாகக் கேட்டேன். விழிகளைத் திறவுங்கள் ஊதிவிடுகின்றேன். இல்லையென்றால் வைத்தியரை வரவழைக்கின்றேன்."

"போடி பைத்தியம். நான் எவ்வளவு கஸ்ரப்பட்டு அவரைக் கண்களுக்குள் மூடி வைத்துள்ளேன் ஊதி விடுகிறாளாம் ஊதி. ஏன்டி நீலவேணி. உதவிதான் செய்யமாட்டாய் உபத்திரவம் பண்ணாமலாவது இருக்கக் கூடாதா? நீயும் ஒரு தோழியா?" என்று சிணுங்கினாள்.

"உண்மையிலே நான் பயந்துவிட்டேன் தேவி. உங்களுக்கு இருக்கும் நோய்க்கு அந்த வைத்தியரைக் கூட்டிவந்தால்தான் சரி" என்றாள்.

"எந்த வைத்தியரை?"

"அமரசிம்மன் என்ற வைத்தியரை"

"நிச்சயமாய் கூட்டி வருவாயா?" என்று பஞ்சணையை விட்டெழுந்து அவ-ளைக் கட்டியணைத்தாள்.

"ஐய்யய்யோ! என்னம்மா இப்படி உடம்பு சுடுகின்றது?"

"உனக்குத் தெரியாது? இலக்கியங்களில் படிக்கவில்லை. தலைவனை நினைத்து தலைவி அழும் போது அவள் உடல் வெப்பினால் பாகாய் உருகுமாமே"

"ஆமாம். இந்த நோயை பசலை நோய் என்று சங்க இலக்கியங்களில் படித்துள்ளேன். இதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது தேவி.அந்த மனிதர் பெண் வாசனையே இல்லாத இடத்தில் இருக்கம் ஒரு மனிதர்"என்றாள் தோழி.

(தொடரும்...)

தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

தினமுரசு நாளிதழ்

தினந்தோறும்
கல்விமுரசு இணைப்பு

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் – விடைகள்
ஒவ்வொரு நாளும்
தினமுரசில் வெளியாகிறது.

தினமுரசு நாளிதழ்
ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்தையும்
பத்தே ரூபா
கொடுத்து படித்துக்கொள்ள முடியும்



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்



## சுகப்பிரசவம் நடக்க வேண்டும்?

கர்ப்பிணிகள் வீட்டுவேலைகளை செய்து வந்தாலே எளிதாக அவர்களுக்கு சுகப்பிரசவம் ஆகும். கர்ப்பிணிகள் முதல் 3 மாதத்தில் மல்லாந்து படுப்பதோ, மல்லாந்தபடி படுத்திருந்து அப்படியே எழுவதோ மிகவும் தவறு. முதல் 3 மாதங்களுக்கு ஒருக்களித்து படுத்தபடி இருப்பதுதான், கருவின் வளர்ச்சிக்கு உதவும். அதேபோன்று, ஒருக்களித்தபடியே கையை ஊன்றித்தான் எழுந்திருக்க வேண்டும்.

ஒருக்களித்தபடி படுக்கும்போது வயிறு தளர்வான நிலையில் இருக்கும். ஆனால் மல்லாந்து படுத்தால் வயிறு இழுத்த நிலையில் இருக்கும். அப்படியிருக்கும்போது கரு குழந்தையாக உருவாவதில் சிக்கல் ஏற்படும். அதன் பிறகும் மல்லாந்து படுப்பதை தவிர்க்க வேண்டும். மல்லாந்து படுத்தால் குழந்தைக்கு குடல் சுற்றிக் கொள்ளும் ஆபத்து ஏற்படும்.

அதேபோல, ஒரு பக்கம் ஒருக்களித்து படுத்திருக்கும்போது அடுத்த பக்கத்திற்கு அப்படியே திரும்பக் கூடாது. எழுந்து உட்கார்ந்து பிறகுதான் அடுத்த பக்கம் ஒருக்களித்துப் படுக்க வேண்டும். இது குழந்தை சுகப்பிரசவமாக உதவும். இப்போதெல்லாம் இந்த பழக்கத்தை நிறைய கர்ப்பிணிகள் கடைப்பிடிப்பதில்லை. அதனால்தான் குழந்தை தலை திரும்புவதில் பிரச்சினை ஏற்படுகிறது. தலை திரும்பாமல் இருந்தால் சிசேரியன் மூலமாகத்தான் பிரசவமாகும். மேலும், எல்லோருமே குனிந்து நிமிர்ந்து வேலை செய்தாலே சுகப்பிரசவமாகும். வீட்டுவேலைகளை தாங்களாகவே செய்துகொண்டால் எல்லோருக்கும் சுகப்பிரவமாகும் வாய்ப்பு உள்ளது. அதேபோல கர்ப்பிணிகள் ஏற்கனவே யோகாசனம் செய்து வந்து கொண்டிருந்தாலும் முதல் மூன்று மாதங்களுக்கு செய்யக்கூடாது.

அதன்பிறகும் எளிதான பயிற்சிகளை செய்யலாம். ஆனால் கர்ப்பம் தரித்த பிறகு புதிதாக யோகாசனம் செய்யவே கூடாது. சுகப்பிரசவம் ஆவதற்கான ஆசனத்தையும் 7ஆம் மாதத்தில் இருந்து செய்யத் துவங்கலாம். ஆனால், சுகப்பிரசவம் ஆவதற்கு எந்தப் பயிற்சியும் தேவையில்லை. நீங்கள் சுறுசுறுப்பாக உங்கள் வேலைகளை செய்துகொண்டு வந்தீர்களானால்.

ஒருவேளை எந்த வேலையும் செய்யாமல் இருப்பவர்களுக்குத்தான் இந்த பயிற்சிகள் தேவைப்படும். மேலும், வீட்டில் குனிந்து நிமிர்ந்து செய்யும் வேலைகளான வீட்டை பெருக்குதல், துணி துவைப்பது போன்ற வேலைகளை செய்யும்போது வயிறு சுருங்கி விரியும் தன்மையை பெறுகிறது. தற்போது சில பெண்களுக்கு சுகப்பிரவம் என்றால் பயம் ஏற்படுகிறது. சிசேரியன்தான் எளிது என்கிறார்கள். முதலில் அந்த பயத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.



வீடே உலகம் என்று முடக்கப்பட்டுக் கிடந்த பெண்கள் உலகமே வீடு என விசால அறிவோடு வெளிப்பட்டுள்ள இன்றைய காலத்திலும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்ந்தபடியே உள்ளன என்பது அவலகரமான உண்மையாகும்.

பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பெண்கள் முன்வந்துவிட்ட இந்தக் காலத்திலும் பெண்கள் மீதான வக்கிரத் தாக்குதல்கள் சுமத்தப்படும்போது வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்வதை யாரும் குறைகூற முடியாது. ஆடம்பர வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், பெண் விடுதலை என்ற நோக்கிலும், வலியச் சென்று வெளியிடங்களில் வேலைச் செய்வது பெண்களுக்குப் பெருந்தீமையாக அமைவதை அவர்கள் எண்ணிப் பார்க்க தவறி விடுகின்றனர்.

வீட்டுவேலைகளும், குழந்தை பராமரிப்பும், பெரியோ ரைப் பேணுதலும் இழி-வான செயல்களல்ல என்பதை பெண்கள் விளங்க வேண்டும். வீட்டுநிர்வாகம் செய்யும் பெண்கள்

## ஆடையும் தற்காப்பு ஆயுதம்தான்

குறையவில்லை. அடுப்பங்கரையில் மட்டுமே அடைந்து கிடந்த பெண்கள் பலவற்றிலும் அடிபதித்திருக்கும் இந்த காலத்திலும் பெண் முன்னேற்றம், பெண் விடுதலை ஆகியவை குறித்த சரியான வரையறைகள் பெறப்படாமலே உள்ளன.

ஆண்களை விடக் குறைவான அளவில் பெண்கள் உடை உடுத்துவதும், ஒழுக்கச் சீர்கேடுகளில் ஆண்களையும்விட ஒருபடி மேலே நிற்பதும்தான் பெண் விடுதலையின் சின்னங்கள் என ஒரு சில பெண்ணியவாதிகள் பேசுவதும், எழுதுவதும் பெண்ணினத்தை பாதிப்புகளின் படுகுழியில் தள்ளியுள்ளன என்று சொன்னால் மிகையாகாது.

வீட்டு நிர்வாகப் பணிகளான சமையல், குழந்தை பராமரிப்பு, பெரியோரைப் பேணுதல் போன்ற பணிகளெல்லாம் பெண்ணடிமைத் தனத்தின் சின்னங்கள். வீட்டு வேலைகளை பெண்கள் செய்வதே இழிவு, வெளியிடங்களில் பணிபுரியச் செல்வதே பெண் விடுதலை என்று சில பெண்ணியவாதிகள் கூறுகின்றனர்.

தவிர்க்க இயலாத சூழல்களில் குடும்பத்தைத் தாங்கி நிறுத்தும் பொறுப்பு பெண்ணின்மீது இல்லத்தரசியாகவும், வெளியிடங்களுக்குப் பணிக்குச் செல்கையில் ஆளுமைக்குட்பட்ட ஊழியராகவும் ஆகிவிடும் யதார்த்த நிலையை கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, தவிர்க்கவியலாத காரணங்களின்றி வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்வதை பெண்கள் தவிர்ப்பது அவர்களின் நிம்மதிக்கு வழிகோலும். பணிக்குச் செல்லும் சில பெண்கள் பாலியல் சீண்டல்களுக்கு ஆளாவதை இன்றைய புள்ளிவிபரங்கள் துல்லியமாகக் கூறியுள்ளன.

பாலியல் சீண்டல்களுக்கு வக்கிரப் பார்வைகளே முழு முதற்காரணமாக அமைகின்றன. கண்ணியமான உடைகளே என்றும் பெண்களுக்கு முதல் பாதுகாப்பாகத் திகழும். எனவே இதை எல்லாப் பெண்களும் பின்பற்றினால் பெரும்பாலான பாலியல் வக்கிரங்கள் குறைந்துவிடும்.

கண்ணியமான ஆடைகளால் பெண்கள் தன்னைக் தற்காத்துக் கொள்ளவேண்டும். அத்துமீறிச் சீண்டும் ஆண் வக்கிரர்களை எதிர்கொள்ளும் தைரியத்தையும், வீரத்தையும் பெண்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## ஃபேஷியல் செய்தபின் பின்பற்ற வேண்டியவை



* ஃபேஷியல் செய்தபின்னர், முகத்தை விரல்களால் தேய்க்கக்கூடாது.

* ஃபேஷியல் முடிந்த பின்பு 2 மணிநேரத்திற்கு முகத்தை கழுவக்கூடாது. வேண்டுமென்றால் முகம் எண்ணெய் பசையுடன் இருந்தால் மட்டும்தான் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவவேண்டும்.

* இந்த நேரத்தில் புருவத்தை வடிவமைத்தல், முகத்திற்கு ஆவி பிடித்தல் போன்றவற்றை செய்யக்கூடாது. ஏனெனில் ஃபேஷியல் செய்தபின்னர், சருமம் மிகவும் சென்சிடிவ்வாக இருக்கும். அந்த நேரத்தில் புருவத்தை வடிவமைத்தால், ஈஸியாக வந்துவிடும். ஆகவே அவற்றையெல்லாம் செய்யாமல், சருமத்தை சற்று ரிலாக்ஸ் ஆக விடுங்கள்.

* ஃபேஷியல் செய்தபின்னர், 2 -4 மணிநேரத்திற்கு வெயிலுக்குச் செல்ல வேண்டாம். இதனால் புறஊதாக்கதிர்கள் சருமத்தை பாதிப்பதோடு, சருமத் துளைகளையும் பாதிப்படையச் செய்யும், பின் ஃபேஷியல் செய்ததே வீணாகிவிடும்.

- இவ்வாறெல்லாம் செய்துவந்தால், ஃபேஷியல் செய்ததன் பலனை முற்றிலும் அடைவதோடு, முகம் நன்கு அழகாக, பளபளப்போடு மின்னும்.


## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-345

கேள்வி : பேஷியல் செய்தபின்னர் எத்தனை மணித்தியாலயம் வெயிலுக்குள் செல்லக் கூடாது?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-17.12.2012

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 345
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 343 இற்கான விடை :- கொள்ளு ஊறவைத்த நீரை அருந்தவேண்டும்.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- த.பரமலிங்கம், மவுண்கார்மேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

345

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................


## பெண்களுக்கான உடற்பயிற்சிகள்

உடற்பயிற்சியின்போது நம் உறுப்புகள் நம் கட்டுப்பாட்டிற்குள் இயங்குகின்றன, அதனால் உடலுக்கு நலமும் பலமும் வளமும் மிகுதியாக கிட்டுகின்றன. பெண்கள் உடற்பயிற்சி செய்தால் அவர்கள் மார்பகம் எடுப்பாக அமையும். இடை குறுகலாகவும், உடலில் பொலிவூட்டும் நிறம் அமையும்.

நரம்புகள் வலிமைபெறும். தொடைத்தசைகளும் கெண்டைக் கால்களும், தசைகளும் சீர்பட்டு ஒழுங்காகும். கை, கால், கணுக்கால், மார்பகம், இடுப்பு ஆகிய இடங்களில் தேவையான அளவு தசைகள் அமையும். ஊளைச் சதையை ஒழிப்பது போலவே ஒல்லியாய் இருப்பவரின் உடலில் போதுமான தசைகள் அமைய உடற்பயிற்சி உறுதுணை செய்யும். உடல் எடை அளவோடு அமையும்.

**பயிற்சி 1**

ஓரடி அகலம் இடைவெளி இருக்குமாறு கால்களை விறைப்பாக வைத்து, இடுப்பின் இருபுறமும் இருகைகளையும் ஊன்றி நிமிர்ந்து நிற்கவேண்டும். மூச்சை நன்றாக உள்ளே இழுக்கவும், சற்றுநேரம் கழித்து மூச்சினை வெளியேவிட வேண்டும். இவ்வாறு 15 முறை செய்ய வேண்டும்.

**பயிற்சி 2**

முதல் பயிற்சியைப் போல் நிற்கும் நிலையில் மூச்சை நன்றாக உள்ளே இழுத்துக் கொள்ளவேண்டும், கால்களை உயர்த்தி, முன் பாதங்களில் நிற்க வேண்டும். சற்று நேரம் கழித்து முன் நிலைக்கு வந்து மூச்சைவிட வேண்டும். இவ்வாறு 15 முறை செய்ய வேண்டும்.

**பயிற்சி 3**


முதல் பயிற்சியை போல் இருகைகளையும் தொடையின் பக்கவாட்டில் தொங்க வேண்டும். மூச்சை நன்றாக உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். கைகளை பக்கவாட்டில் தோள் அளவுக்கு உயர்த்த வேண்டும். சற்று நேரம் கழித்து முன் நிலைக்கு வந்து மூச்சை விட வேண்டும். இவ்வாறு 15 முறை செய்யவேண்டும்.

மூச்சை இழுக்கும் முக்கியத்துவத்தை முறையாக கற்று பயிற்சிகளை செய்ய தெரிந்து கொள்ளவேண்டும். இடை குறுகும், தோல் அழகிய நிறம் பெறும். கண்கள் ஒளியுடன் திகழும். உடலுக்கு மிகுந்த சக்தி கிட்டும். ஆகவே, பயிற்சியை செய்யும்போது மூச்சை இழுத்துவிட வெளிவிடுகின்ற முறையைச் சரிவரக் கற்றுக் கொள்ளவேண்டும்.



# டிசம்பர் 21

# மாயன் கலண்டர் காட்டும் மாயை



**இந்த** நேரத்தில், பலர் பயத்துடன் பார்க்கும் ஒன்று உண்டென்றால், அது 2012ஆம் ஆண்டு உலகம் அழியப் போகிறது என்ற விந்தையான செய்திக்கு உலக ஊடகங்கள் பல கொடுக்கும் முக்கியத்துவம்தான்.

"சரியாக டிசம்பர் 21 உலகம் அழியப் போகி றதா?" என்பதே பலரின் கேள்வியாகவும், பயமாகவும் இருக்கிறது. இது பற்றி அறிவியலாகவும், அறிவியலற்றதாகவும் பலவித கருத்துக்களும், ஆராய்ச்சிகளும் தினமும் வெளிவந்து கொண்டே இருக்கிறது.

இந்நிலையில், டிசம்பர் 21ம் திகதி உலகம் அழியாது என நாசா விஞ்ஞானிகள் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக, மாயன் நாள்காட்டி 2012.12.21 ஆம் திகதி காலை மணி 11.11 அளவில் முடிவுக்கு வருவதை மேற்கோள் காட்டி உலகம் அழிவை நெருங்குகின்றது என்று இணையத்தளங்களும் திரைப்படங்களும் மக்களை பயமுறுத்தி வருகின்றன.

இதற்கு உறுதுணையாக உலகம்பூராவும் நடந்துவரும் காலநிலை மாற்றங்களும் இயற்கை சீற்றங்களும் வலம் வந்தன. மக்கள் உலக அழிவை நம்பினார்களோ இல்லையோ ஆனால் இந்தவிடயம் பலரின் சாப்பாட்டு மேசைகளிலும், குடி களியாட்டங்களிலும் நல்லதொரு விவாதப் பொருளாகிவிட்டிருந்தது மறுக்க முடியாத விடயமாகும்.

மாயன் கலண்டர் என்றால் என்ன என்பது நிறையப் பேரிற்கு தெரிந்திருக்கும். ஆனால் தெரியாத சிலருக்காக இது தெரிந்தவர்கள் இதனை உருட்டி விடலாமே!

கிமு 2000 ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவில் மாயா என்ற ஓர் இனம் இருந்தது. 3500 ஆண்டுகள் வாழ்ந்த இந்த இனமானது 15-ம் நூற்றாண்டில் அழிந்தது.

இந்த இனத்தினர் விஞ்ஞானிகளைவிடவும் புத்திசாலியாக வாழ்ந்ததாக சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. மாயன் இனத்தவர் கட்டடக் கலை, வான சாஸ்திரம், ஜோதிடம், அமானுஷ்யம், கணித சூத்திரம் போன்ற அனைத்துக் கலைக ளிலும் தேர்ச்சி பெற்ற வித்தகர்களாக இருந்தனர்.

இன்றைக்கு இருப்பதுபோன்ற ஒரு நாட்காட்டியினை அவர்களும் வைத்திருந்தனர். இந்தக் கலண்டர் கி.மு 313ல் தொடங்கியது. இதன்படி டிசம்பர் 2012ம் ஆண்டு 21ஆம் திக தியுடன் முடிவடைகிறது. அதாவது சூரிய மண்டலத்திற்கு 7நாள் என்பது பூமியைப் பொறுத்தவரை 25,625 வருடங்களாம்.

இதனை மாயன் கலண்டர் 5 கால கட்டங்களாகப் பிரிக்கிறது. ஒவ்வொரு கால கட்டமும் 5125 வருடங்களைக் கொண்டி ருக்கிறது. இதன்படி 4 கால கட்டங்கள் முடிவடைந்து இப்போது 5ஆவது காலகட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த நாட்காட்டி 21.12.2012ல் முடிவடைகிறது.

அதன்படி 21.12.2012ல் உலகு அழியும் என்று ஒரு சாரார் நம்புகிறார்கள். மாயன் குறிப்புகளில் இருந்த பலவிடயங்கள் அவர்கள் கணித்தபடி நடந்திருப்பதால் இதுவும் நடக்கலாம் என்பது பலரின் வாதம். ஆனால் மாயன் நாள்காட்டி முடியும் நாளில் உலகம் அழியும் என்று அவர்கள் ஓரிடத்திலும் குறிப்பிடப்படவில்லை.


உலக அழிவு கணிப்புக்கு துணையாக 'நிபிரு' என்றொரு கிரகத்தின் உலகைநோக்கிய பயணம் விவாதிக்கப்பட்டது. சுமேரியர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படும் இக்கிரகம் உலகிற்கு அருகாமையில் வரும் பொழுது துருவ மாற்றம் நிகழும் என்றும் அதனால் பூமி சுழலும் அச்சின் சரிவு மாறி அதனால் பெரும் அழிவுகள் ஏற்படும் என்று கதை அளக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

• இந்த 'நிபிரு' கிரகத்தைப் பற்றி உலாவும் கதைகளின் சிறு தொகுப்பையும் தந்தால் தான் இவ்வாறான கதைகளை கட்டுரைகளாக வரைந்துகொண்டிருக்கும் பலர் ஹொலிவுட் படங்கள் வருவதற்கு எப்படி மூலகாரணமாக இருந்திருக்கிறார்கள் என்பது நமக்குப்புரியும்.

ஒவ்வொரு 3600 ஆண்டுகளுக்கும் ஒரு முறை நிபிரு நம்பூமியின் மிக அருகே வந்து செல்வதாகவும் அப்படி அக்காலத்தில் ஒரு முறை நம்பூமியருகே அக்கோள் வந்த போது அதிலிருந்து பூமிக்கு பறந்து வந்த அனுனாக்கி எனப்பட்ட அந்த கும்பல் அவர்கள் ஆதாயத்துக்காக நம் குரோமோசோம்களை சீண்டி அவர்கள் போலவே நம்மை மாற்றி அவர்களுக்கு நம்மை அடிமையாக்கிவிட்டு போய்விட்டார்கள்.

இந்தக் கதை ஈராக்கில் அன்று கோலோங்கியிருந்த சுமேரிய நாகரிகத்தில் கிடைத்த எச்சங்களில் இருந்து, அவர்களின் சுவடுகளில் கூறப்பட்டுள்ளது. (இது நம் இதிகாசங்களில் நாம் படித்த பறக்கும் ரதங்கள், வானிலிருந்து வந்த வானலோக தேவர்கள், விண்சேனைகள் கதைகளை நினைவு படுத்தவில்லையா?.)

1984-ஆம் ஆண்டு Infrared Astronomical Satellite-ன் உதவியோடு நாசா ஒரு செய்தியை வெளியிட்டது. 50 பில்லியன்



மைல்கள் தொலைவிலிருந்து ஒரு மிகப்பெரிய மர்மப்பொருள் நம் பூமியை நோக்கி நெருங்கி வருவதாக. மீண்டும் 1992 -ஆம் ஆண்டு நாசா இன்னொரு செய்தியை வெளியிட்டது. 7 பில் லியன் மைல்கள் தொலைவிலிருந்து ஒரு கோள் நம் பூமியை நோக்கி நெருங்கி வருவதாக. அதாவது அந்த மர்ம PlanetX நம்மை இன்னும் கிட்ட நெருங்கியிருந்தது. இதற்கு அப்புறம் நாசா இதைப் பற்றி ஒரு மூச்சும் விடவில்லை. இதனை பலரும் புதுசாக கண்டுபிடிக்கப்பட்ட ஏரிஸ் என்ற கோள்தான் அது என்கின்றனர்.

ஏரிஸ் எனப்படும் கோள் உண்மையாகவே இருப்பதாகவும் அது புளூட்டோ போல் ஒரு சிறிய கிரகம் என்றும் அது சூரியவெளிக்கு அப்பாலேயே தான் சுற்றும் என்றும் நாசா விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இது பூமிக்கு மிக அருகில் வரக்கூடிய தூரம் சுமார் 4 பில்லியன் மைல்கள் என்றும் சொல்கிறார்கள்.

ஆனால் இன்னொரு கூட்டமோ இப்படி நாசாவின் டெலஸ் கோப்புகளில் காணப்பட்ட மர்ம கோள் முன்பெல்லாம் பெரும் அழிவை உண்டாக்கிய 'நிபிரு' தான் என்கின்றனர். அதன் போக்கை கண்காணிக்கவே அவசரமாக கொண்டு உலகின் மிகப்பெரிய South Pole Telescope-g;ig ehrh தென் துருவத்தில் கொண்டு நிறுவியுள்ளதாம். உலக அளவில் இது பதட்டத்தையும் மக்களிடையே பயத்தையும் ஏற்படுத்தும் என்பதால் நாசாவும் அரசும் இத்தகவலை மறைத்து வருகின்றது என்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் நமது உலகத்திற்கு அருகாமையில் இது வரைக்கும் எந்தக் கிரகமோ இல்லை எரிகற்களோ இல்லை என்று நாசா சொல்வதை நம்பலாம். ஏனென்றால் அப்படி ஏதாவது 2012.12.21 வருவதாக இருந்தால் வேறு யாராவது விண்வெளி கண்காணிப்பாளர் கண்ணிலாவதுபட்டிருக்கும்.

சரி உலக அரசுகள் எல்லாம் சேர்ந்து இதை மறைக்கின்றன என்று நினைத்துக் கொண்டால் கூட நாம் இருக்கும் சில நாட்களை சந்தோஷமாகக் கழிக்கலாமே! இது வரையில் நாம் நம் மனச்சாட்சிக்கு மாறாக எதையாவது செய்திருந்தால் அதனை மாற்ற கிடைத்த சந்தர்ப்பமாகக் கருதி சரி செய்யலாமே! உலகம் அழியாவிட்டால்கூட இது நமக்கு நல்லதொரு ஆரம்பமாகட்டுமே!

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. உலகம் அழிய நிபிறு எல்லாம் தேவையில்லை. நாங்கள் அதற்கு செய்துவரும் இறுதிச் சடங்குகளே போதும். அது தானாகவே அழிந்துவிடும் காலம் அதி தொலைவல் இல்லை.

## உள்ளூராட்சி சபைகளின்....

(07 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உள்ளூராட்சி மன்றத்தின் கீழ் ஒரு மாநகரசபையே உள்ளது. என்பதுடன், தமிழ் பிரதே சங்களில் உள்ள உள்ளூராட்சி சபை களில் அனைத்துமே பிரதேச சபை களாகவே உள்ளன. இந்தநிலையில் மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்ற போது பிரதேசங்களில் அபிவிருத்தி களும் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுவாஞ்சிக்குடி, செங்கலடி ஆகிய பிரதேச சபைகளை நகர சபையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதானது நல்ல நடவடிக்கை யாக இருக்கும் என்றே சொல்லமுடியும்.

இலங்கையின் உள்ளூராட்சி சபை கள் இலங்கையின் அமைச்சரவை, மாகாண சபைகள் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக உள்ள ஆட்சி அமைப் பாகும். முன்னைய காலங்களில் இலங்கையில் மாநகரசபை, பட்டின சபை, கிராமசபை என்றவாறான உள்ளூராட்சி மன்றங்களே காணப்பட்டன. பின்னர 2011 ஜனவரி மாதம் வரையில். இலங்கையில் 335 உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அதில், மாநகர சபைக-ளின் எண்ணிக்கை - 23, நகர சபைகளின் எண்ணிக்கை - 41, பிரதேச சபைகளின் எண்ணிக்கை - 271 ஆகும். மொத்தமாக நமது நாட்டில், 38259 கிராமங்கள் உள்ளன.

1991ஆம் ஆண்டு மே 11ஆம் திகதி இலங்கையில் நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலானது 1990ஆம் ஆண்டு 25ம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்திற் கிணங்க நடத்தப்பெற்றது.

கடந்த வருடத்தில் இலங்கையில் குறிப்பிட்ட சில நகர சபைகள் மாநகர சபைகளாக அறிவிக்கப்பட்டன. அதே போல் பிரதேச சபைகள் நகர சபைகளாகவும் அறிவிக்கப்பட்டன. அதில் அக் கரைப்பற்று நகரசபை மாநகர சபை யானத, ஏறாவூர் நகர பிரதேச சபை நகர-சபையானது என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

நாம் இந்தக் கட்டுரையில் கிழக்கு மாகாணம் குறித்துப் பார்வையை செலுத்திக் கொண்டிருந்தாலும், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார எல்லைக்குள் மலையகத் தோட்டப்புறங்களையும் உள்வாங்க வேண்டும் என்று மலையக சிவில் சமூகத்தினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விடுத்த கோரிக்கையையும் பார்க்கலாம்.

பிரதேச சபைகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்க உரிமை இருக்கும் தோட்டப் புற மக்களுக்கு அந்தப் பிரதேச சபை களின் சேவைகளைப் பெறுவதில் மட்டும் சட்டரீதியான தடைகள் இருப்பதாக நீண்ட காலமாக இந்தச் சிவில் சமூகத்தினர் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

உள்ளூராட்சி மன்ற முறையில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான சட்டத்திருத்தம் ஒன்று முன்வைக்கப்பட விருந்த நிலையில்அது கொஞ்சம் சூடு பிடித்திருந்தது.

1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான சட்டத் தின்படியும் அதற்கு முன்னர் நடைமுறை யில் இருந்த கிராமிய சபைகளுக்கான சட்டத்தின்படியும் தோட்டப்புறங்கள் உள்ளூ ராட்சி மன்றங்களின் நிர்வாக எல்லையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட் டிருந்தது.

இதனால் பிரதேச சபைகள் நிறை வேற்ற வேண்டிய குடிநீர், வீதி சீரமைப்பு, கழிவகற்றல், கழிப்பிட வசதிகள் உள்ளிட்ட பல அடிப்படை வசதிகளை மலையக மக் கள் பல தசாப்தங்களாக ஒழுங்காக பெற முடியாத நிலை காணப் படுகிறது.

இவ்வாறு பல தரப்பினரிடமிருந்தும் குற்றச்சாட்டுக்ள் விடுக்கப்பட்டிருந்த நிலையிலும் ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் ஆதரவுடன் கடந்த ஒக்ரோபர் மாதத்தில், தொகுதி வாரி மற்றும் விகிதாசார முறை களை இணைத்து தயாரிக்கப்பட்டுள்ள உள் ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

சட்ட மூலத்திற்கான திருத்தங்களை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா முன்வைக்க வாக்கெடுப்பு எதுவும் இன்றி திருத்தங் களுடன் தேர்தல்சட்டம் நிறைவேற்றப்பட்ட தோடு, இதனூடாக உள்ளூராட்சி தேர்தல் களில் விருப்புவாக்கு முறை முற்றாக ரத்துச் செய்யப்படுகிறது.

பல வருடங்களாக ஆராயப்பட்டு வந்த உள்ளூர் அதிகாரசபைகள் சட்டமூலம், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் திருத்தச்சட்டமூலம் என்பன கடந்த ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இது குறித்து ஆராய எதிர்க்கட்சிகள் கால அவகாசம் கோரியதையடுத்து சட்டமூலங்கள் தற்காலிகமாக ஒத்திவைக் கப்பட்டு பின்னர் இரு திருத்தச் சட்டங் களிலும் உள்ள ஒவ்வொரு சரத்தாக திருத்தங்களுடன் நிறை வேற்றப்பட்டன.

புதிய தேர்தல் திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகளுக்கு தொகுதி வாரி முறை மூலம் 70 வீதமானவர்களும், விகிதாசார முறை மூலம் 30 வீதமானவர் களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தேர்தல் தொகுதி எல்லையை நிர்ணயிப்பதற்காக எல்லை நிர்ணயம் செய்ய தேசிய குழுவொன்றும் பிரதான குழுவுக்கு உதவியாக மாவட்ட நிர்ணய குழுக்களும் அமைக்கப்படும். பெண்கள் மற்றும் இளைஞர்களுக்காக 25 வீதம் இடஒதுக்கீடு வழங்கப்படவுள்ளதோடு கட்சி வேட்பாளர் 5 ஆயிரம் ரூபாவும் சுயேச்சைக் குழு வேட்பாளர் 20 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.

வேட்பு மனுதாக்கல் செய்யும் காலம் 15 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளதோடு வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குகள் எண்ணப்படும். குறித்த தேர்தல் தொகுதி யில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு களில் 20 இல் ஒரு பங்கிற்கு குறைவான வாக்குகள் பெறும் வேட்பாளர்களின் கட்டுப்பணம் அரசுடைமையாக்கப்படும்.

50 வீதம் வாக்குகள் பெறும் கட்சி யின் செயலாளர் அல்லது தலைவர், உள்ளுாராட்சி சபைதலைவர், உப தலைவரை தெரிவு செய்வார். இரு தடவைகள் வரவு செலவுத் திட்டம் தோல்வி அடைந்தால் தலைவர் பதவி விலக வேண்டும் உட்பட பல விடயங்கள் இந்த தேர்தல் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தான் உள்ளூ ராட்சிச் சபைகளில் ஏற்படுத்தப்படும் அபிவிருத்திகள் முதன்மை பெறுகின்றன. ஏற்கனவே இருந்த விகிதாசார முறைமை யானது பெரும் எடுப்பில் வாக்குகளைப் பெறுபவர்கள் என்ற வகையில் அமைந்திருப்பதனால் பிரதேசங்கள் புறந்தள்ளப்படும் நிலைமை காணப்பட்டது. அவ்வாறான நிலையினால் அதி-கமான கிராமங்கள் எந்த விதமான அபிவிருத்திகளும் இன்றிக் காணப்பட்டன.

ஆனால் உள்நுழைக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம் காரணமாக கிராமங்களின் அபிவிருத்தி மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட உள்ளூ ராட்சிச் சபைகள் சிறப்பாக மக்களுக்குப் பணியாற்றும் ஒரு நிலை ஏற்படும் என்று நம்புவோம்.



ஜோசெப் கிருஷ்ணா

## விளையாட்டு

### ரிக்கி

பொன்ரிங் என்ற பெயருக்கு அறிமுகம் தேவையில்லை. பேர்த் டெஸ்ட் போட்டி, ஸ்ரீப் விளையாடிய 168 போட்டிகளுடன் இவரை சமன் செய்த போட்டி. பேர்த் டெஸ்ட் போட்டிக்கு முன்னதான இரண்டு டெஸ்ட் போட்டிக்கு முன்னதான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் மூன்று இனிங்சுகளில் பொன்ரிங் எடுத்த ஓட்டங்கள்



0-04 -16. இருந்தும்கூட அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை இவரைக் கைவிடத்தயாராக இல்லை. இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 'ஆஷஸ்' போட்டிகளுக்கு இவர் தேவையென்றே கூறி வந்தார்கள். அணித்தலைவர் மைக்கல் கிளார்க் மற்றும் பிரதம தேர்வாளர். ஆனால் பொன்ரிங் அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. நான் ஓய்வு பெறுகிறேன் என்று தடாலாடியாக அறிவித்தார். இது கிரிக்கெட் உலகில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பொன்ரிங் மைதானத்தில்

# விடைதர மனமில்லை!

இறங்கினால் பந்து வீச்சாளர்கள் பதறும் காலம் ஒன்றிருந்தது. பொன்டிங் இன்று பேசும் போது ஆஷஸ் தொடருக்கு· நான் பொருத்தம் இலை போலத் தெரிகிறது என்று கூறியுள்ளார். இது மிகவும் கடினமான துயர் நிறைந்த முடிவு. ஆனால் என் திறமை வெளிப்பாட்டை மையப்படுத்தி யோசித்து எடுத்த சரியான முடிவு என்று தெரிவித்தாளர்.

தற்போது 38 வயதாகும் பொன்ரிங், 1995 இல் பேர்த் (WACA) மைதானத்தில் முதல் முதலாவதாக இலங்கைக்கு எதிராகக் களமிறங்கினார். அந்த ஆட்டத்தில் 96 ஓட்டங்கள் பெற்றார். மத்தியஸ்தரின் தவறான முடிவால் ஆட்டம் இழந்ததாக அறிவிக்கப் பட்டாலும், இறுதியில் ஆட்டமும் இனிங்ஸ் வெற்றி என்று அவுஸ்திரேலியாவுக்கு அமைந்தது. இவரதுசிறப்புக்களின் முதன்மையென்றால் 2003, 2007 இரண்டு உலகக்கிண்ணத்தை அணித்தலைவராக இருந்து கைப்பற்றியமை. ஆனால் கால ஓட்டம் அவரைப் படிப்படியாக ஒவ்வொரு நிலையிலும் இருந்து விலக்கி வைத்தது. இது இயல்பானதொன்றுதான். ஆனால் இவரின் சாதனைகள் பிரமிப்பானவை. இப்போதைய பேர்த் டெஸ்ட் நீங்கலாக 167 டெஸ்ட் போட்டிகளில் 13366 ஓட்டங்கள் 375ஒரு நாள் போட்டிகளில் 13704 ஓட்டங்கள். இந்த வரிசை நீண்டுசெல்லும் என்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்வோம். இறுதியான பத்திரிகையாளர் மகாநாட்டுக்கு



பொன்ரிங் தனது மனைவி ரீனா மற்றும் இரண்டு மகள்களுடன் வந்திருந்தார். உணர்வு பூர்வமான அந்த நேரத்தில் மைக்கல் கிளார்க் கண்ணீர் விட்டார். ஒரு சகாப்தம் என்னவோ முடிவுக்கு வந்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால் பொன்ரிங் ஏற்படுத்திய பதிவுகள் என்றும் பேசப்படும். அற்புதமான ஒரு வீரனுக்கு நல்வாழ்த்துக்களை நாமும் சேர்ந்து கூறிக்கொள்ளலாம்.



# தலை தப்பியது



Time Out முறையில் முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில் இதுவரையில் நான்குபேர் மட்டுமே ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அன்ட்ருஜோன்ஸ், ஹேமுலால் யாதவ், வெஸ்பேட்டிரேக் மற்றும் ஓ.ஜே.ஹெரிஸ். இந்தப் பட்டியலில் இலங்கையின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் தரங்க, பரணவிதானவம் சேர்ந்து களங்கப்பட்டிருப்பார். தப்பிவிட்டார். நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவதுடெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸ் ஆரம்பித்த வேளையில் மத்தியஸ்தர்கள். நியூசிலாந்து வீரர்கள் மைதானத்தில் தயார். ஆனால் தரங்க களமிறங்கும் பொறுப்பின்றி பெவிலியனில் இருந்துள்ளார். நடுவர்கள் சைகைசெய்து அவரை மைதானத்துக்கு அழைக்கவேண்டியநிலை. கிரிக்கெட் சட்ட விதி 31இன் படி சரியான நேரத்தில் களம் இறங்கா விட்டால் நடுவர் அவரை அவுட் என்று அறிவிக்கலாம். நடுவர் அழைத்த பின்னர் கூட பதைபதைத்து மைதானத்துக்குள் வராமல்தனது முழங்கைப் பாதுகாப்புக் கவசத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார். நியூசிலாந்து வீரர்கள் சிறிது அழுத்தம் கொடுத்திருந்தால் நடுவராலும் எதுவும் செய்ய முடியாமல் போயிருக்கும். ஏதோ தப்பிப் பிழைத்து மைதானத்துள் நுழைந்த அவர் முதல் பந்திலேயேஅவுட்டாகி பெபிலியன் திரும்பியது இன்னொரு அவலம். இப்போதுள்ள கேள்வி டெஸ்ட் ஆட்டமொன்றில் அர்ப்பணிப்பு, பொறுப்புணர்வு இல்லாமல் இவரால் இப்படி நடந்துகொள்ள எப்படி முடிந்தது என்பதுதான். அதோடு இவர் பெரிதாக டெஸ்ட் போட்டிகளில் சாதித்ததாகவும் இல்லை. கடந்த பதினான்கு டெஸ்ட் போட்டிகளில் இவர் பெற்றது அதி கூடுதலாக ஒரேயொரு அரைச் சதம் மட்டும்தான் என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இன்னொரு விடயத்தையும் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதாவது துலிப்மெண்டிஸ் தேர்வுக்குழுத் தலைவராக இருந்தபோது தென்னாபிரிக்காவுக்கெதிரான போட்டிகளில் விலக்கப்பட்டிருந்தார். ஆனால் காலம் மாறி புதிய தேர்வாளர்கள் வந்த பின் இவருக்கு என்று ஒரு இடம் நிரந்தரமாகவே வழங்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.

மேலும் டெஸ்ட் ஆரம்பத் துடுப்பாட்டத்துக்கு நல்ல வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை உள்கொண்டுவரத்தான் அதிகாரம் உள்ள தரப்பாருக்கு இஷ்டம் இல்லைப் போலத் தெரிகிறது என்றும் குமுறுகிறார்கள். என்னவோ நடக்கிறது. என்னவென்று புரியவில்லை. அதுபோக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வி கண்டநிலையில், ஆரம்பத்திலேயே இவரும் Time Out ஆகியிருந்தால் தோல்வியின் துயரத்துடன், கறைபடிந்த பக்கம் ஒன்றும் எழுதப்பட்டிருக்கும். நல்லவேளை இலங்கைக் கிரிக்கெட் அணி தக்கவைத்துள்ள நல்ல பெயர் காப்பாற்றப்பட்டுள்ளது.

# மல்லிகை வாசம்



இலங்கையின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாசை நாங்கள் ஏன் மறந்தோம் என்று கேள்வி எழுப்புகிறார் ஒரு விமர்சகர். இந்தக்கேள்வி எழுப்பக் காரணம் இருக்கிறது. நியூசிலாந்தின் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் வெற்றிக்கு றொஸ் ரெய்லர் உட்பட.அவர்கள் அனைவரும் சமிந்தவாசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டதுதான்

அது நடந்தது இதுதான். நியூசிலாந்து அணியின் பந்துவீச்சுப் பயிற்றுனர் ஷேன் பொண்டாக இருந்தபோதும், இலங்கைச் சுற்றுப் பயணத்துக்காக விசேடமாகச் சமிந்த வாசையும் பந்து வீச்சு ஆலோசகராக அவர்கள் நியமித்துக் கொண்டார்கள்.

ஆனால் மாற்றான் தோட்டத்து மல்லிகை அவர்களுக்கு மணம் வீச, நாங்கள் சமிந்த வாசைக் கண்டு கொள்ளவில்லை என்பது தான் விமர்சகர்களின் ஆதங்கம்.

பதினொரு வருடங்கள் இலங்கை அணியில் விளையாடியவர். இருந்தும் 2005இல் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டபோது பெரிதாக அவர் கண்டு கொள்ளப்படவில்லை. மேலும் அவரது ஓய்வு என்பது கூட அவர் மீது மேற்கொள்ளப்பட்ட நிர்ப்பந்தங்களால் ஏற்பட்டது என்றும் பேசிக்கொள்கிறார்கள். இதை விட மோசமாக 2011 உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு அழைக்கப்பட்ட சமிந்த வாஸ் வெறும் பார்வையாளராகப்பட்டார். இப்படி அவரது துக்கம் நீண்டு செல்கிறது. ஆனால் நியூசிலாந்தின் பயிற்றுவிப்பாளர் ஜோண் புக்கானன் இவரைப் பயன்படுத்திக் கொண்டார். இறுதிப் போட்டியில் எட்டு விக்கெட்டுக்களைச் சரித்தவர்கள் வேகப்பந்து வீச்சாளர்கள். அதுவும் எதுவித இலக்கும் சரிக்காமல் இருந்த பிரெஸ்வெல் மஹேல, மற்றும் சங்காவின் இலக்குகளைக் கைப்பற்றியது இலங்கை அணிக்கு இடி விழுந்தது போலாயிற்று. எல்லாவற்றுக்கும் உபயம் சமிந்தவாஸ். இதனால்தான் நியூசிலாந்து அணி சமிந்தவவை தலையில்



தூக்கி வைத்துக்கொண்டாடுகிறது. ஆனால் இந்தத் திறமைசாலியை எமது கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஏன் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் புரியாத புதிராக இருக்கின்றது.

தொடர்ந்து 9 டெஸ்ட் போட்டிகளில் நியூலாந்து வெற்றி என்றால் என்னவென்று தெரியாத நிலை. அதுவும் இறுதி ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி. ஆனால் பத்தாவது சந்தர்ப்பம் வெற்றி. அதுவும் இலங்கையில் மிகப்பெரிய வளத்தைப் பயன்படுத்தி இலங்கையைக் கவிழ்த்து விட்டார்கள். இதுதான் இனி சமிந்தவாசின் புதிய கிரிக்கெட் பயணமொன்றுக்கு வழிவகுக்கப் போகிறதோ தெரியவில்லை. எங்களுக்கு மணம் தெரியாமல் போன மல்லிகையின் வாசத்தை நியூசிலாந்து நுகர்ந்து கொண்டதுததான் ஆச்சரியம்.

# வலியைத் தாண்டி வெல்வோம்







தற்போது நியூசிலாந்துக்கெதிரான கிரிக்கெட் தொடர் முடிவடைந்த நிலையில் இலங்கை அணி மிக முக்கியமானதும் சவாலானதுமான கிரிக்கெட் தொடர் ஒன்றுக்காக டிசம்பர் இரண்டாம் திகதி அவுஸ்திரேலியா சென்றிருக்கிறார்கள். இந்தச் சுற்றுப் பயணம் எட்டு வாரங்கள் கொண்டது. கிறிஸ்மஸ், புதுவருடக் கொண்டாட்டங்களையும் அவுஸ்திரேலியாவில் கொண்டாடப்போகும் எமது வீரர்கள் மூன்று டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒரு நாள் போட்டிகள் மற்றும் இரண்டு இருபதுக்கு போட்டிகள் என்று முழுமை யான கிரிக்கெட் கொண்டாட்டங்களையும் எதிர்கொள்ளப் போகிறார்கள். இந்த வகையில் முதலாவது டெஸ்ட் போட்டி டஸ்மேனியாவில் உள்ள ஹோபார்ட் நகரில் டிசம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பொழுது நாங்கள் பார்க்கப் போகும் செய்தி சிறிது மனநெருடலான செய்தியாக இருக்கிறது. நியூசிலாந்துத் தொடர் முடிவடைந்த பின்பே அவுஸ்திரேலியா செல்லும் அணித்தெரிவுசெய்வதாக இருந்த போதும், முன்பு போலன்றி முன்னதாகவே விசாவிற்கு விண்ணப்பிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டதால் மனத்திருப்தியான அணியொன்றை அறிவிக்கமுடியாமல் போனதாகக் கிரிக்கெட் சபை மனவருத்தப்பட்டள்ளது. அதுமட்டுமன்றி சங்கா, மஹேல போன்றவர்கள் தூதுவராயலத்துக்கு நேரடியாகச் சென்று தமது கைவிரல் அடையாளங்களையும் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது பற்றிப்பேசிய அதிகாரி ஒருவர், மஹேல,சங்கா இருவரும் அவுஸ்ரேலியாவில் சகலராலும் அறியப்பட்ட மிகப்பெரிய கிரிக்கெட் கனவான்கள். இவர்களிடமும் கைரேகை அடையாளங்கள் பெறப்பட்டுள்ளது. இவர்கள் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்கள் போல நடத்தப்பட்டுள்ளமை மிக மனவேதனையானது என்று தெரிவித்துள்ளர். இதனால் வீரர்களும் மனவேதனை அடைந்துள்ளதாகவும் தெரிகிறது. இருந்தாலும்கூட தூதுவராலயம் கூறுகின்ற நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும் என்னும் அதிகாரி, முன்பெல்லாம் விசா எடுப்பதென்பது சில மணி நேர விடயம்தான். இப்பொழுது இரண்டு வாரம் தேவைப்படுகின்றது என்றும் கூறியுள்ளார்.

கொஞ்சம் உள்ளார்ந்து பார்த்தால் தற்போது கப்பலோட்டும் நம் இலங்கையர்களால் தான் என்று கூறும் எமது நேசத்துக்கும் கௌரவத்துக்கும் உரிய வீரர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. என்றாலும் கூட எமது அணியினர் சிறந்த முறையில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துவோம்.

# சமுதாயமும் இளைஞர்களும்

இளைஞர்கள் வாழ்க்கைப் படித்தளங்களிலேயே மிக முக்கிய நிலையில் உள்ளவர்கள். உடல் ஆற்றல் ஓங்கியிருக்கும் காலம் இளமைப்பருவம். இப்பருவத்தில்தான் அவர்கள் தம் அறிவாற்றலையும், செயல்திறத்தையும் உயர்த்திக் கொள்ளவேண்டும். இந்த காலத்தில் அவர்கள் பெறுகின்ற நல்லறிவு தான் அவர்களை வாழ்நாள் முழுவதும் செம்மையாக வாழ வகை செய்யும்.

கல்வியென்றால் பொதுவாக, உலகெங்கும் உள்ள கருத்து, எழுத்தறிவு, தொழிலறிவு, பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளும் அறிவு என்பதாக உள்ளது. இந்தளவில் பெறப்படும் கல்வியால் தொழில்நுட்பங்கள் பெருகியுள்ளன. வாழ்க்கையில் உடல் சிரமத்தைக் குறைக்கக் கூடிய வகையில் வேக வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் இன்னும் இவை போன்ற கணக்கற்ற சாதனங்கள் பெருகியுள்ளன. விஞ்ஞானத்தின் துணைகொண்டு, அவைகளின் உற்பத்தி பெருகியதன் நோக்கம் என்ன? வாழ்வில் சிரமம் குறைத்து, இன்பமும், நிறைவும் பெற்று



பலரது உழைப்பால் உருவாவதே சமுதாய வளம். வாழும் ஒவ்வொருவரும் அவ்வளத்தை எடுக்கும் போது, அது குறையவே செய்யும். சமுதாய வளம் குறையாதிருக்க எடுக்கும் ஒவ்வொருவரும் திரும்ப அளிக்கும் உணர்வு பெறவேண்டும். இதுவே கடமையுணர்வாகும். அப்படி அளிக்காவிடின், வளம் குன்றி வறுமையே மிஞ்சும். பஞ்சமா பாதகங்கள் பெருகி, மனிதகுலம் துன்பத்தையே அடைய நேரும்.

கடமை உணர்விலேதான், உரிமை ஒன்றி நிற்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இதனையே திருவள்ளுவரும் "இவர்பல ராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோவாதவர்" என்று உரைக்கின்றார் எனவே, எனது உழைப்பின் மூலமாகவே உயிர் வாழ்வேன் என்ற உறுதிப்பாட்டை ஒவ்வொரு இளைஞரும் உள்ளத்தில் கொள்ளவேண்டும். பிறருக்கு நன்மை அளிக்கக்கூடிய நிலையில் நம்மை, உழைப்பால் உயர்த்திக் கொண்டேயிருக்க வேண்டும். பிறரை எதிர்பார்க்கும் நிலை கூடாது.

வாழவேண்டும் என்பதுதானே?

பெருகியுள்ள வசதிகளைக் கொண்டு, மனிதர்கள் தற்காலத்தில் இன்பமும், மன நிறைவும், மனஅமைதியும் பெற்று வாழ்கிறார்களா என்றால் இல்லையென்ற நிலையேயுள்ளது.

மனநிறைவு என்பது மனித வாழ்வின் குறிக்கோள் ஆகும். அத்தகைய மன நிறைவை எவ்வாறு பெறுவது? எவ்வாறு இனிமையும், அமைதியும் உள்ள வாழ்க்கை வாழ்வது என்ற அறிவும், அதனை மதித்து வாழும் பயிற்சியும், ஒவ்வொருவருக்கும் அவசியமாகும். இத்தகைய அறிவைத்தான் பண்பாட்டறிவு என்று அறிஞர்கள், ஞானிகள் பகுத்துள்ளார்கள்.

மனதைக் கொண்டுதான் வாழ்க்கையை நடத்துகிறோம். மனநிலைக்கு ஏற்றவாறே வாழ்க்கை அமைகிறது. மனம் செம்மைப்பட்டு நல்ல முறையில், இனிமையாக, நிறைவாக வாழ வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் தனக்கும் சமுதாயத்திற்கும், சமுதாயத்திற்கும் இயற்கைக்கும், இயற்கைக்கும் தனக்கும் உள்ள தொடர்பைச் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

தனி மனிதனுக்குத் தேவையான அனைத்தும் இயற்கையிலிருந்தே மனித தொகுப்பாக உள்ள சமுதாயத்தால் எடுக்கப்பட்டு, பக்குவப்படுத்தப்பட்டு அளிக்கப்படுகிறது. எந்த ஒரு தனி மனிதரும் தனது தேவைகளைத்தானே அடைந்து, பூர்த்தி செய்து கொள்ள முடியாது. நாம் பயன்படுத்தும் எந்த ஒரு பொருளும் மனித இனத்தின், தொகுத்த உழைப்பின் பலனாக உருவாகி வருவதை முதலில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த வகையில் சிந்திக்கின்ற போதுதான், நம் ஒவ்வொருவரையும் பாதுகாப்பதும், பராமரிப்பதும் சமுதாயம் தான் என்ற உண்மை விளங்கும்.

நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கு வாழ்ந்து கொண்டுள்ளோம்? என்று எண்ணிப்பார்க்க வேண்டும். தூய வெளியாக உள்ள இறைநிலையே விண் முதல் பிரபஞ்சம் வரையாக மலர்ந்து செயற்படுகிறது. இறைநிலை என்பது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு காலம் என்ற நான்கு தன்மைகளை உடையது. அனைத்துத் தோற்றங்களையும் தாங்கிக் கொண்டும், இயக்கியும் வரும் அதன் தன்மைகள் பேராற்றல், எனப்படுகின்றன. தான் பெறும் நன்மைகளைக் கருத்திற்கொண்டு, எவ்வித எதிர்பார்ப்புமின்றி, மீண்டும் சமுதாயத்திற்கே நமது அறிவையும், ஆற்றலையும் அளிப்பதே நிஷ்காம்ய கர்மம் என்று நமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

பலரது உழைப்பால் உருவாவதே சமுதாய வளம். வாழும் ஒவ்வொரு வரும் அவ்வளத்தை எடுக்கும் போது, அது குறையவே செய்யும். சமுதாய வளம் குறையாதிருக்க எடுக்கும் ஒவ்வொருவரும் திரும்ப அளிக்கும் உணர்வு பெறவேண்டும். இதுவே கடமையுணர்வாகும். அப்படி அளிக்காவிடின், வளம் குன்றி வறுமையே மிஞ்சும். பஞ்சமா பாதகங்கள் பெருகி, மனிதகுலம் துன்பத்தையே அடைய நேரும். கடமை உணர்விலேதான், உரிமை ஒன்றி நிற்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். இதனையே திருவள்ளுவரும் "இவர்பல ராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோவா தவர்"என்று உரைக்கின்றார் எனவே, எனது உழைப்பின் மூல மாகவே உயிர் வாழ்வேன் என்ற உறுதிப்பாட்டை ஒவ்வொரு இளைஞரும் உள்ளத்தில் கொள்ளவேண்டும். பிறருக்கு நன்மை அளிக்கக்கூடிய நிலையில் நம்மை, உழைப்பால் உயர்த்திக் கொண்டேயிருக்க வேண்டும். பிறரை எதிர்பார்க்கும் நிலை கூடரது.

இளைஞர்கள் அடுத்ததாக மனதில் கொள்ள வேண்டிய ஒன்று ஒழுக்கம். ஒழுக்கம் என்பது பிறருக்கு தீங்கு செய்யாதிருத்தலாகும். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. இது இறைநீதி. செயல் ஒன்றைச் செய்துவிட்டு, விளைவிலிருந்து யாரும் தப்பமுடியாது. அந்த அடிப்படையில் நல்லதை விரும்பும் நாம், எப்பொழுதும் எண்ணம், சொல், செயலால் நல்லதையே செய்யப் பழக வேண்டும்.

நமது வாழ்வு இனிமை கூடியதாக அமைய வேண்டுமென்றால் நமக்கும் பிறர்க்கும் இடையே எப்பொழும் நல்லுறவு பராமரிக்கப்படுவதில் கவனம் செலுத்தவேண்டும். பிறருடைய ஒத்துழைப்பில்தான். ஒவ்வொருவருடைய வாழ்வும் நடைபெறுகிறது என்ற உண்மையை மறக்கக்கூடாது.

நான் எங்கு, எப்படி எவ்விடத்தில் இருக்கிறேன் என்று கணித்துக் கொள்ளவேண்டும். அதாவது வயதிலே, உடல் வலுவிலே, கல்வியிலே, செயல்திறமையிலே, அறிவின் நுட்பத்திலே, பொருள் வளத்திலே, அதிகாரத்திலே, எந்த நிலையில் இருக்கிறேன் என்று கவனித்துக் கொண்டு இவற்றால் நான், எனக்கு, என் குடும்பத்திற்கு, சுற்றத்தார்க்கு, ஊருக்கு, உலகுக்கு என்ன நன்மை செய்திட முடியும் என்று பார்க்கவேண்டும். அவற்றினை, ஆற்றுவதற்கு எனது திறமையை எந்தெந்த முறையில் வளர்த்துக் கொள்ளமுடியும் என்று திட்டமிட்டு முறையான பயிற்சியின் மூலம் செயலில் இறங்கிவிடவேண்டும். இவ்வாறு செயல் புரியபுரிய, ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கிவிடும்.

யாரிடமிருந்து எப்போதும் எதையும் எதிர்பார்த்தல் வேண்டாம். எதிர்பார்த்தல் பெரும்பாலும் ஏமாற்றத்தினால் தான் முடிகிறது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்துவிடும்.

ஒவ்வொரு வருக்கும் அறிவு இருக்கிறது. பொறுப்புணர்ச்சி இருக்கிறது. செயல் திறமை இருக்கிறது. வாழ்வின் அனுபவம் இருக்கிறது. இவற்றை ஒப்புக் கொள்வேண்டும்.

பிறரை மேய்ப்பதோ, அடக்கி ஆள நினைப்பதோ, இன்ப ஊற்றை அடைத்து விடும். நல்லது செய்வதோடு விட்டுவிட வேண்டும். செய்தவற்றிற்குப் பலனை எதிர்பார்த்தல் ஏமாற்றம் தரும்.

அவசியமின்றி பிறர் செயலில் தலையிடல் கூடாது. புதிய சிக்கல்களையும் உருவாக்கிக் கொள்ளக்கூடாது. நமது கடமையிலிருந்து, தக்க நீதி உணர்வின்றி நழுவவும் கூடாது. இவற்றால் நம் மீது பிறர்க்கு மதிப்பு உயரும். உள்ளத்தில் அமைதியும் பெருகும்.

பிறருடைய வாழும் சுதந்திரத்தையும், வளத்தையும் பறிக்க மாட்டேன் என்ற உறுதியை ஒவ்வொரு இளைஞரும் ஏற்றுச் செயற்படல் அவசியம்.

உடல் இயலாமையால் பிற காரணங்களால், துன்பத்தில் இருப்போரைக்கண்டு, மனம் இரங்கி, அவர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்திட முன்வரவேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்து, நம்பிக்கை கொண்ட மனம் என்றும் வெற்றியும், மகிழ்ச்சியும் அமைதியும் பெற்று, நிறைவு பெற்ற நிலையில் இருந்துவரும். நமது செயலுக்கு விளைவாக பிறஉயிருக்கு நல்லது செய்தால் நமக்கு நன்மையும், கெட்டது செய்தால் நமக்கு துன்பமும் வரும். செயலுக்குத் தக்க விளைவாக வருவதே இறைநீதி என்பது இன்றைய இளைஞர் சமுதாயம் பெறவேண்டிய உண்மை உணர்வாகும்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 499

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | | | | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | |
| | 32 | | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 17.12.2012 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 499
தினமுரசு வாரமலர்.
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 497- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நெ | 2 ளி | 3 ப் | 4 பு | | 6 சா |
| 7 டு | 8 கு | 9 பி | | 11 நா | 12 ண் |
| 13 ந் | | 15 தி | 16 ரு | 17 வ | 18 டி |
| 19 தீ | | 21 லி | | 23 ல் | 24 பு |
| 25 வு | 26 தூ | | 28 ஏ | | 30 ய |
| | 32 வி | 33 ஞ் | 34 சு | 35 த | 36 ல் |

**இடமிருந்து வலம்**

01. மலை அல்லது கோபுரம்.
05. பாலஸ்தீனத்தின் தலைநகர். (திரும்பியுள்ளது)
07. தென்றலைச் சிறப்பித்துக்கூறும் நூல் வகை ஒன்று. (குழம்பியுள்ளது)
17. கொடூரமான. (திரும்பியுள்ளது)
19. மாணிக்கம்.
23. அவர்களது.
25. பெரியோர் அல்லது மகளிர். (குழம்பியுள்ளது)
34. பருவம் பூக்கும் நேரத்தில் இது செய்யப் போராட்டம். இது வந்த பின்னாலே போதை ஆட்டம்.

**மேலிருந்து கீழ்**

01. முருகக் கடவுளுக்கு இப்படியும் பெயருண்டு.
02. ஒரு குறியீடு. (திரும்பியுள்ளது)
03. ஒரு காலம். (திரும்பியுள்ளது)
05. அருகன் அல்லது புத்தன். (குழம்பியுள்ளது)
06. சுமார் 16 கிலோமீற்றர் கொண்ட தொலைவு.
20. ஒவ்வொரு வருடமும் நவம்பர் பத்தை இவரது தினமாகக் கொண்டாட ஐ.நா பொது செயலாளர் அண்மையில் அறிவித்துள்ளார்.
21. அணிமை அல்லது பக்கம் (திரும்பியுள்ளது)
28. வாய்க்கால். (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.497 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.ஆர்.ஆதிலா, கொழும்பு வீதி, பேராதனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. வ.பைரவி, கச்சாய் வீதி, கொடிகாமம்.
02. எம்.எம்.காதர், கிண்ணியா-06
03. ம.நிலாமதி, ஆழியவளை.
04. திருமதி எஸ்.புஷ்பராணி, கண்டி வீதி, சாவகச்சேரி.
05. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
06. கு.வசந்தன், பரந்தன், கிளிநொச்சி.
07. வ.சைந்தவி, பிரதான வீதி, திருகோணமலை.
08. ம.வரதன், தும்பளை மேற்கு, தும்பளை.
09. த. சத்தியன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
10. த.தாரணி, சரசாலை தெற்கு, மட்டுவில்.

10



**இராமசாமி ரமேஷ், அளம்பில்**

ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.

# வலிகளின் சன்மானம்

**நிலாவை** தனது அக்காவின் மகன் ரகுவுக்கு கட்டிவைத்து விடவேண்டும் என்பதே அவளின் பிறப்பு தொட்டு இன்றுவரை துரைசிங்கத்தாரின் எண்ணமும் விருப்பமுமாக இருந்தது.

முல்லைத்தீவின் வனப்பையும் விவசாயத்தையும் பறைசாற்றும் உடையார்கட்டில் தான் ரகு தற்போது ஒரு தனியார் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தான். நிலாவின் கல்வியும் நிறைவு பெற்றவிட்டதன் பின்னர், அவளை தமது மருமகளாக்கி விட வேண்டும் என்பதும், துரைசிங்கத்தாரின் தமக்கை முத்து லட்சுமியின் சிந்தனையாக இருந்திருக் கிறது. இன்று வரை தொடர்கிறது. நிலாவும் ஒரே பிள்ளை என்பதால் அவளது குடும்பம் இன்றுவரை சேர்த்துள்ள அத்தனை சொத்துக்களும், காணி பூமிகளும் இவளுக்கு மட்டும்தான்.

தன் கணவரின் விருப்பத்தை ஆரம்பத்தில் ஆதரித்த தேவகி, நாட் செல்லச் செல்ல ரகுவின் நடத்தைகளைக் கேள்வி யுற்றும் நேரிலேயே பார்த்தும் மனதை மாற்றிக் கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

ரகு விடுதியில் தங்கித்தான் ஆரம்பத்தில் படித்து முடித்தவன்! எப்போதும் ஆடம்பரத்தையும் நாகரிகம் எனும் போர்வையில் இன்றைய இளசுகள் பண்ணும் அத்தனை சேஷ்டைகளும் அவனுக்கு அத்துப்படி! நிலாவுக்கு தன் முறை மச்சான் என்பதோடு உறவு நின்றுவிடும். அளவுக்கு மீறி அவனோடு பேசப் போகமாட்டாள். அவனுக்குள் நீலா மீதான பிரியம் ஏற்பட்டிருந்தது உண்மை தான்!



ஆனாலும், நிலாவின் நெஞ்சுக்குள் இன்னொரு இலக்கியம் செய்கின்றவனல்லவா இப்போது வசித்துக் கொண்டிருக்கிறான்!

தேவகிக்கு துரைசிங்கத்தாரின் பீடிகையை எப்படி தடுப்பது அல்லது தவிர்ப்பது எனப் புரியவில்லை! மெதுவாக மௌனத்தை முழுங்கியபடி, "இஞ்சேருங்க!!" அன்பாக தன் பேச்சுக்கு அவரை தலைசாய்க்க வைக்க எத்தனிப்போடு இழுத்து முடித்தாள்.

"என்னப்பா? சொல்லு.."

"நான் இப்பிடிப் பேசுறனே என்று... தப்பா நினைக்காதீங்க" வார்த்தைகளுக்கு நீள முடிச்சுப் போட்ட தேவகியை இடைமறித்து துரைசிங்கம், "நான் அடுத்து வீட்டுக்காரனல்ல! உன் வீட்டுக்காரன்தான். எதுவும் நினைக்கமாட்டன். சொல்லம்மா" என்றார்.

"நாங்க என்னத்தை பேசினாலும் நிலாவுக்கு ஒரு வார்த்தை சொல்லிப் போட்டு எடுக்கிற முடிவுதான் எனக்குச் சரி என்று படுகுது. ஏனெண்டால் அந்தக் காலம் மாதிரி இப்பத்தைய பிள்ளையள் இல்லையப்பா! புருஷனாகப் போகிறவனைப் பார்க்காமலே தாய், தகப்பன் சொல்லுறதைக் கேட்டு கட்டிக் கொண்ட காலம் இப்ப இல்லை!!" தேவகியின் பேச்சில் உண்மை இருப்பது புரிந்தது அவருக்கு. ஆனாலும் தாம் வளர்த்த பிள்ளை தவறான முடிவு எடுக்காது என்பது அவரது நம்பிக்கை. இந்த நம்பிக்கைகள் சிதறடிக்கப்படும் போதுதான் பல பெற்றவர்கள் வில்லங்கமான விபரீதமான முடிவுகளை எடுப்பார்கள்.

"நாங்க என்னத்தை பேசினாலும் நிலாவுக்கு ஒரு வார்த்தை சொல்லிப் போட்டு எடுக்கிற முடிவு தான் எனக்குச் சரி என்று படுகுது. ஏனெண்டால் அந்தக் காலம் மாதிரி இப்பத்தைய பிள்ளையள் இல்லையப்பா! புருஷனாகப் போகிறவனைப் பார்க்காமலே தாய், தகப்பன் சொல்லுறதைக் கேட்டு கட்டிக் கொண்ட காலம் இப்ப இல்லை!!" தேவகியின் பேச்சில் உண்மை இருப்பது புரிந்தது அவருக்கு. ஆனாலும் தாம் வளர்த்த பிள்ளை தவறான முடிவு எடுக்காது என்பது அவரது நம்பிக்கை. இந்த நம்பிக்கைகள் சிதறடிக்கப்படும் போதுதான் பல பெற்றவர்கள் வில்லங்கமான விபரீதமான முடிவுகளை எடுப்பார்கள்.

"அதுசரி, ஆனால் சின்ன வயசிலேயே அக்காச்சிக்கு நான் வாக்குக் கொடுத்திட்டன். ரகுதான் எங்கட குடும்பத்துக்கு ஏற்றவன். நல்ல வேலை செய்கிறான் பெடியன்."

என்றவரிடம் "ஓமப்பா! அதுசரி ஆனால் கிட்டடியில ஒரு கதை அறிஞ்சன். உந்தப் பள்ளிகூடத்து பக்கத்து வீட்டுக்கார வதனியின்ர மகன் விமலனும்... ரகுவும்.. எங்கயோ குடிச்சுப் போட்டு விழுந்து கிடந்தவங்களாம்... அண்டைக்கு கதைக்கேக்க ஆனந்திதான் சொன்னவள்.." ரகுவை மருமகனாய் நினைக்க தேவகியின் மனசு இடங்கொடுக்கவில்லை. தன் கணவனின் மனசை மாற்றமுடியும் எனும் நம்பிக்கை தேவகிக்கு வலுத்திருந்தது.

" ஓஹோ!! சரி.. இதைப் பற்றி நான் விசாரிக்கிறன்... ஆனா... எங்கட பெடியன் தானே? இப்படி வந்த பெடிபெட்டையள் செய்யாத ஒண்டை இவனும் செய்யேல்லைத் தானே...!!" தன் முடிவு தெளிவான நிலையில் இருப்பதால் அவரின் பதில் தேவகிக்கு நினைப்புக் கூட்டியது. எழுந்துகொண்ட துரைசிங்கம், மண்வெட்டியை எடுத்து தோளிலே வைத்தபடி, "நிலா வந்ததும்... மெதுவா கதைச்சுப்பாரப்பா..." என்றவாறு வயலில் வாய்க்கால் ஒன்று உடைத்துவிட்டது. அதனை சரிசெய்ய நடக்கத் தொடங்கினார்.

" மஹூம்..." என்னதான் முடிவோ? பெருமூச்சு ஒன்று ஆழமாய் வெளிக்கிளம்பியது தேவகியிடமிருந்து!!

அந்தி சாய்ந்து இருள், மை கரைத்துத் தெளித்தது போல பரவத் தொடங்கியிருந்தது. படலை திறக்கும் சத்தமும் ஜிம்மி குரைத்து, தன் அன்பான சிணுங்கலோடு நகர்வதையும் கேட்டு நிலாதான் என்ற எண்ணத்தில் குசினிக்குள்ளிருந்து வெளிவந்தபோது, தன் செல்ல நாயோடு பேசிக் கொண்டிருந்தாள் நிலா.

"வந்ததும் வராததுமாய்.. நாயோட..." என்று வந்த அதட்டலோடு நிலா வீட்டுக்குள் வந்துவிட்டாள். தன்னவனை தரிசித்த அந்த நினைவுகள் நெஞ்சுக்குழிக்குள் இன்ப அருவியை சுரக்க, பூரித்திருந்தாள் நிலா! தேவகியும் இதனை அவதானிக்கத் தவறவில்லை.

"குளிச்சிட்டு வாம்மா! சாப்பிட்டு... பிறகு நாயோடு விளையாடு!!" என்ற தந்தையின் வார்த்தைகளை காதில் வாங்கிக் கொள்ளாமலே, ஏதோவொரு பாடலை முணுமுணுத்தபடி குளிக்கத் தயாரானாள் நிலா! அடுத்த சந்திப்பு எப்போது என்னவனே நட்சத்திரா?? அவள் மனசு வினாத்தொடுத்தது.

(வலிகள் தொடரும்...)

---

# சீத்துவக் கேடுகள்



அலெக்ஸ் பரந்தாமன் புதுக்குடியிருப்பு.

**மகனின்** போக்குக் குறித்து தாய் விசாலாட்சி கடுமையாக யோசிக்கத் தொடங்கினாள். மருமகள் இறந்து இன்னமும் ஒரு வருடம் பூர்த்தியாகவில்லை. அதற்கிடையில் அவன் வழி தவறிப்போவதாக... ஊரிலே பலவிதமான கதைகள் உலாவி வருவதை அவள் அறிந்தபோது... அவளது மனம் பதகளிப்பில் தொடங்கியது.

'இவ்வளவு காலமும் கௌரவமாகச் சீவிச்சுப் போட்டு, இனி இந்தப் பொடியனால சீத்துவப்பட வேண்டிவரப்போகுதே... கடவுளே உதுக்கு நான் என்னசெய்ய...?

மகனைப் பற்றி ஊரில் உள்ளவர்கள் வந்து பலவிதமாக முறைப்பாடுகள் சொல்லும்போது, விசாலாட்சியின் மனம் அந்தரித்துக் கொள்ளும்.

கிளைகளாய் பரவி நின்ற குடும்பம்... கடந்த கால அனர்த்தங்களுள் ஆங்காங்கே ஒவ்வொன்றாய் அழிந்துபோக, எஞ்சிப் போனவை அவனும் தாயும், அவனது இரு சிறுகுழந்தைகளும்தான்.

குடும்பத்தில் ஏற்பட்ட துயரமான இழப்பின் உணர்வுகள், இப்போது அவனிடத்தில் இல்லாதது குறித்து, தாய் விசாலாட்சி தனக்குள் மிகவும் கவலைப்பட்டுக் கொள்வாள்.

மருமகள் இருந்திருந்தால் இவன் பாவி இப்படி மனம்போன போக்கில நடப்பானா...? அல்லது மருமகளும் தான் விட்டிட்டு இருப்பாளா? என்ன அருமையான பிள்ளை அவள். வாழக்கொடுத்து வைக்கேல்ல..

விசாலாட்சியின் விழிகள் பனிக்கத் தொடங்கின.

விசாலாட்சி..விசாலாட்சி.. கூப்பிட்டுக் கொண்டே தெருப் படலையைத் திறந்தபடி... உள்ளே வந்து கொண்டிருந்தார் பக்கத்தில் இரண்டு வீடுகளுக்கப்பால் வசிக்கும் இளையதம்பி.

அண்ணை வாங்கோ. இதில இருக்கோ..

விசாலாட்சி அவரை வரவேற்று அவர்முன் கதிரை ஒன்றை வைத்தாள்.

எங்கை பொடியன்ர சிலமனைக் காணேல்ல..? அவர் கேட்டார். வந்தது வரக்கு முன்னம் தன் மகனைப் பற்றி விசாரிப்பதைக் கண்டதும், விசாலாட்சிக்கு, ஏதோ விபரீதமான காரியம் நடந்திட்டுதோ... என தனக்குள் அச்சப்பட்டுக் கொண்டாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாதவளாக, அவரைத் திருப்பிக் கேட்டாள்.

ஏன் அண்ணை..? என்ன பிரச்சினை...?

பிரச்சினையெண்டும் ஒண்டுமில்லை. உங்கை ஊருக்குள்ளை பொடியனைப் பற்றி பலவிதமாகக் கதையடிபடுகுது. நீயும் கேள்விப் பட்டிருப்பாய் அதுதான். இதுக்கொரு முடிவு செய்யலாம் எண்டு உன்னட்டை வந்தன்.

இளையதம்பி கூறிவிட்டுச் சிரித்துக் கொள்ள, விசாலாட்சி அவரை சந்தேகத்துடன் உற்று நோக்கினாள்.

என்னண்ணை சொல்லுறியள்? எனக்கு ஒண்டும் விளங்குதில்லை.. அவர் மீண்டும் சிரித்துவிட்டு, விடயத்தை விரிக்கத் தொடங்கினார்.

பொடியன் கலியாணம் முடிச்சு, அவனுக்கு ரண்டு பிள்ளையள் இருந்தாலும், இப்ப என்ன வயசு போட்டுதே? வாழ்க்கையைச் சரிவர அனுபவிக்கேல்லை. அதை அனுபவிக்க வேணும்... எண்ட எண்ணம் மேலோங்க குழப்படியள் செய்யத்தானே பார்க்கும். அதால, அவனுக்கு இன்னொரு கலியாணத்தை செய்து வைச்சிட்டால் போச்சுது..

விசாலாட்சிக்கு அதிர்ச்சியாக இருந்தது அவர் கூறிய விடயம். அவனுக்கு இன்னொரு கலியாணமா..? மருமகள் இறந்து இன்னும் ஒருவருடம் கூடப் பூர்த்தியாகேல்லை. அதற்கிடையில்...

விசாலாட்சியால் அதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. மருமகளின் முகம் அவளுக்கு நினைவுக்கு வந்தபோது.. அவளால் அழுகையை அடக்கமுடியவில்லை.

அவள் அழுவதைக் கண்டதும் இளையதம்பியின் மனம் சங்கடப்பட்டுக் கொண்டது. இருந்தபோதிலும், அந்தக் குடும்பத்தின் நன்மை கருதி அவர் தன் மனதில் எழுந்த கருத்துக்களைக் கூறத் தொடங்கினார்.

இஞ்சை பார் விசாலம்.. நான் உன்ர மனசை நோகடிக்க வேணுமெண்டு இதைச் சொல்லவும் வரேல்லை. செய்யவும் வரேல்லை. பொடியன்ர போக்குக் குறித்து ஊர்ச்சனம் பலதும் பத்தும் மாகக் கதைக்குது, பொடியன் இப்ப அந்தரப்பட்டுத் திரியுறதைப் பார்த்தால், ஏதாவது ஏடாகூடமாகச் செய்துவிடுவான் போலக் கிடக்குது. அதுக்கு முன்னம் நாங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுறது நல்லதுதானே.

விசாலாட்சி எதுவும் கூறவில்லை. சேலைத் தலைப்பால் வாயைப் பொத்தியபடி.. நிலை வாசல் அருகோரம் அமர்ந்திருந்தவாறு அழுதுகொண்டிருந்தாள். அவளுக்கு கடந்த கால அனர்த்தங்களில் இறந்துபோன உறவுகளின் முகங்கள் நினைவில் தெரிய ஆரம்பித்தன. அவர்கள் இன்றிருந்தால்...?

அவனுக்கு மனக்கட்டுப்பாடு எண்டது கொஞ்சம்கூட இல்லை. முன்னமும் உப்பிடியான பிரச்சினையளைப் பார்த்திட்டுத்தான் ஒரு கால் கட்டுப்போட்டு வைச்சால் நல்லதெண்டு கட்டி வைச்சம். கட்டி வைச்சாப் போல அடங்கிக் கிடந்தவன், இப்ப மருமகள் இல்லையெண்டவுடன் அவன், தான்தோற்றித்தனமாக நடக்க வெளிக்கிட்டிட்டான். உதுக்கு நான் என்னசெய்ய...? கூறிவிட்டு விசாலாட்சி திரும்பவும் அழத்தொடங்கினாள். சேலைத் தலைப்பால் தன் வாயைப் பொத்தியபடி...

எனக்கிப்ப இதில உடன்பாடில்லை அண்ணை..

அழுகையினூடாக வார்த்தைகளை உதிர்த்தாள் விசாலாட்சி. இளையதம்பி எதுவும் கூறவில்லை. மௌனமாக இருந்தார்.

பொடியனுக்கு இப்ப அவசரப்பட்டு செய்துவைச்சால், மருமேளின்ர வீட்டுக்காரர் வித்தியாசமா நினைச்சிடுவினம். தன்ர பிள்ளை எப்ப சாவாள்? அதுக்குப் பிறகு வேறையொரு இடத்தில சீதனம் வேண்டிச் செய்து வைக்கலாம் எண்டு இருந்தவையாக்கு மெண்டல்லலோ கதைக்க வெளிக்கிடுவினம்.

இளையதம்பிக்கு விசாலாட்சியின் மனநிலை புரிந்தது. அவள் பல கோணங்களில் சிந்திப்பது மட்டுமல்ல, பயப்படவும் செய்கிறாள் என்பதும் அவருக்கு விளங்கியது. அவர் அவளைப் பரிதாபமாகப் பார்த்தார். அவள் பக்கத்தில் அவளோடு ஒட்டியபடி, தங்கள் இருவரின் பேச்சின் உள்ளார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத வயதினராய் இருக்கும் அவளது பேரப்பிள்ளைகள்... தாயன்பின் ஸ்பரிசத்தை முழுமையாக அனுபவிக்காத துர்ப்பாக்கிய சாலிகளாக... ஐந்து அகவைக்குட்பட்ட அந்த இரண்டு சிறுசுகளையும் பார்க்க இளையகுட்டிக்கு கவலை அதிகரித்தது.

சரி.. விசாலம்.. நான் உன்னைக் கஷ்டப்படுத்தவோ, மனசை நோகடிக்கவோ விரும்பேல்லை. உனக்கு மனசில சரியெண்டு எப்ப தோன்றுதோ அப்பசொல்லு. நான் எல்லாத்தையும் ஒழுங்கு படுத்தித்தாறன். இளையகுட்டி கூறிவிட்டு அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். அவர் போய் இரண்டு மணித்தியாலங்கள் கழிந்தநிலையில், விசாலாட்சியின் வீட்டை நோக்கி திரும்பவும் போய்க்கொண்டிருந்தார். அவருடைய நடையில் வேகமும், மனதில் ஒரு வித பதற்றமும் தென்பட்டது.

விசாலாட்சியின் தெருவோரப் படலை திறந்து கிடந்தது. வீட்டு முற்றத்தில் கதிரையில் அமர்ந்திருந்தவாறு, தனது மகனின் பிள்ளைகள் இரண்டிற்கும் சோறு ஊட்டிக்கொண்டிருந்த விசாலாட்சி, அரக்கப் பரக்க தெருவோரப் படலையை நன்றாகத் தள்ளிவிட்டு உள்நுழைந்த இளையகுட்டியின் முகத்தைப் பார்த்ததும் பயந்து போனாள்.

ஏனண்ணை இப்படிப் பதற்றமா வந்து நிற்கிறியள்..? அவளது குரலில் கலவரம் தெரிந்தது.

எல்லாம் கையை மீறிப் போயிட்டுது விசாலம்... கரகரத்துக் கொண்டது அவரின் குரல்.

என்னண்ணை சொல்லிறியள்..? அவள் பதற்றத்துடன் கேட்டாள்.

உன்ர பொடியன் அங்கால ஆலடிப் பக்கம் ஆரோ ஒரு மூண்டு பிள்ளையளின்ர தாய்க்காரியை கூட்டிக் கொண்டு ஓடியிட்டானாம். ஆலடிப் பக்கம் ஒரே குழப்பமாக்கிடக்குது.

அவர் கூறியதைக் கேட்டு விசாலாட்சி கத்திக்குளற ஆரம்பித்தாள். விபரம் புரியாத அவளது பேரப்பிள்ளைகளும் அழத்தொடங்கின அவளோடு சேர்ந்து. ✸




தருவது கே.வி.குணசேகரம்

# மனைவி அமைவதெல்லாம்...



ஒரு ஆணின் வலது கையில் சுண்டு விரலுக்குக் கீழேயுள்ள பகுதி புதன்மேடு. இந்தப் புதன் மேட்டின் ஓரப்பகுதியில் இருதய ரேகைக்கு மேலே ஐக்கிய மேட்டிலிருந்து குறுக்கே சூரியமேட்டை நோக்கி உள்ள ரேகை - யே களத்திர ரேகை. அதன் போக்குத்தான் அவனது மனைவி யின் குணாதிசயங்களைத் தீர்மானிக்கும். ஒருவரின் களத்திர மேட்டில் இருதய ரேகையைத் தொட்டு மேல் நோக்கி சுண்டுவிரலின் கீழ் அங்கு வாஸ்தியின் அடியைத் தொட்டால் திருமணம் நடக்கும். களத்திரமேட்டில் சிறிய பல ரேகைகள் இருந்தால் அவருக்கு வாழ்வில் பல துன்பங்கள் உண்டாகும் என்று மேலே உள்ள பாடல் கூறு கின்றது.

அப்பாடல் தாரரேகை பற்றி மிகவும் விரிவாகவும் இலக்கிய நயத்துடனும் கூறுகின்றது. இதில் பத்துப் பாடல்கள் உள்ளன. மிகவும் சிறந்த தாரம் எப்படி அமையும், பொருத்தமற்ற தாரம் எப்படி அமையும், விவாகரத்தை அடக்கிய ரேகை எப்படிக் குறிக்கும், அடங்காத மனைவி யைப் பெறுவது, திருமணமாகாமல் இருப்பது, மனைவி மரணமடைவது, தாம்பத்தியத்தில் இன்பமின்மை, சண்டை சச்சரவு பற்றியெல்லாம் களத்தி ரேகை குறிப்ப தாகப் பாடலின் ஆசிரியர் கூறு கின்றார். 2000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட சில பாடல்களை எழுதியவர் யார் என்று தெரிய வில்லை. இருப்பினும் பாடல்கள் யாவும் இலக்கியச் சுவை மிகுந் தவையாகக் காணப்படுகின்றன. அப்பாடல்களைப் படிக்கச் சுவைக்க முடிந்ததே தவிர அதன் பலனை அறியமுடியவில்லை. ஏனென்றால் இப்படியானவர்களின் கைரேகையைப் பார்க்க முடியவில்லை. திருமணமாகி மனைவியிடம் விலக்குப்பெற்று எண் பது வயதுவரை வாழ்ந்த ஒரு முதிய வரின் கைரேகையைத் தற்செயலாகப் பார்த்தபோது அவரின் கையில் உள்ள களத்தி ரேகை பாடலில் உள்ளதை ஒத்திருந்தது. அப்பாடல் இது.

**"தொன்னித்திடும் முரசு போன்ற சுக்கிர மேட்டில் கப்பு**
**அனைத்திடு ரேகை தாண்டி ஐக்கிய ரேகை தொட்டால்**
**வினைத்திடும் அழுத்தம் பெற்ற விதித்தடை காலம் தன்னில்**
**மனத்திடை வெறுப்புத் தோன்றி மனைவியை விலக்கும் தானே."**

பாடலில் உள்ள கருத்துக்கள் சரியானவையா, இல்லை பிழையான வையா என்று சோதிடர்கள்தான் ஆராய்ந்து பதில் கூறவேண்டும்.

ஆனால் மனைவி அமைவது பற்றி இலக்கியநயத்துடன் பாடப் பட்ட பாடல்கள் சிறப்பானவை. களத்தி ரேகையை ஐக்கிய ரேகை யென்றும் கூறுவர். இவை ஐக்கிய ரேகையின் அமைப்புக்கேற்றபடி தான் வாழ்வு அமைகிறதென்று இப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். பத்துப் பாடல்களும் இலக்கியச் சுவையுள்ளதோடு மனைவி அமை வதைப் பற்றிச் சிறப்பாகக் கூறு கின்றன. ஐக்கிய ரேகை சுண்டு விரலின் அடியில் உள்ள புதன் மேட்டின் சரிவில் தோன்றும். குடும்பத்தின் மகிழ்ச்சி, வருமானம், நற்புத்திப்பேறு, புகழ் போன்றவற்றை இது குறிக்கும். ஐக்கிய ரேகை அழுத்தமாக இராது. குட்டை யானதாகவும் மெல்லியதாகவும் கிளைகள் கொண்டதாகவும் இருந்தால் கணவன், மனைவி யிடையே பிரச்சினைகள் அடிக் கடி தோன்றும். நிம்மதியிராது. ஐக்கிய ரேகை, இருதய ரேகையை நோக்கி வளைந்திருந்தால் மனைவி தீராத நோயாளியா வாள். ஐக்கிய ரேகை இதய ரேகையைத் தொட்டால் மனை வியை இழக்கநேரிடும்.

ஐக்கிய ரேகையில் கறுப்புப் புள்ளியிருந்தால் மனைவி வெறுத்து ஒதுக்குவாள். ஐக்கிய ரேகை யில் சூலம், தீவுக்குறி காணப் பட்டால் கணவனும் மனைவியும் ஒருபோதும் ஒற்றுமையாக வாழ மாட்டார்கள். இவ்வாறு பாடல் கள் சொல்கின்றன. ஒவ்வொரு பாடலும் செய்யுள்களுக்குரிய பண்புகள் அனைத்தும் கொண்டன வாக உண்டாகும். இன்பதுன்பங் களை விரிவாகக் கூறுகின்றன.

பண்டைய நூல்கள் யாவும் செய்யுள்களில் இயற்றப்படுவதால் அவை செய்யுள்களுக்குரிய பண்புகள் விலகாது இருப்பதோடு படிப்பவர்களக்கு இனிமையான சுவையையும், நல்ல கருத்துக் களாகவும் கூறுகின்றன. இச் செய்யுளை இயற்றியவர் யாரென்று தெரியாவிட்டாலும் படிப்பவர்கள் நிச்சயமாகப் பயனடைவார்கள் என்பது உறுதி.

## கருத்துக் களம்

அரசியல் சுயலாபங்களுக்காக ஐ.நா இலங்கையை விட்டு வெளியேறியமை மாபெரும் தவறாகும். இலங்கை அரசு சொன்னது, நாங்கள் சென்றோம் என்று கூறுவது எவ்வளவு பெரிய முட்டாள் தன மாகும். அப்படியானால் மீண்டும் ஐ.நாவுக்கு இலங்கை விடயம் சம்பந்தமாக தலையிடுவதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்றுகூடக் கேட் கலாம் அல்லவா?

இதிலிருந்து இன்னொரு விடயமும் புலப்படுகி றது. தமிழ் மக்களை அழிக்கும்நோக்குடன் ஐ.நா. வும் தந்திரோபாயமாக செயற்பட்டிருக்கின்றது. இதனால் ஐ.நா ஈட்டிய இலாபமோ, நஷ்டமோ என்னதான் இருக்கின்றது. மேலும் பிரச்சினை களுக்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளதே தவிர எதுவும் இல்லாமல் போனதாகத் தெரியவில்லை. மக்கள் உயிர்கள் என்பது விலை மதிக்க முடியா தது. அந்தவகையில் அழிக்கப்பட்ட உயிர்களின் ஆத்மா சாந்திக்காக நிகழ்வுகள் செய்வதில் என்ன தப்பு இருக்கின்றது.

உணர்வுகளை மதிக்கத் தெரிந்தவன்தான் மனிதன். இதைவிடுத்து மீண்டும் மீண்டும் இன இன உணர்வுகளை தூண்டிவிடும் செயற்பாடு களைப் பார்க்கின்ற போது ஒரு நபரின் தலை யீடோ, நாடுகளின் தலையீடோ தேவையில்லை. ஒருவரையொருவர் புரிந்து கொண்டாலே இனம், மதம், மொழி பேதம் இல்லாமல் நாட்டில் சுபீட்ச மாக வாழமுடியும்.

ச.ஆர்த்தி,
லண்டன்.

கருத்துக்களம்,
தினமுரசு, வாரமலர்,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.




## சிந்தியா பதில்

**◉ யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகள் பற்றி சிந்தியாவின் அபிப்பிராயம்?**

ம.பரணி, தெஹிவளை.

*கடந்த கால படிப்பினைகளில் இருந்து நிகழ்காலத்திற்கு எவ்வாறு முகங் கொடுப்பது என்பதை தேவைக்கேற்ற வித்தியாசங்களின் ஊடாக அணுக வில்லை என்பது கவலைக்குரிய விஷயம்.*

*அதுதவிர, மாணவர்கள் உணர்ச்சி வசப்படுவதும் தாக்கப்படுவதும், அரசியல் இலாபங்களாகப் பார்க்கப்படுகின்றது. அல்லது எதிர்ப்பிரச்சாரமாக எடுக்கக் கூடியவர்களின் பின்னணியில் இருப்பவர்கள் விரும்புகின்றார்கள்.*

*இவ்விரண்டு நிலைப்பாடுகளும் மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிப்பது போலவும், அமைந்தால் அதன்விளைவும் கடந்த கால கசப்புகளைப் போலவே அறுவடை செய்யவேண்டி இருக்கும்.*

*ஆகவே வெறும் வீரம் பேசாமல் விவேகத்தோடும் சிந்திக்கவேண்டும்.*

*ஜே.வி.பி.க்கும் புலிகளுக்கும் வேறுபாடுகள் உண்டு என்றே புரிந்துகொள்வது அவசியம்.*

**◉சிந்தியா!பாலஸ்தீனத்தை ஐ.நா தனி நாடாகப் பிரகடனம் செய்துள்ளதே?**

க.சங்கவி, வவுனியா.

*1948 இல் நாம் சுதந்திரம் அடைந்தோம் என்று நீங்கள் முழுமை யாக நம்புகின்றீர்களா? பாலஸ்தீனத்தின் இந்த வெற்றியின் அடியே இன்னும் நெருப்பு கனன்றுகொண்டிருக்கிறது.*

*அது இறைதூதர்களின் பாதம் தாங்கிய புனித பூமி மட்டுமல்ல. குருதி சிந்தும் வரம் வாங்கிய இரத்தபூமி என்பதை மகிழ்ச்சியால் மறந்துவிட முடியாது.*

**◉ சிந்தியா! பிரபாகரன் கொல்லப் பட்டமை விஞ்ஞானம் நிரூபிக்கவில்லை என ஸ்ரீதரன் எம்.பி தெரிவித்துள்ளாரே?**

ஏ.பானுப்பிரியா, மாத்தளை.

*விஞ்ஞானம் நிரூபிக்க வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன. அவரின் பிறப்பைக்கூட உரியவகையில் விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கவில்லையே.*

*இலட்சக்கணக்கானவர்களை விடுதலையின் பெயரால் பலியெடுத்தும், பலிகொடுத்தும் அழிந்துபோன தமிழினத்தின் பிரதிநிதிகள் என்போர் விஞ்ஞானரீதியாக தம்மை சுயவிமர்சனம் செய்துகொள்ளவும், தாம் இழைத்த துரோகத்திற்காக நியாயமான பரிகாரங்கள் செய்யவும் விஞ்ஞான ரீதியாக சிந்திக்க வில்லையே; இப்படியெல்லாம் விஞ்ஞானரீதியாக நாமும் கேட்கலாமல்லவா?*

**◉சிந்தியா! ஐ.தே.கட்சியின் எதிர் காலம் மீண்டும் ரணிலின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாமே?**

எம்.என்.கலில், தர்ஹாநகர்.

*இன்னும் ஆறு வருடங்களுக்கு அவரே தலைவர் என்பதில் அவரின் கட்சியைவிடவும் ஆளும்கட்சிக்கு அதிகம் மகிழ்ச்சி.*

*சஜித் பிரேமதாச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தால் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருக்க முடியும். மீண்டும் ரணில் விக்கிரம சிங்கவை தலைவர் என்பதால் மாற்றங் களையோ, புதுமைகளையோ எதிர்பார்க்க முடியாது.*

**◉சிந்தியா! நாட்டில் பணிப்புறக் கணிப்பு நாளாந்த நிகழ்வாக மாறி விட்டதே?**

எம்.ஜெயக்குமார், யாழ்ப்பாணம்.

*ஆரோக்கியமானவை அல்ல. இவ்வாறான பிரச்சினைகளை அரசு புறக்கணிக்காமல் நியாயமான தீர்வுகளைக் காண முயற்சிக்க வேண்டும்.*

**◉சிந்தியா! விஞ்ஞானிகளும் கடவுளை நம்புகிறார்களே?**

என்.சாரங்கன், மாத்தளை.

*எல்லோருக்கும் நம்பிக்கையே முதற்கடவுள். விஞ்ஞானிகளும் நம்புகிறார்கள் என்பதால் சாதிக்க முடியும் என்று நம்புகிறார்கள்.*

*அந்த நம்பிக்கை வெல்லப்படும் போது தமக்கும் மேலான ஆக்கசக்தி ஒன்று இருப்பதையும் நம்புகிறார்கள்.*

*அதற்கு எவ்வாறு வடிவம் கொடுப்பது என்பது அவரவர் விருப்பம்.*

**◉சிந்தியா! பெண்களிடம் இரகசியம் சொல்லக்கூடாது என்கிறார்களே. ஆண்களிடம் சொல்லலாமா?**

எம்.நிதர்சன், திருகோணமலை.

*இரகசியம் என்றால் அதை யாரிட மும் சொல்லக்கூடாதே. ஆண்களை விடவும் பெண்கள் இரகசியம் காப்பதில் கொஞ்சம் அப்படி - இப்படித்தான் என்கிறார்கள்.*

**◉சிந்தியா! உங்களுக்குப் பிடித்த நடிகர் யார்?**

ம.ரம்யா, கொக்குவில்.

*சிவாஜியே. சிவாஜிக்குப் பிறகு அந்தத் தேடல் இன்னும் தொடர்கின்றது.*

**◉சிந்தியா! வெற்றிக்கு மூலதனம் அதிர்ஷ்டமா? முயற்சியா?**

வ.தவராசா, அச்சுவேலி.

*வென்றவர்களின் கூற்றுப்படி முயற்சி 90 வீதம், அதிர்ஷ்டம் 10 வீதம் என்கிறார்கள்.*

**◉சிந்தியா! இம்முறை அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கு விரல் அடை யாளம் பெற்றுக்கொண்ட பின்னரே விஷா வழங்கப்பட்டுள்ளதாமே?**

எஸ்.பிரணவன், அல்லைப்பிட்டி.

*கப்பலோட்டிய இலங்கையர்கள் செய்த புண்ணியம் இது.*

*கள்ளத்தோணிகளாக அவுஸ்திரேலி யாவுக்குள் கொத்துக் கொத்தாக நுழைந்து கொண்டிருக்கிறார்கள் . அதனால்தான் தேசிய வீரர்களும் அவமதிக்கப் படுகிறார்கள்.*

*பார்த்தீர்களா! நாங்கள் ஒவ்வொருவரும் சுயநலன்களுக்காகச் செய்கின்ற வேலை கள் நாம் சார்ந்த நாட்டை எந்தளவுக்கு அவமானப்படுத்துகின்றது என்று.*

**◉சிந்தியா! தற்போதைய இந்தியக் கிரிக்கெட் வீரர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?**

ஆ.சைந்தனா, கொழும்பு - 13.

*கடந்த ஒருவருடமாக இந்திய அணியில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர் நம்மவர் அஸ்வின்.*

*ஸ்ரீகாந்திற்குப் பிறகு இந்திய அணியில் தமிழர்கள் எவரும் பெரிதாகச் சாதிக்க வில்லை. அந்த ஏமாற்றத்தை அஸ்வின் நிறைவேற்றிக் கொண்டிருப்பது மகிழ்ச்சி யான செய்தியே.*

*சுழற்பந்து வீச்சாளரான இவர் துடுப் பாட்டத்திலும் சோடை போனவர் அல்லர். ஏழாவது துடுப்பாட்ட வீரராக வந்து இந்திய அணியின் மூச்சை தேவையான சந்தர்ப்பங்களில் இழுத்துப் பிடிக்கிறார்.*

*முதியவர்களுக்கு ஓய்வழித்துவிட்டு திறமை மிகுதியில் இள இரத்தங்கள் உள்வாங்கப்படுமானால் உங்களை மகிழ்விப்பதற்கு தயார் நிலையில் இருந்து கொண்டிருக்கிறார் இன்னொரு தமிழக வீரர் முரளி விஜய்.*

## ( 06 ஆம் பக்கத் தொடர்ச்சி ) தாளம் பற்றைக்குள்...

அந்தவகையில் நமது சமூகத்துக்கு பாரிய பொறுப்பு இருக்கின்றது என்றே கூற வேண்டும் காதலிப்பது தவறில்லை. அன்பின் பிணைப்பில் எதிர்பால் உணர்வுகளை ஒருங்கே சங்கமிக்கச்செய்து எதிர்மறைகள் அனைத்தையுமே கட்டிப்போட்டு இலட்சியத்தோடு நடக்கத்தூண்டும் ஆழத்தோடான புனிதமான உறவு காதல் காதல் தவறு என்பது எங்கினும் குறிப்பிடப்படவில்லை. அது தவறு என்று சொல்வதற்கும் இல்லை.

ஒவ்வொரு இளைஞனுக்கும் இலட்சியம் உண்டு. அந்த இலட்சியத்துக்காக பாடுபடுபவர்கள் பலர் இருக்கிறார்கள். இளைஞர்களுக்கிடையில் உருவாகும் காதல் அவர்களுடைய உயர்ந்த இலட்சியத்தை பாதிக்குமாக இருந்தால் அல்லது அந்த இலட்சியத்துக்கு முழுத்தடையாக இருக்குமென்றால் அதனால் ஏற்படும் பின்விளைவுகளை இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காதல் செய்யும்போது தம்மை காவியங்களின் கதாநாயகனாகவும் கதாநாயகியாகவும் நினைத்து யதார்த்தத்தை மறந்து களிக்கும் காதலர்கள் எத்தனை பேர் தமது இலட்சியம் பற்றிச் சிந்திக்கிறார்கள்?

ஓடும் இயந்திரங்களுடன் ஓடி அலைந்து தானும் இயந்திரமாகவே மாறிக் களைத்து வருகிறான் மனிதன். விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் விந்தைகள் செய்துகொண்டிருக்கிறது விஞ்ஞானம். அவசரமாக நகரும் உலகத்தில் இந்த விடயங்களையெல்லாம் பார்க்கவேண்டுமா? இதனால் நமக்கென்ன இலாபம்? என நினைத்து அநியாயங்களைக் கண்டும் காணாமல் செல்வோரும் இது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

திறந்தவெளியில் கட்டியணைத்து முத்தமிட்டுக்கொள்வதுதான் உண்மையான காதல் என தாழை மரங்களுக்கிடையில் காதலிக்கும் சிலர் நினைத்துச் செயற்படுகிறார்கள். சிறுபிள்ளைகளை கடற்கரைக்கு விளையாடுவதற்காக அழைத்துவரும் குடும்பத்தார் குறித்தும் வளரும் பராயத்தினர் குறித்தும் இவர்கள் சற்றேனும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

கரையோரமாக அமைந்துள்ள பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திலிருந்து வெள்ளவத்தை வரை நாம் நடந்து சென்றோம்.

அங்கு நாம் கண்ட விடயங்களை படங்களாக பிரசுரிக்க முடியாது. கடற்கரைக்கு யார் வருகிறார்கள், போகிறார்கள் என்றெல்லாம் சிலருக்குக் கவலையே இல்லை. தமது சில்மிஷங்களில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

உண்மையில் வெள்ளவத்தை கடற்கரை இவ்வாறான நடத்தைகளுக்கு துணைபோவதற்கு பாதுகாப்புத் தரப்பினரையும் குறை சொல்கிறார்கள் வர்த்தகர்கள் சிலர்.

எது எவ்வாறெனினும் பொது இடங்களில் அநாகரிகமான முறையில் நடந்துகொள்வது தவிர்க்கப்பட வேண்டும் பாதுகாப்புத் தரப்பினரை மாத்திரம் குற்றம் சொல்லிக் காலம் கடத்தாமல் சமூக அக்கறையுடன் அனைவரும் இணைந்தே இவ்வாறான குற்றச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்

## ( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி ) அரசியல் சதுரங்கத்தில்...

எனவே, இனப்பிரச்சினைத் தீரக்கப் படாததால் தலைதூக்கிய உப பிரச்சினைகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்திலும் பார்க்கக் கூடுதலான முக்கியத்துவத்தை இனப்பிரச்சினைக்குக் கொடுக்க வேண்டும்.

ஆனால், தலைவர்கள் அவ்வாறு கொடுக்கத் தயங்குகிறார்கள். இனப்பிரச்சினை எப்போதும் இருக்கவேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

சுயநல நோக்கம் கொண்ட தலைவர்களால் உசுப்பி விடப்படும்போது மாணவர்களும் ஏனைய இளைஞர்களும் கொஞ்சம் நிதானமாகச் சிந்திக்கவேண்டும். தலைவர்கள் காட்டும் பாதை இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சாதகமானதா அல்லது பாதகமானதா என்று சிந்திக்கவேண்டும். தலைவர்கள் காட்டும் இலக்கு நடைமுறைச் சாத்தியமானதா இல்லையா என்று சிந்திக்கவேண்டும்.

அடைய முடியாத இலக்குப் பற்றிய நம்பிக்கையை இளைஞர்களிடம் வளர்த்து அவர்களைத் தலைவர்கள் பிழையான பாதையிலே வழிநடத்தியதன் சோக முடிவை முள்ளிவாய்க்காலில் பார்த்தோம். அப்படியான நிலை இன்றைய மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஏற்படக்கூடாது. இனப்பிரச்சினையின் தீர்விலேயே இவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே இன்றைய மாணவர்களும் இளைஞர்களும் நடைமுறைச்சாத்தியமான வழியில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டை ஊக்குவிக்கவேண்டும்.


ஸ்ரீ ராமஜெயம்



**நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்**

சித்தக் கோளாறு, தோல் வியாதி, ரோக பயம், ஸ்திரி சாபம், செய்வினை தோஷங்கள், திருமணத்தடை, மாங்கல்ய தோஷம் உடையவர்கள், புத்திரதோஷம் உடையவர்கள், வீண் நஷ்டம் - கஷ்டம் வாழ்வா சாவா என்று சிந்திப்பவர்களுக்கு நஞ்சருந்தாமல் பிரச்சினைதீர, முறிந்த காதல் ஒன்றுசேர, கணவன் - மனைவி பிணக்குத் தீர, காதல் கைகூட, சர்வ கஷ்ட நஷ்ட துன்பங்களை விலக்கி சுகமாக வாழ, ஓடிப்போனவர்கள் தேடிவர, பெற்றோர் விருப்பம் இல்லாத திருமணம் விரும்பி நடக்க, நெஞ்சுவலி, நெஞ்சு எரிவு, மார்புவலி, உடல் பீடை நீக்கி ஐஸ்வரியம் கிட்ட, திருமணத்தடை தரித்திரியம், கல்வி சித்தம் கிடைக்க, காதலர்கள் நினைத்ததை சாதிக்க, ராகு திசை, ராகு புத்தி, கேது திசை கேது புத்தியால் ஏற்படும் சகல தோஷங்களை நீக்கி சர்பாதி தோஷம், பூர்வ ஜென்ம சாபங்களை நீக்கி, துர்சொப்பனம், செய்வினை தோஷம் நீக்கி, குலதெய்வ அருள்கிட்ட, மேலதிகாரிகளின் தொல்லை நீங்க, வெளிநாட்டு பிரயாணத் தடை நீங்க, ஆண் - பெண் உடலுறவு வீரிய குறைவுகள் தீர, சனிபுத்தி சனித்திசை தோஷம் நீங்க, ஆயுள் ஆரோக்கியம் பெற்று தனவஸ்து கிட்ட இவைகளில் இருந்து சித்தி கிட்ட, என்னைச் சந்திக்கலாம். வெளிநாட்டவருக்கு 24 மணித்தியால சேவையுண்டு.

அருள்ஞான சித்தர், துர்க்கைதாசன், தேசபந்து, பேராசிரியர், கலாநிதி,
திரு. P.K.சாமி, ( J.D.G.A.N) J.P ஐயா SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. **No.23, MAYFILD ROAD, KOTAHENA, COLOMBO -13.**
நுவரெலியா கிளை :- **No.33, daily Fair Complex. 052 - 2222508**
தொலைபேசி இலக்கம்: - 011 - 2470615, 011 - 2342463, 011 - 2342464
**FAX :- 011 - 2344831** **E -MAIL**:- drpksamy@sltnet.lk


## ( 04 ஆம் பக்கத் தொடர்ச்சி ) கொம்பு சீவும்...

அறிவுரீதியாகச் சிந்தித்து யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ளாமல் உணர்ச்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவது எந்தளவு தமக்கும், தாம்சார்ந்த சமூகத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தற்போது பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழல் தமிழர் பகுதிகளில் எங்கும் வியாபித்து மீண்டும் தமிழ்மக்களை கெடுபிடிக்குள் தள்ளவேண்டும் என்பதே புலம் பெயர் சக்திகளின் ஒரு பகுதியினரதும் தமிழ் மக்களின் அவலங்களை மூலனமாக்கும் அரசியல் சக்திகளினதும் உள் விருப்பமாக இருக்கின்றது. அவ்வாறானசக்திகளின் பல்கலைக்கழகசமூகத்தின் உணர்வுகளைப்பயன்படுத்த முயற்சிக்கின்றது.

இவ்வாறானவர்களின் சுயநலன்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்ல. முழுப் பல்கலைக்கழக சமூகமும் உடந்தையாக இருந்துவிடக் கூடாது என்பதே அப்பாவி மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இங்கு பல்கலைக்கழக சமூகங்கள் என்று விழித்துக் கூறுவதற்கும் ஒரு காரணம் இருக்கின்றது.

இப்பிரச்சினை எல்லாம் நடைபெற்ற மறுநாள் ஒன்று கூடிய ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியதுடன் அறிக்கை ஒன்றையும் விட்டுள்ளார்கள்.

"மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதைத் தடுப்பதன் மூலம் மனித உரிமை மீறப்படுவதாகும். அதாவது அடுத்த வருடம் மாவீரர் தினத்தை மாணவர்களுடன் சேர்ந்து தாங்களும் அனுஷ்டிக்கப் போகிறார்களாம்.

இதுதொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் ஒருவர், தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினர் தமது தியாகிகள் தினத்தைக் கொண்டாடுகிறார்களாம். அதனால் மாவீரர் தினம் கொண்டாடப்படுவதை தடுக்க முடியாது என்று மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்று தர்க்க ரீதியான கருத்தைத் தேடிக் கண்டுபிடித் திருக்கின்றார்.

அதைத் தொடர்ந்து தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என வேறு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவரை கல்வி நடவடிக்கை நடைபெறாதாம். மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டியது அவசியம்.

ஆனால், ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்ட மாணவர்களை அழைத்து ஆர்ப்பாட்டம் நடாத்தப்போவதால் ஏற்படப்போகும் சாதக பாதகங்களை விளக்கி நிலைமையை சுமூகமாக மாற்ற வேண்டியவர்கள்! மாணவர்கள் மோசமான முறையில் வீதியில் போட்டு புரட்டி எடுக்கப்படும் போது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தவர்கள்! அசம்பாவிதங்களைத் தணித்து மாணவர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் தார்மீக கடமையை செய்யாது இருந்துவிட்டு, மறுநாள் கூட்டம் போட்டு அப்பாவி மாணவர்களுக்குக் கொம்பு சீவிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

அடுத்தவருடம் மாவீரர் தினத்தை கொண்டாட தீர்மானித்திருக்கின்ற பேராசிரியப் பெருந்தகைகள், அதை இந்த வருடமே கொண்டாடியிருக்கிலாமே?! வீதியில் இறங்கி உதை பட்ட மாணவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியிருக்கலாமே?! இந்த வருடம் என்ன அவர்களுக்கு இனஉணர்வு மங்கிப் போய்க் கிடக்கிறதா?

பேராசிரியர்கள் மக்களினால் புத்திஜீவிகள் என்ற உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றப்படுபவர்கள். ஆனால் புத்திஜீவிகள் என்றுசொல்லப்படுகின்ற சிலரின் கருத்துக்களும் செயற்பாடுகளும் கடந்த காலங்களில் தமிழ்மக்கள் கடந்து வந்த அவலங்களுக்கும் கணிசமான பங்களிப்புச் செய்திருக்கின்றது என்ற வகையில் புத்திஜீவிகள் மீது மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை உருவாகியிருக்கின்றது. புத்திஜீவிகள் எனப்படுபவர்கள் கால மாற்றங்களைக் கிரகிக்கத் தெரியாதவர்களா? உலகப் போக்குகளைப் புரிந்துகொள்ளும் பக்குவ மற்றவர்களா? வெறுமனே புத்தகப் பூச்சிகளாக இருந்து புலமை பெற்றவர்களா? என்கின்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. மக்களின் இந்த சந்தேகத்தில் நியாயம் இருப்பது போன்றுதான் பல்கலைக்கழக விடயத்தில் புத்திஜீவிகளின் செயற்பாடுகள் காணப்படுகின்றது.

உணர்ச்சிவசப்பட்டுநின்ற மாணவர்களுக்குத் தற்போதைய நிலவரங்களையும். சூழலின் தன்மையையும் எடுத்துக் கூறி அவர்களை ஆசுவாசப்படுத்தாமல் அவர்கள் உணர்ச்சிகரமாகப் பேசுவதை மௌனமாக இருந்து அனுமதித்துவிட்டு இப்போது அவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் விடுதலை செய்யுமாறு கோரிக்கை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பேசவேண்டியவை பேச வேண்டிய தருணத்தில் பேச வேண்டிய இடத்தில் பேசுவதில்லை. பின்னர் அலறி அடித்து ஒப்பாரி வைத்துக்கொண்டு ஓடித்திரிவது எமது சமூகத்தின் சாபக்கேடு. அதுதான் இப்போது இங்கு[illegible] நடந்திருக்கிறது.

இவ்வாறெல்லாம் கூறுவதால் இறந்தவர்களுக்கு அஞ்[illegible]லி செ[illegible]த்துவது தவறு என்றோ, இராணுவம் அத்துமீறி நுழைந்ததையோ மா[illegible]வர்க[illegible] மீதான தாக்குதலையோ நியாயப்படுத்துவதாகவோ அல்லது கை[illegible] செய்யப்பட்டவர்களின் விடுதலையை எதிர்ப்பதாகவோ யாரும் அர்த்தம் கொ[illegible]டுவிடக்கூடாது.

கடந்த வார முரசின் இப்பகுதியில் கூறப்பட்டது போன்று யுத்தத்தில் இறந்தவர்கள் அனைவரும் மதிக்கப்பட வேண்டியவர்கள். தன்னலம் கருதாத அந்த ஆன்மாக்கள் பூஜிக்கப்பட வேண்டியவை.

ஆனால் மரித்தவர்களுக்காக மானமுடன் வாழ வேண்டியவர்கள் வீதியில் போட்டு புரட்டி எடுக்கப்படும் நிலையை ஏற்படுத்தக் கூடாது என்பதுதான் இந்தக் கட்டுரை ஆசிரியரின் ஆதங்கம். அதுவேதான் மரணித்தவர்களின் விரும்பமாகவும் நிச்சயம் இருக்கும்.

அப்படி ஒரு கௌரவமான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் நாம் அனைவரும் உணர்ச்சிபூர்வமான சிந்தனைகளைப் பின்தள்ளிவிட்டு அறிவுபூர்வமாக எமது பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து சுயநலவாதிகளின் கரங்களில் தீர்மானங்கள் மேற்கொள்ளும் அதிகாரத்தைக்கொடுத்துவிட்டு அவர்களின் எடுப்பார் கைப்பிள்ளையாக வெறும் உணர்ச்சிகளுக்குக் கட்டுண்டு கிடந்து எமது இளம் சந்ததியினருக்குக் கொம்பு சீவிக்கொண்டிருப்போமாயின் தமிழ்மக்களின் கௌரமான வாழ்வும் எதிர்காலமும் சூனியமாகிப் போவதை கடவுளால்கூட தடுத்து நிறுத்தமுடியாது.

# பாலஸ்தீனத்திற்குக் கிடைத்த வெற்றி

பாலஸ்தீனம் இஸ்ரேல் பிரிவினை தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டு ( 29 நவம்பர் 1948) சரியாக அறுபத்தைந்து வருடங்களின் பின்னர் பாலஸ்தீனம் மீதான அங்கத்துவமற்ற அவதானிப்பவர் நாடு என்ற தீர்மானம் நிறைவேறி உள்ளது. பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கு 1974ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர் அங்கஸ்து வழங்கப்பட்டது. அப்போது யசீர அரபாத் பா .வி இயக்க தலைவ ராக இருந்தார். அங்கு அவர், துப்பாக்கியைத் தாங்கி வந்துள்ளேன், நான் மீண்டும் சொல்கிறேன் எனது கையிலிருந்து ஒலிவ் கிளையை விழச்செய்துவிடாதீரகள். இந்த வார்த்தைகளை யசீரின் வாய்க்குள் போட்டவர் பாலஸ்தீன தேசியக் கவிஞன் மஹ்மூத் தர்வீஸ். இன்று இருவரும் உயிருடன் இல்லை, அவர்களின் கனவுநனவாக கால்கோள் இடப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்கும் நாட்களும் வெகு தூரத்திலில்லை. இந்த தீர்மானம் மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் இரு நாட்டுப் பிரிவினைத் திட்டம் ஐக்கிய நாடுகள் சபையில் 29.11.1947இல் மேற்கொள்ளப்பட்ட பொழுது பாலஸ்தீனியர்கள் அதனை எதிர்த்தனர். தங்களின் நாடு பிடுங்கப்பட்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பொழுது மறுத்த அந்த இரு நாட்டு கொள்கையை மீண்டும் 65 வருடங்களின் பின்னர் அரபியர் அங்கீகரித்துள்ளனரா என்ற கேள்வியும் இங்கு எழாமலில்லை.

ஐ.நா அங்கத்துவமற்ற அவதானி அங்கீகாரம் வழங்கப்பட்ட போப்பாண்டவரின் அதிகாரத்திற்குட்பட்ட வத்திக்கான் வரிசையில் அடுத்ததாக பாலஸ்தீனம் சேர்ந்து கொள்கிறது. இந்த ஐ.நா அங்கத்துவம் பெற அவதானி அந்தஸ்த்தின் மூலம் பாலஸ்தீனம் எதுவும் பெறப்போவதில்லை, இவ் அங்கீகாரம் வெறுமனே ஒரு காகிதத் துண்டில் காணப்படும் உரிமையே என்று இஸ்ரேல மட்டுமல்ல பாலஸ்தீன மக்களில் பெரும்பாலானோரும் கருத்துரைக்கின்றனர். ஆனாலும் இந்த பிரகடனத்தில் உள்ள அனுகூலங்களை பெற்றுக் கொள்வது பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஹமாசும் ஏனைய இயக்கங்களும் செயற்படும் விதத்திலும் தங்கியுள்ளது.

இஸ்ரேலின் கிளர்ச்சியைத் தூண்டும் வஞ்சகச் செயற்பாட்டுத் தூண்டில்களில் சிக்கிக்கொள்ளாது காய் நகர்த்தல்களை மேற்கொள்வதில்தான் சுய தேசத்தைக் கட்டியெழுப்பி முழு உறுப்புரிமையை பெரும் தமது நீண்ட நெடும் போராட்டத்தில் வெற்றி பெறமுடியும். ஆனால் ஹமாஸ் தொடர்ந்தும் இஸ்ரேலுக்கெதிரான தனது கொள்கைப் பிரகடனத்தை மாறிக் கொள்ள வேண்டி நேருமா என்ற கேள்விக்கான விடையும் இஸ்ரேலின் எதிர்கால நடவடிக்கைகளிலும் , இவ்விரு நாடுகளின் சர்வதேச இராஜ்ஜிய நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது. பாலஸ்தீனமும் இப்போது ஐக்கிய நாடுகளின் கீழ் இயங்கும் விஷேடத்துவம் பெற்ற சர்வதேச நிறுவனங்களின் மற்றும் பல சர்வதேச நிறுவனங்களின் அங்கத்துவத்துக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு வகையில் சட்டபூர்வமாகவும் அந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது . சென்ற வருடம் பாலஸ்தீன அதிகார சபையை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் (UNESCO) அங்கீகரித்து ஏற்றுக் கொண்ட பொழுது அமெரிக்க காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கான உதவியை நிறுத்திக் கொண்டது. இந்த தீர்மானத்தின் பின்னரும் அமெரிக்கா வாசிங்டனிலுள்ள பாலஸ்தீன அதிகார சபை அலுவலகத்தை மூடி விடுவதென்றும் , பாலஸ்தீனத்துக்கான நிதி உதவிகளை நிறுத்தி விடுவதாகவும் பல எச்சரிக்கைகளை தமது செனட் சபை உறுப்பினர்கள் மூலம் விடுத்துள்ளது. ஆக மொத்தத்தில் அமெரிக்காவினால் பாலஸ்தீன மக்கள் காலங்காலமாக தண்டிக்கப்பட்டு வருகிறார்கள்.

அமெரிக்கா மத்திய கிழக்கின் மீதான தனது ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொள்ள இஸ்ரேலின் அடாவடித்தனத்தை இஸ்ரேலின் தற்காப்பு நடவடிக்கை என்ற கோதாவில் கட்டவிழ்த்துவிட அனுமதித்துள்ளது. இதன்மூலம் இஸ்ரேலின் அடாவடித் தனத்துக்கு வக்காலத்து வாங்குகின்ற ஒரு உபாயத்தையும் , மறுபுறம் சமாதானத்தை அமெரிக்கா தலையிட்டே ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணப்பாட்டையும் தோற்றுவித்து செயற்படுவதுடன், அதற்கு துணையாக பிரித்தானியா போன்ற மேற்குலக நாடுகளினை கொண்டு பல்வேறு அழுத்தங்களை (நிதி உதவி உட்பட) பாலஸ்தீன அதிகார சபைக்கு மட்டுமே பிரயோகிக்கின்ற செயற்பாட்டினை செய்து வருகிறது. அந்தவகையில் பாலஸ்தீனம் இராஜ்ஜிய ரீதியில் தனது அந்தஸ்தை சர்வதேச அவையில் தரமுயர்த்தியிருக் கிறது , அதன் பலாபலன்களை இனிவரும் காலங்களில் காணமுடியும். அதற்கான அரசியல் முதிர்ச்சியும் அனுபவமும் அப்பாஸிடம் நிறையவே இருக்கிறது. மக்களின் செல்வாக்கு மிகு காஸா பிரதேச அதிகாரத்தைக் கொண்டுள்ள ஹமாசும் பாலஸ்தீனத்தில் பல பகுதிகளிலும் மக்களின் நலன்சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்ட அனுபமுடையவர்கள் மக்களின் செல்வாக்கை பெரிதும்பெற்றவர்கள் என்பதால்வரும் காலங்களில் பாலஸ்தீன ஆட்சி அதிகாரக் கொள்கைகளில் எத்தைகய சமரசம் சாத்தியமானது என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனில் அரசியல் கொள்கைகளில் (இரு மக்கள் இரு நாடு ( பீ.எல்.ஓ) ஒரே நாடு , பாலஸ்தீனம், இஸ்ரேல் என்று ஒரு நாடே இல்லை இருக்கவும் கூடாது (ஹமாஸ்) , என்ற நிலைப்பாட்டில் இரு பகுதியினரும் இனிமேல் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேரிடும்.

மொத்தத்தில் இந்த தீர்மானம் எல்லா விதத்திலும் அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் அரசியல் கபடத்தனத்துக்கும் இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனத்துக்கும் எதிராக பாலஸ்தீன அதிகாரத்தின் இராஜ்ஜிய அணுகுமுறைக்கு கிடைத்த பாரிய வெற்றி என்பதனை மறுக்கவும் முடியாது.

# காதிலை பூ கந்தசாமி




வணக்கமுங்கோ!

போனவாரம் அடைக்கலத்தார் சொன்ன நகைச்சுவையைக் கேட்டு நாடே சிரிச்சுதுங்கோ. மனுசன் ஏதாவது புதுசா சொல்லியிருந்தால் பரவாயில்லையுங்கோ. போயும் போயும் தமிழ் மக்களுக்கு அடுத்த வருடத்துக்குள் தீர்வு வழங்கப்படா விட்டால் சாகும்வரை உண்ணா விரதமிருந்து தன்னுடைய உயிரையே விடப்போறாராமுங்கோ.

உப்பிடியொரு பகிடியைக் கேட்டு யாராலையுங்கோ சிரிக்காமல் இருக்கமுடியும். இவரெல்லாம் வாழவேணுமெண்டு யாருங்கோ அழுதது. தமிழ் மக்களின்ர போராட்ட வரலாறிலை எத்தனைபேர் உண்ணாவிரத மிருந்தவை, எத்தனைபேர் உயிரைத் தியாகம் செய்தவை, எத்தனைபேர் தங்களுடைய உணர்வுகளை, உடல் உறுப்புகளை, உறவுகளை இழந்தவை அதுகளெல்லாமும்கூட ஒண்டுக்கும் பிரயோசனமில்லாமல் போயிருக்குது.

இவர் படம் முடிஞ்சு சனம் போனப்பிறகு யாரோ குடுத்த கயிறை விழுங்கிக்கொண்டு உண்ணாவிரதமிருக்கப் போறன், உயிரை விடப்போறன் எண்டு கப்சா விடுறாருங்கோ.

உவர் உப்பிடிச் சொன்ன அடுத்த வாரமே தேசிய பத்திரிகை ஒன்று ஒரு கார்ட்டூன் பிரசுரிச்சதுங்கோ அதில, 'அரசாங்கத் தகவல் அமைச்சர் ஹெகலிய எண்டவரையும் போட்டு மேடை ஒண்டு போட்ட மாதிரிக் காட்டி, அந்த அமைச்சர் நம்முடைய அடைக்கலத்தாரை மேடையை நோக்கி அழைக்கிறாராம். வாங்கோ உண்ணாவிரதமிருக்கிறதுக்கு மேடை ரெடி எண்ட மாதிரி அந்தக் கார்ட்டூன் இருந்ததுங்கோ. அதில இருந்து என்ன தெரியுதுங்கோ, அடைக்கலத்தார் அடுத்த வருஷம் எண்டு சொன்னதை இந்த வருஷமே துவங்கினாலும் இவர் உண்ணாவிரதம் இருந்து மண்டையைப் போடுற நிலைமைதானுங்கோ நாட்டு நிலைமை.

அடைக்கலத்தை நமக்குத் தெரியும் எண்டவகையில ஒண்டை மட்டும் சொல்ல வேணுமுங்கோ, தம்பி நீர் பார்ளிமெண்டில பெட்டிப் பாம்பாக இருந்ததாலை உம்மை பரவாயில்லை எண்டு பார்த்தவையளுக்கு, நீர் வாயைத் திறந்து மரியாதையைக் கெடுத்துப் போடாதையும் ராசா. பாராளுமன்றத்திலை போய் ஊமையாகவே இருந்திட்டால் வன்னி மக்கள் கோபப்படத்தான் செய்வினம் ராசா, அதுக்காக உண்ணாவிரதம், உயிரை விடுறன் எண்டெல்லாம் ஓவராகப் பேசி சிரிப்புப் பொலிஸ் மாதிரி நீரும் சிரிப்பு எம்.பியாகிடக் கூடாது ராசா.

உதெல்லாம் வேலைக்கு ஆகாது எண்டது தெரிஞ்சு கொண்டும் கொஞ்சமும் கூச்சமில்லாமல் உப்பிடிச் சொல்லிறீர் எண்டால் தமிழ் மக்களை சுரணை இல்லாத சோன கிரிகள் எண்டு நீர் ஒரு முடிவே செய்து போட்டீர் போலை.

சரிவிடு, ஊருக்குள்ள இருக்கிறவனெல்லாமே அப்புடித்தானே நினைச்சுக் கொண்டு திரியிறான். நான் என்ன சொல்லுறன் எண்டால் அப்பு, ஏதோ கூட இருந்த பெடியளையும், தலைவனையும் சுட்டவனின்ர காலில சரணாகதி அடைஞ்சு வாங்கின வரத்தான் உந்த எம்.பிப் பதவியும், உம்முடைய உயிர்ப்பிச்சையும் உந்த ரெண்டையும் பாதுகாத்தமா?, அதின்ர கவரிலை கறுப்பாவும், வெள்ளையாவும் பிசினஸ் பண்ணினமா?, தமிழ் மக்களின்ர தலையில மிளகாய் அரைச்சமா? அதே தமிழ் மக்களின்ர நெத்தியில காலத்துக்குக் காலம் பெரிசா ஒரு நாமத்தைப் போட்டோமா? அதோடை போதுமெண்டு கடைசிக் காலம்வரை இருந்திட்டு போறதுதான் ராசா புத்திசாலித்தனம்.

அதை விட்டுப்போட்டு யாராச்சும் வந்து அண்ண அப்புடிச் செய்யுங்கோ சைன் பண்ணலாம், அண்ண இப்புடிச் செய்யுங்கோ சைன் பண்ணலாம் எண்டு சொல்லுறதுகளை கேட்டு கண்டபடி அறிக்கை விடாதையும் ராசா காலம் கலி காலமாகக் கிடக்குது.

பிறகு ஊருக்கு ஒரு உண்ணாவிரத மேடை அமைச்சுப்போட்டு வாங்கோ, வாங்கோ உண்ணா விரதமிருந்து உயிரை விடுங்கோ எண்டு கூப்பிடப்போறாங்கள் ராசா.

எண்டபடியாலைதான் சொல்லுறன் கூட இருக்கிறவனோடையும் கொஞ்சம் கவனமாக இருந்து கொள்ளும் புரியுதோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# அச்சுக் கலையின் தந்தை




இனி அச்சடிக்க வேண்டியதுதான் பாக்கி. தன் உழைப்பின் பலனைச் சரிபார்க்க ஒரு நாள் குறிப்பிட்டார் கட்டன் பர்க். எஞ்சியிருந்த இரு கூட்டாளிகளும் அதைக்காண வந்திருந்தார்கள். மரச் சட்டத்தில் எழுத்துக்களை அமுக்கி, அதைப் பெஞ்சில் வைத்தார் கட்டன்பர்க். ஒரு பெரிய பக்கத்தில் இரண்டு பக்கமாக எழுத்துக்களை மசிகொண்டு பூசினார். பெஞ்ச் இரு பக்கங்களுக்கு இடையே நகர்த்தப்பட்டது. ஈரமாக்கப்பட்ட காகிதம் அதன்மீது மூடப்பட்டது. கைபிடியைக் கவனமாக கழற்றி. பலகை கீழே இறங்கியது. எழுத்துக்களின் மீது பதிந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டன் பர்க் தம் உதவியாளரிடம் மகிழ்ச்சித் துடிப்போடு கூறினார். "கைபிடியைச் சுற்றிப் பலகையைத் தூக்கு. அச்சாகியுள்ள புத்தகத்துப் பக்கத்தைக் காணவேண்டும்."

ஸ்குரூ சுழன்றது. பலகை உயர்ந்தது. மூன்று தலைகள் ஆவலோடு குனிந்தன. காகிதத்தை எடுத்துப் பார்த்தபோது எத்தனை ஏமாற்றம். மூவரும் மௌனமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். காகிதத்தில் பதிந்துள்ள எழுத்துக்களில் ஒன்றைக் கூடப் படிக்க முடியவில்லை! மங்கலாக கலைந்து மை அப்பிக் கிடந்தது. நன்றாகத் துடைத்துவிட்டு மறுபடியும் மைபூசி. புதிய காகிதத்தை வைத்து அழுத்திப் பதித்தார்கள். இப்படிப்பல தடவை.

ஆனால் ஒரு தடவையும் எழுத்துக்கள் காகிதத்தில் உருப்படியாகப் பதிவாகவில்லை. கூட்டாளிகள் இருவருக்கும் எப்படியிருக்கும்? ஆத்தரம். கோபம். ஏமாற்றம். இனி இந்த உதவாக்கரை காரியத்துக்கு தாங்கள் பணம் கொடுத்துக் கொண்டிருக்க முடியாதென்று கூறினார்கள்.

பணம் கொடுத்தவர்கள் பலன் இல்லை என்றதும் ஆத்திரப்பட்டார்கள். ஆனால் உழைப்பாளியான கட்டன்பர்க். "ஏன் இப்படியாயிற்று என்று மை மெழுகிய காகிதத்தைப் பார்த்துக்கொண்டே மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(06.12.2012 தொடக்கம் 12.12.2012 வரை)

## மேடம்

பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த பணஉதவிகள் உறவினர்களால் கிடைக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தீர்த்த யாத்திரைகளுக்காக நீண்டதூரப் பிரயாணங்களை மேற்கொள்வீர்கள். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். நீண்டகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்ளுவீர்கள். யாத்திரையில் கவனமுடன் பயணம் செய்யவும்.

## இடபம்

ஆடம்பர அலங்கார பொருள் வியாபாரிகள், இரும்பு இயந்திரம் எண்ணெய் சம்பந்தமான வியாபாரிகள், பலசரக்கு தொழில் செய்வோர்கள், பழைய இரும்பு பொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்களின் வியாபாரிகள், அலுவலகப் பணி உதவியாளரகள். மிசினரி சம்பந்தமான உதிரி பாகங்களை ஏற்றுமதி இறக்குதி செய்வோர்கள் போன்ற எரிபொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் மிகவும் ஆதாயம் அடைவார்கள். தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பழகுதல் நல்லதாகும். தீராத நாட்பட்ட நோய்களுக்கு விடை காணுவீர்கள். வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண் - காதுகளில் கவனமுடன் இருக்கவும்.

## மிதுனம்

நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரக்கூடிய காலமாகும். அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். விபரீத எண்ணங்களை விட்டுக் காரியத்தைக் கவனிக்கவும். வேலை இல்லாதவர்களுக்கு வெகுநாட்களாக எதிர்பார்த்து இருந்த புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் காலமாகும். உடம்பில் தோல் மற்றும் இரத்த சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. காதலர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது.

## கடகம்

பொருளாதாரத்தில் இது நாள் வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது. பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நல்ல சூழ்நிலைகள் காணப்படும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் காரணமற்ற பிரச்சினைகள் வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுகள் கிடைக்கும். சூதாட்டம் போன்ற காரியங்களில் தலையிட்டு பொருள் இழப்பு ஏற்பட இருப்பதால் சூதாட்டங்களைத் தவிர்த்தல் நல்லதாகும்.

## சிங்கம்

வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச் செலவுகள் வந்துசேரும். பூர்வீக இடங்களை விட்டு மாறிச் செல்லத்திட்டம் போடுவீர்கள். நண்பர்களால் வீண் விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும். வராத கடன் கொடுத்துள்ள பணம் எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் நல்லது. உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்து போகலாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமூகமான உறவுகள் ஏற்படும். புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளை சற்றுக்கால தாமதமாக தொடங்குவது நல்லது.

## கன்னி

தந்தை, மகன் உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். பல காலமாகத் தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். நண்பர்களால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். காதல் சம்பந்தமான விஷயங்களில் பெண்களால் அவப் பெயர்கள் வரக் கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது. குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உடல்நிலையில் கண், காதுகளில் மிகவும் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப்போன கணவன், மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது.

## துலாம்

சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக் கவலை அடையாதீர்கள். முன்கோபத்தை தவிர்த்து அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. குலதெய்வ வழிபாடு செய்து வருதலால் கிரக தோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதரவு இல்லை. பண விசயங்களுக்கான நீண்ட தூரப் பயணங்களைச் சற்று தள்ளிப் போடுதல் நல்லது. குலதெய்வ ஆலயங்களைத் திருத்தி கட்டப் போட்ட திட்டங்களில் சிறிய தடைகளின் பேரில் வெற்றி அடைவீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்து சேருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

## விருச்சிகம்

பொதுநலக் காரியங்களுக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நற்பெயர், புகழ் எடுப்பீர்கள். சேர் மார்க்கெட் மற்றும் தங்கம் வெள்ளி போன்ற நகை வியாபாரிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது நல்லது. குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர் பார்க்கலாம். தந்தை - மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். உடம்பில் வாயு உஷ்ணம் சுரம் மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்து போகும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. கொடுக்க வேண்டிய பழைய கடன்களைக் கொடுத்துப் புதிய கடன்களை வாங்கத் திட்டம் போடுவீர்கள்.

## தனுசு

நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லை தர வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. யாத்திரையின் போது புதிய பெரிய மனிதர்கள் சந்திப்பு உண்டாகி அவர்களால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். மூத்த சகோதரர்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். உத்தியோகத் துறையினருக்கு பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் வரக்கூடும். பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். குலதெய்வ வழிபாட்டிற்காக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும்.

## மகரம்

சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். வீட்டைத் திருத்திக் கட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் திட்டம் போடுவீர்கள். உற்றார் உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்து சேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர் பார்த்த முடிவுகள் கிடைக்கச் சற்று கால தாமதம் ஆகலாம். வீடு, நிலம் வாங்குவது போன்ற முயற்சிகளில் அரசு சம்பந்தமாக எதிர்பார்த்து வந்த உதவித் தொகைகள் கிடைக்கும்.

## கும்பம்

உடல்நிலையில் இருந்துவந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் இல்லை. பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று. புதிய வீடுகளை வாங்கப் போட்ட திட்டங்களுக்காக வங்கிகளில் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் கிடைக்கக் கூடிய காலமாகும். நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். உறவினர்களின் வரவால் பொருள் வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும்.

## மீனம்

பிள்ளைகளுக்கு எதிர்பார்த்து வந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கணவன், மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்துபோகும். நீண்ட நாட்களாக வராத பணம் திரும்பக் கைவந்து சேரக் கூடிய காலமாகும். உறவினர்களால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். மற்றவர்களை நம்பிப் பணம் பொருள் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். வெகுகாலமாக நினைத்துக்கொண்டு இருந்த கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தொடங்கினால் மிகவும் நல்ல பலன்கள் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

